# நல்லைக்குமரன் மலர்

இதழ்-29




யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற

சைவசமய விவகாரக்குழு

2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# நல்லைக்குமரன் மலர் - 29

## 2021

பதிப்பு
மலர்க்குழு

**சைவசமய விவகாரக் குழு**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்**

11091(P)
PL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு

## உறுப்பினர்கள் - 2021

| | | |
|---|---|---|
| போசகர் | : | கௌரவ விஸ்வலிங்கம் மணிவண்ணன்<br>முதல்வர், யாழ்ப்பாண மாநகர சபை |
| தலைவர் | : | திரு இ.த.ஜெயசீலன்<br>ஆணையாளர், யாழ்ப்பாண மாநகர சபை |
| செயலாளர் | : | திரு பு. ஆறுமுகதாசன்<br>பொது சுகாதாரப் பரிசோதகர், யாழ். மாநகர சபை. |
| பொருளாளர் | : | செல்வி பொ. புஸ்பலதா<br>கருவியறைப் பாதுகாவலர், யா.மா.சபை |
| நிர்வாகசபை உறுப்பினர்கள் | : | திரு.ந.பிரபாகரன்<br>பிரதி ஆணையாளர், யா.மா.சபை |
| | | திரு அ.சீராளன்<br>செயலாளர், யா.மா.சபை |
| | | திருமதி ம.கஜேந்தினி<br>நிர்வாக உத்தியோகத்தர், யா.மா.சபை |
| | | திரு ச.சற்குணமூர்த்தி<br>வருமான மேற்பார்வையாளர், யா.மா.சபை |
| | | திரு சோ.கணேசநாதன்<br>மேற்பார்வையாளர், யா.மா.சபை |
| | | திரு க. கேதீஸ்வரன்<br>நீர்வேலைப் பகுதி, யா.மா.சபை |
| | | திருமதி சு.சதாசிவமூர்த்தி<br>பிரதம நூலகர், யா.மா.சபை |
| | | திருமதி தி.சக்தி<br>அபிவிருத்தி உத்தியோகத்தர், யா.மா.சபை |
| | | திரு.மா.பத்மநாதன்<br>பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர், யா.மா.சபை |
| | | திரு.செ.புரட்சிதாசன்<br>சிரேஷ்ட சுகாதார மேற்பார்வையாளர், யா.மா.சபை |
| | | திரு.வா.கேதீஸ்வரன்<br>மேற்பார்வையாளர், மின்சாரப் பகுதி, யா.மா.சபை |
| பதிப்பு | : | மலர்க் குழு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சமர்ப்பணம்

ஈழத்தமிழ் மக்களின் தனிப்பெரும் கடவுளாக நல்லைப்பதியில் வீற்றிருந்து எமையெல்லாம் ஆளும் நல்லைக்கந்தப் பெருமானுக்கு சமர்ப்பிக்கப்படும் 29 ஆவது மலர் இது.

29 ஆண்டுகள் தொடர்ச்சியாக நல்லைக்குமரன் மலர் வெளிவருகிறதெனில் அதற்கு நல்லூர் கந்தவேற் பெருமானின் பெருங் கருணையே மூலகாரணமாகும்.

ஈழத்தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வந்த போதெல்லாம் நல்லூரில் வீற்றிருக்கும் ஆறுமுகப் பெருமானைத் தஞ்சமெனக் கொண்டு தமத துன்ப துயரங்களைக் கடந்து தங்களின் வாழ்வியலைச் செழுமை குன்றாமல் நகர்த்தி வந்தனர்.

இவ்வருடமும் உலகையே உலுக்கும் கொடியநோயின் தாக்கத்தில் எமது நாடும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இம்முறை அடியார்களின் முழுமையாக பங்குபற்றுதலின்றி நல்லூர் மகோற்சவம் நடைபெறுகிறது. 1993ம் அண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் மாநகர சபையினது சைவசமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலரின் 29வது மலர் தற்போதைய இக்கட்டான சூழ்நிலையிலும் வெளியிடப்படுகிறது.

காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற மாற்றங்களும் மாறுதல்களும் சிக்கல்களும் தொடர்ந்து மேலும் சிக்கலாகிக் கொண்டே செல்கின்றன. இம்முறை வந்துள்ள சிக்கல் மிகவும் வித்தியாசமானதும் கொடுமையானதுமாகும். அன்றாடம் நோய்த்தொற்று, நோய் இறப்பு எண்ணிக்கை எகிறிச் செல்லும் போது நாடே முழுமையான முடக்கத்தை நோக்கி செல்லுகின்றது. கண்ணுக்குத் தெரியாத கிருமியுடனான யுத்தம் மிக மோசமான நிலையில் இன்று வந்து நிற்கிறது. இந்நிலையிலும் யாழ் மாநகரசபையின் சைவசமய விவகார குழுவானது நல்லைக்குமரன் மலர் வெளியீடு தடைப்பட்டு விடக்கூடாது என்ற அடிப்படையில் மட்டுப்படுத்திய அளவில் சுகாதார நடைமுறையைப் பின்பற்றியேனும் வெளியீடு செய்தே ஆக வேண்டும் என்று இம்முறையும் 29வது மலரை வெளியிடப்படுகிறது.

ஓம் சரவணபவ

**சைவசமய விவகாரக்குழு,**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்.**

**மலர்க்குழு**
**நல்லைக்குமரன் மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

**சமர்ப்பணம்**

**ஆசிச்செய்தி**

**வாழ்த்துச் செய்தி**

**அவனருள் வழி செய்யும்** 01-02

த.ஜெயசீலன்

**நல்லூரில் குடியமர்ந்த வேல் முருகன்** 03

கவிஞர் சின்னப்பு தனபாலசிங்கம்

**நல்லையூரான் பாதம் நாடிடு மனமே** 04

தங்கராசா தமயந்தி

**வந்தருளைத் தந்திடுவான் வடிவேலன்!** 05

கலாபூஷணம் கீழ்கரவை கி.குலசேகரன்

**நல்லூரின் நாயகனே!** 06-07

கலாநிதி இராசையா ஸ்ரீதரன்

**நல்லை நாயகனை நாடிடுவோம்** 08

சுகிர் நாகேந்திரா

**நல்லையம்பதியின் நாயகன்** 09

கலைஞானசுடர் ஸ்ரீமதி சுபாஷினி

**இந்தாண்டு வரம் மறுத்தாய் ஏன்?** 10

S.பத்மகுமார்

**யாழ்ப்பாணத்து முருகத்திருத்தலங்கள் மீது பாடப்பெற்ற சில பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள்** 13-20

சண்முகலிங்கம் சஜீலன்

**பிரமக் குயவன் வனைவதற்கு ஏது** 21-26

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாதாரண மக்களுக்கான அரங்கத் தேவையும்**
**சூரன்போர் சடங்கும்** 27-33
நிருஜா இராசரத்தினம்

**இந்து சமயத்தில் மனித உரிமைகள்** 34-38
பா.பிரசாந்தனன்

**தேவார திருவாசகங்களினூடாக தெளிவு படுத்தப்படும்**
**சைவசித்தாந்த முப்பொருள் கோட்பாடு** 39-41
சைவப்புலவர் சுவாமிநாபிள்ளை தேவமனோகரன்

**இந்து மெய்யியலில் அளவையியல் அறிமுகம்** 42-47
ஆறுமுகம் சசிநாத்

**பஞ்ச ஈஸ்வரங்கள் பற்றி ஒரு பார்வை** 48-53
ஆரணி விஜயகுமார்

**அலகிலா ஆடல்புரியும் அம்பலத்தரசனின் ஆலயம்**
**- தில்லைச் சிற்றம்பலம்** 54-63
தி..மனோஷன்

**திருமந்திரமும் திருக்குறளும்** 64-66
பண்டிதர் ஆ.வடிவேலு


**திருமந்திரம் சொல்லும் வாழ்வியல்** 67-70
தேசிங்கராஜன் சாய்கித்தியன்

**சாம்பவீ தீட்சையினை நல்கும் மஹோத்ஸவம் பற்றி ஒரு நோக்கு** 71-76
பிரம்மஸ்ரீ மகாதேவஐயர் ஜெயராமசர்மா

**2021இல் யாழ் விருதினைப் பெறும் வாழ்வக நிறுவனத்தின்**
**தலைவர் அ.இரவீந்திரன் (ச.நீ) அவர்கள்** 77-80
பு.ஆறுமுகதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நல்லைக்குமரன் மலர்

## 2021

## ஆசி, வாழ்த்துச் செய்திகள்


- நல்லை ஆதீன முதல்வர்

  ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்

- இராமகிருஷ்ண மிஷன்

  சுவாமி சர்வரூபானந்த

- வீணாகான குருபீடாதிபதி

  வித்யாஸாகரம் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்

- ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

  செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்

- அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர்

  திரு.மா.தவயோகராஜா

- யாழ் மாநகர முதல்வர்

  கௌரவ விஸ்வலிங்கம் மணிவண்ணன்

- யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்

  திரு.க.மகேசன்

- யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர்

  பேராசிரியர் சி.சிறிசற்குணராசா

- யாழ் மாநகர ஆணையாளர்

  திரு.இ.த.ஜெயசீலன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**தொலைபேசி:** 2222870

**நல்லூர், யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

## நல்லை ஆதீன முதல்வரின்
## அருளாசிச்செய்தி

சரித்திர பிரசித்தி பெற்ற நல்லைக் கந்தப் பெருமானின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு யாழ் மாநகரசபை வெளியிடும் நல்லைக்குமரன் மலருக்கு ஆசி வழங்குவதில் பேரானந்தம் அடைகிறோம். நல்லூர், தமிழ் வேந்தர் காலத்து இராஜதானியாக விளங்கியது. நல்லூர் கந்தனின் பெருந் திருவிழா சைவ மக்களின் வரலாற்று விழா. நல்லூர் திருவிழாவை முன்னிட்டு யாழ் மாநகர சபை செய்யும் பணிகள் மெச்சத்தக்கது. ஆலயச் சூழலை மிகப்புனிதமாக பேணிவரும் மாநகர சபையின் நற்பணிகளை வாழ்த்துகிறோம்.

யாழ் மாநகரசபை சைவ சமய விவகாரக்குழு கடந்த கால் நூற்றாண்டுக ளாக ஆற்றிவரும் பணிகள் போற்றுதலுக்குரியன. குறிப்பாக "நல்லைக்குமரன் மலர்" என்ற பெயரில் அரிய தகவல்கள் அடங்கிய நூலை ஆண்டுதோறும் வெளியிட்டு வருவது பெருமைக்குரியது. பல வரலாற்றுத் தகவல்களையும் சமயத் தத்துவங் களையும் அழகாக அச்சிட்டு வெளியிடும் பணி என்றும் நன்றிக்குரியது.

யாழ் மாநகரசபை முதல்வர், ஆணையாளர் மற்றும் சைவசமய விவகாரக் குழு உறுப்பினர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் எமது நல்லாசிகளைத் தெரிவித்து இந்த ஆண்டுக்கான நல்லைக்குமரன் மலர் சிறக்க வாழ்த்தி அமைகிறோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

**நல்லை ஆதீனம்,**
**நல்லூர்.**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய ஸ்வாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**திருஞானசம்பந்தர் ஆதீனம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

*Phone - 2588253 & 5013805*
*Fax -2361438*
*Email - rkmcey@gmail.com*

# இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின்

## ஆசிச்செய்தி

நல்லைநகர் என்றதும் ஞாபகம் வருவது கந்தசுவாமி கோவிலும் ஆறுமுக நாவலரும் தான். ஈழத்து இந்துக்கள் பலர் வெளியூர்களில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாலும் நல்லூர் கொடியேற்றம் என்று தெரிந்தவுடன் தங்கள் வேலையிலிருந்து விடுமுறை பெற்றுக் கொண்டு நல்லூர் வந்து விடுவது தொன்று தொட்டு உள்ள வழமையாகும். அந்த அளவிற்கு நமது வாழ்வில் அத்தியாவசிய மான ஒரு நிகழ்ச்சியாக அமைந்தது நல்லூர் திருவிழா.

விழாக்காலத்தில் விரதம் இருப்பவர்கள் பலர் தங்கள் வேண்டுகோள்களை நிறைவேற்றுவதற்காக அங்கப்ரதக்ஷிணம் செய்து வழிபடுபவர்கள் பலர். இவ்வாறாக நமது வாழ்வில் பின்னிப் பிணைந்து நமது வாழ்க்கையை ஆன்மீகமாக மாற்றும் கடவுள் நல்லைக்குமரன் என்று கூறலாம்.

ஆதி சங்கரர் ஷண்மதம் என்று அமைத்துக் கொடுத்த ஆறு மதங்களில் கௌமாரம் என்று சொல்லப்படும் குமார வழிபாடு, அதாவது முருக வழிபாடு ஒன்றாகும். இந்த ஆறு மதங்களுள் முருக வழிபாடு தமிழ் மக்களிடையே மிகவும் பிரபலமானது இன்னும் சொல்லப்போனால் சைவத்துக்கும் முருகவழிபாட்டுக்கும் இடையில் வேறுபாடு இல்லாமல் மிகுந்த ஒற்றுமையுடன் இந்த வழிபாடு பின்பற்றப்படுகின்றது.

வழமைபோல், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவானது நல்லைக்குமரன் என்ற மலரை வெளியிடுகிறார்கள். 1993 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த மலர் வெளியீடு 29 ஆண்டுகளாக சிறப்பாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மலரில் வெளியீடு 29 ஆண்டுகளாக சிறப்பாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது மலரில் பல ஆன்மீகக் கட்டுரைகளும் சிறப்பு அம்சங்களும் இடம்பெறுகின்றன. மலர் வெளியீடு செவ்வனே நிகழ நல்லைக் குமரன் அருள்பாலிப்பாராக என்று பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்
*சுவாமி அக்ஷராத்மானந்த*
**சுவாமி அக்ஷராத்மானந்த**
**தலைவர்**

**இராமகிருஷ்ண மிஷன்**
**கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வீணாகான குருபீடம்
# VEENAGANA GURUPEEDAM

இந்துகலாசாரவேத, ஆகமசாஸ்திரசடங்குசம்பிரதாயஆலோசனைக்கானதும்,
சமயசமூகநற்பணிகளுக்குமானகுருமார்சந்நிதானம்

வண.சந்நிதாச்சாரியார்,
சிவஸ்ரீசபா.வாசுதேவக்குருக்கள்,
அமைப்பாளர்,
குருமார்சந்நிதானம்,
சித்தன்கேணி,
யாழ்ப்பாணம்.

**Rev.Sannithachariyar**
**Sivasri.Saba.Vasudevakkurukkal**
Organizer,
VeenakanaGurupeedam,
GurumarSannithanam,
Sithankerney,Jaf fna.

# வீணாகான குருபீடாதிபதியின்
# ஆசிச்செய்தி

காலம் தவறாத வெளியீடுகளால் சைவத்தமிழ் உலகில் தனக்கென ஓர் இடம் பிடித்துள்ள நல்லைக்குமரன் மலரினை வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றேன். ஆலய மகோற்சவங்கள் நடைபெறுகின்றமை நாட்டிற்கு நன்மை கிடைப்பதற்காகும். ஆனால் நல்லைக் கந்தனின் மகோற்சவம் உலக சேமத்திற்காகும். உலகெங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழரின் உள்ளத்து உறைபவன் நல்லூரான் ஆவான். அதனால் தொழுவார் துயர் நீக்கும் கந்தனின் மகோற்சவம் உலக ஸேமத்திற்காகும். நல்லூரான் தரிசனம் ஞானத் திருவருள் சேர்ப்பதாகும். நல்லைக்குமரன் மலர் மலர்வதும் அறிவுத் திருவருள் கிடைப்பதாகும்.

ஒரு மனிதனின் வயது அதிகரிக்க அதிகரிக்க அவனுக்கு அறிவு, அனுபவம் ஆற்றல்களும் பெருகியவண்ணம் அமைந்திடும். இதனை போன்று நல்லைக்குமரன் மலரின் வளர்ச்சியும் அபரிமிதமாக அமைந்துள்ளது. திருமுறைகளும், பாசுரங்களும் மற்றும் இலக்கியங்களும் அவை எழுந்த காலத்தின் சூழலை கண்ணாடிபோல் காட்டி நிற்பது போன்று, நல்லைக் குமரன் மலரும் ஈழத்தின் சைவத்தமிழ் வரலாற்று நூலாக வெளி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நல்லைக் குமரன் மலர் உலகின் பல பாகங்களிலும் வாழும் ஈழத் தமிழர்கள் வாசித்து பயனுறும் வகையில் முதலாவது மலர் முதலாக அனைத்து மலர்களும் இணையத்தளத்தில் PDF வடிவமாக வெளிவர வேண்டும் என்பது அனைவரதும் பெருவிருப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமும் கஷ்டமும் கூடியுள்ள வேளைகளில் நல்லதை செய்ய நினைத்தாலும் நிறைவேற்ற முடியாது. ஆனால் கெட்டது நினைக்காமலேயே நடந்தேறிவிடும். இவ்வாறு காலத்தின் கோலமாக இருக்கும் பொழுது கொரோனா தொற்று இடர் நிறைந்த இவ்வேளையிலும் மலரினை வெளியிட வேண்டும் என எண்ணி வெளிவருவது தடைப்படாமல் பணியாற்றுவது பாராட்டத்தக்கவிடய மாகும். மகோற்சவ காலத்தினை முன்னிட்டு சமயப்பணிகளை ஆற்றும் யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவை வாழ்த்தி ஆசிர்வதிக்கின் றேன்.

**குரு முதல்வர்**
**வீணாகானகுருபீடம்**
**(ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் திருக்கோவில், சண்டிலிப்பாய்)**

**சந்நிதாச்சாரியார்**
**சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்


தெல்லிப்பழை, இலங்கை

Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.

T.P No : 021 - 3213151

E.Mail:- Thurkaiammantemple@gmail.com

Face Book:- tellidurga@gmail.com

திகதி: 02/06/2018

Fax:- 021 2241909

தலைவர்:

செஞ்சொற் செல்வர்

கலாநிதி. ஆறு திருமுருகன்

Dr. ARUTHIRUMURUGAN

E.Mail:- Aruthirumurugan@gmail.com Hot Line:- 0776258511


## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவரின்
## ஆசிச் செய்தி

யாழ்ப்பாண மாநகரின் தலைமைத்துவமாக விளங்குகின்ற யாழ் மாநகரசபையின் சமய சமூகப்பணிகளை முதற்கண் வாழ்த்துகிறேன். யாழ் மாநகரசபையின் சைவசமய விவகாரக்குழு ஆற்றி வரும் வரலாற்றுப் பணி குறித்து சைவ மக்கள் சார்பில் நான் வாழ்த்த கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக நல்லைக்குமரன் மலர் சைவமக்களின் ஆவண மலராக ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது. எந்தச் சூழ்நிலையிலும் நல்லைக்குமரன் மலர் தடைப்படாது வெளிவருவது பெருமைக்குரிய விடயமாகும்.

நல்லைக்குமரன் மலரின் வருகைக்காக பலர் காத்திருப்பார்கள். மிகப் பெறுமதியான ஆக்கங்களைத் தாங்கி இவ் அரிய மலர் வெளிவருவது வழக்கம். இம்மலரின் வருகைக்காக அயராது உழைக்கும் சைவசமய விவகாரக் குழுவினரின் முயற்சி சாதாரணமானது அல்ல. இம்மலர் வெளியீட்டினை ஆரம்பித்து வைத்தவர்கள் உயர்ந்த குறிக்கோளோடு ஆரம்பித்தார்கள். அவை இன்று வரை வீண்போகவில்லை. எவர் பதவிக்கு வந்தாலும் யாழ் மாநகரசபை நல்லைக் கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு சகல கடமைகளையும் நன்முறையில் நிறைவேற்றி வருவது நாம் செய்த புண்ணியமே. மாநகர சபையின் நிறைந்த பணிகளில் ஒன்றாக நன்முறையில் திட்டமிட்டு நல்லைக் குமரன் மலர் உரிய காலத்தில் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்வாண்டும் இவ்வரிய மலர் வெளியிடுவதற்கு அயராத உழைக்கும் சைவசமய விவகாரக் குழுவினருக்கும், மாநகர முதல்வர், ஆணையாளர், சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எனது இதய பூர்வமான வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சைவசமய விவகாரக்குழு யாழ் மாநகரசபைக்குட்பட்டுள்ள சைவசமய புராதன இடங்களை நல்ல முறையில் பாதுகாப்பதற்கு அக்கறையுடன் செயற்பட வேண்டும் என அன்பாக வேண்டிக் கொள்கின்றேன்.

**தலைவர் - சிவபூமி அறக்கட்டளை**
**உபதலைவர்**
**அகில இலங்கை இந்து மாமன்றம்**

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்துமாமன்றம்

(இலங்கை இந்துமன்றஅமைப்புகளினதும் ஆலய நம்பிக்கைபொறுப்புகளினதும் ஒன்றியம்)

# ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)


தலைவர்
President:
மாணிக்கம் தவயோகராஜா
*Manikkam Thavayogarajah*
*Phone: 2695120 (Res)*
*Mobile: 0777786686*
*mthavam@gmail.com*

பொதுச் செயலாளர்
Hony. General Secretary:
வேலுப்பிள்ளை கந்தசாமி
*Velupillai Kandasamy*
*Phone: 2586620 (Res)*
*Mobile: 071-5349150*
*vkandasami@gmail.com*

பொருளாளர்
Hony. Treasurer:
அ.கயிலாசபிள்ளை
*Abirami Kailasapillai*
*Phone: 2575566 (Res)*
*Fax : 2575472*
*hariomak@gmail.com*


## அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

வள்ளி தெய்வானை தேவியர் சமேதராக எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் நல்லூர்க் கந்தனின் வருடாந்தப் பெருந்திருவிழாவினை முன்னிட்டு, யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினரால் வெளியிட்டு வைக்கப்படுகின்ற இருபத்தொன்பதாவது “நல்லைக்குமரன்“ மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தற்போது முழு உலகுமே எதிர்கொண்டுள்ள கொரோனா நோய்த் தொற்றினால், பொருளாதார வீழ்ச்சி, பயணத் தடைகள் மற்றும் வாழ்வாதார இழப்பு என பலவிதங்களிலும் பாதிக்கப்பட்டு மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கூடிய விரைவில் நாம் அனைவரும் நலம்பெற்று சகல வளங்களுடன் நல்வாழ்வு வாழக்கூடிய நிலை உருவாக கடவுளின் அருள்வேண்டிப் பிரார்த்திப்போம்.

சைவசமய விவகாரக்குழுவினர் யாழ்ப்பாண மாநகரசபையின் அனுசரணையுடன் மக்களுக்கு தேவையான உதவிகளை வழமைபோல தொடர்ந்து வழங்கி எமது மக்கள் இவ் இடர் நிலையிலிருந்து மீண்டு நலமாக வாழ தனது பணிகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும் எனவும் வாழத்துகின்றேன்.

“நல்லைக் குமரன்” மலர் அனைத்து மக்களின் சமய அறிவினையும், இறைபக்தியையும், ஆன்மீக உணர்வினையும் மேலோங்கச் செய்யும் என்பது எனது திடமான நம்பிக்கை.

இவ் ஆண்டு வெளிவருகின்ற மலர் சிறப்புறவும், அதன் மூலம் தங்கள் குறிக்கோள் நிறைவேறவும் அகில இலங்கை இந்து மாமன்றம் உறுதுணையாக இருக்குமென்பதுடன் மக்கள் யாவரும் நலம்பெற்று வளமுடன் வாழ அருள் வேண்டி சகல சௌபாக்கியங்களும் அருளும் நல்லூர் சண்முகப் பெருமான் பாதக் கமலங்கள் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

**மா. தவயோகராஜா**
**தலைவர்**

**அகில இலங்கை இந்து மாமன்றம்**
**இல 91/1 சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர்மாவத்தை,**
**கொழும்பு 02.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் மாநகர சபை
යාපනය මහ නගර සභාව
JAFFNA MUNICIPAL COUNCIL

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். පේදුරුතුඩුව පාර, යාපනය. Point-Pedro Road, Jaffna.

அலுவலகம் / කාර්යාලය / Office } 021 222 2275
தொலைநகல் / ෆැක්ස් / Fax } 021 222 2334
இணையத்தளம் / වෙබ් අඩවිය / Internet } www.jaffna.mc.gov.lk

# யாழ் மாநகர முதல்வரின் வாழ்த்துச் செய்தி

யாழ் மாநகர சபையின் முதல்வர் என்ற வகையில் இவ் 29 ஆவது நல்லைக்குமரன் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரிதும் உவகையடைகின்றேன்.

ஈழத்திருநாட்டில் அமைந்த முக்கிய திருத்தலமாகவும், யாழ்ப்பாணத்தின் அடையாளங்களுள் ஒன்றாகவும், இனம், மதம், மொழி கடந்து அனைத்து மக்களாலும் தரிசிக்கப்பட்டு வரும் தலமாகவும் விளங்குவது நல்லூர்க் கந்தசுவாமி கோவிலாகும். கந்தனின் மகோற்சவ காலத்தில் நல்லூர் மட்டுமல்லாது, நகரமே விழாக்கோலம் பூண்டிருப்பது கண்கூடு.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திற்கும், யாழ்ப்பாண மாநகராட்சி மன்றிற்கும் உள்ள நீண்ட கால நெருங்கிய தொடர்பின் பலனாக, யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினர், தமிழ்க் கடவுள் எனச் சிறப்பிக்கப்படும் முருகன், கோயில் கொண்டுள்ள நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவத்தை முன்னிட்டு “நல்லைக் குமரன்” என்ற மலரினை கடந்த பல வருடங்களாக வெளியிட்டு வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

யாழ்ப்பாணக் கலாச்சாரம், கந்தபுராணக் கலாசாரம் எனப் போற்றப்படு கின்றது. ஆணவம் மேலோங்கும் போது அதனை ஞானசக்தியான வேலினால் அடக்குவதை விபரிப்பதே கந்தபுராணம். இன்று உலகம் முழுவதுமே துன்பப்பட்டு, இன்பத்தை இழந்து பரிதவிக்கும் வேளையில், அவர்களை நல் வழியில் ஆற்றுப்படுத்தும் முகமாகவும், இம்மண்ணில் இளம் தலைமுறையினர் மத்தியில் ஆன்மீக உணர்வினையும், இறைபக்தியையும் ஏற்படுத்தக் கூடிய வகையிலும் இம்மலர் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய கருத்துக்களைக் கொண்ட எமது சமயத்தின் மேன்மையையும், தொன்மையையும் ஆவணப்படுத்தும் அரும் பெரும் பொக்கிசமாக விளங்கும் இம்மலரானது ஆண்டாண்டு தோறும் நல்லைக் குமரனது மகோற்சவ காலத்தில் மலர்ந்து, சைவம், தமிழ் இரண்டும் வையகம் புகழ் பெற்று வாழ உதவுவதோடு, நல்லைக் கந்தனது புகழைப் பரப்பவும் வேண்டுமென எல்லாம் வல்ல சண்முகப் பெருமானின் பாதங்களைப் பணிந்து வேண்டுகின்றேன்.

அத்துடன், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினர் சைவ சமயப் பிள்ளைகளின் மனங்களில் தெய்வீக உணர்வு, தெய்வீக சிந்தனை ஆகியன ஊற்றெடுக்கவும், சைவ சமயத்தின் ஆழ்ந்த தத்துவங்களை அறிந்து கொள்ளவும் வழிவகுக்கும் வகையில் பல்வேறு போட்டிகளை நடாத்தியும், வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள், சான்றிதழ்களை வழங்கியும் வருகின்றனர். இது தற்போதைய கோவிட்-19 பெருந்தோற்றுக் காரணமாக தடைப்பட்டாலும் இனிவருங் காலங்களில் இப்பணியும் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**மாநகர சபை** **விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**யாழ்ப்பாணம்** **முதல்வர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary
දුරකථනය
தொலைபேசி } 021-222 2235
Telephone

ෆැක්ස්
பக்ஸ் } 021-222 2355
Fax
E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු
பொது தொலைபேசி } 021-222 2233
General Telephone } 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය
எனது எண் } Message from GA
My No.

ඔබේ අංකය
உமது எண் }
Your No.

දිනය
திகதி }
Date

# யாழ்ப்பாண அரசாங்க அதிபரின்
# வாழ்த்துச் செய்தி

எல்லாம் வல்ல கந்தப் பெருமானின் திருவருள் துணைகொண்டு 1993 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக 29 வது மலராக வெளிவரவுள்ள நல்லைக் குமரன் ஆன்மீக வரலாற்றுப் பொக்கிஷ மலருக்கு வாழ்த்து வழங்குவதற்குக் கிடைத்த சந்தர்ப்பம் எனக்கு முத்தியின்பம் கிடைத்தது போலான இரட்டிப்பு மகிழ்ச்சியை என் உள்ளத்துள் விதைத்து நிற்கின்றது.

நல்லூர் இராசதானி என வரலாற்றுப் புகழ்கொண்டு அரசாட்சி கோலோச்சிய மண்ணில் சைவ ஆலயங்களின் அணிவகுப்பும் அதனோடிணைந்த இலக்கியப் புலமையாளர்களின் தோற்றமும் பணிகளும் உலகிற்கு முன்னுதாரணமாய் அமைந்து கோயில் நகரம் என வர்ணிக்கப்படுமளவிற்கு புகழ் பெற்ற நல்லூரில் முருகன் கோயில் கொண்டருளி பக்தர்களை காத்து வருகின்றான். நாலா திசையெங்கும் காவற்கோயில்கள் அமைக்கப்பட்டு நடுவிலே முருகன் அமர்ந்திருந்து மக்களை ஆட்கொண்டு வருகின்றான். கந்தபுராண கலாசாரம் என்று நாவலர் பெருமானால் போற்றப்பட்ட மண்ணின் - பசுவதைக் கெதிராக அதன் கொடுமையினை தாங்க முடியாது எதிர்த்துப் போராடிய மண்ணின் - தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகள், தவத்திரு யோகர் சுவாமிகள் எனப் பல சித்தர்களின் கால் பதித்த மண்ணின் பெருமையினை பறைசாற்றும் பணியினை யாழ்ப்பாணம் மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழு இருபத்தொன்பது வருடங்களாக முன்னெடுத்து வருவது என்பது அசுர சாதனையாகும்.

உண்மையில் இப்பணியானது எத்தனை சோதனைகள், எத்தனை வேதனைகள் கடந்து நல்லைக் கந்தனின் புகழ் பாடுவதனூடாக தொல்லியல், வரலாற்றுப் பாரம்பரியங்கள், சைவ சமயத்தின் தொன்மை போன்ற விடயப் பரப்புகளை ஆய்வுக்குட்படுத்தி விஞ்ஞான பூர்வமான ஆதார தரவுகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலருக்கும் நன்மையளிக்கும் விதத்தில் நல்லைக்குமரன் மலர் இத்தனை வருடங்களாக வெளிவந்திருப்பது யாம் பெற்ற பாக்கியமே ஆகும்.

யோகர் சுவாமிகளின் திருவாக்கியமான "ஒருபொல்லாப்புமில்லை" "எப்பவோ முடிந்த காரியம்" என்ற அருள் மொழிகளின் வழியாக கருமங்கள் யாவும் நடந்தேறி வருவதுதான் உண்மை. நல்லைக்கந்தனின் வருடாந்த உற்சவ காலத்தில் நல்லைக்குமரன் மலர் வெளிவருவதும் சமூகத்தில் சிறந்தவொரு மனிதரை தெரிவு செய்து "யாழ் விருது" வழங்கிக் கௌரவிப்பதும் யாழ்ப்பாண மக்களின் ஆன்மீக விழுமியத்தின் வெளிப்பாடாகக் கொள்ளமுடியும்.

இத்தகை பண்புடை பணியினை மேற்கொண்டு வருகின்ற யாழ்ப்பாணம் சைவசமய விவகாரக்குழுவினரதும் அவர்களுக்கு என்றும் உறுதுணையாய் விளங்கும் யாழ்ப்பாண நகர பிதாவினதும் மாநகர ஆணையாளரதும் அயரா உழைப்பினை நினைந்து மெய்சிலிர்க்கும் அதேவேளை அவர்களை வாழ்த்தி நல்லைக்குமரன் மலர் அழகுற வெளிவந்து வரலாற்றின் உறைவிடமாய் துலங்கும் என்ற நம்பிக்கையோடு எல்லாம் வல்ல முருகப்பெருமானின் திருவருள் அனைவருக்கும் கிடைத்து கொடிய சூரனை அழித்தது போல கொடிய தொற்று நோயாம் கொரோனாவினையும் எம்மையும் உலகையும் விட்டு விரைவில் நீங்கிட முருகனைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

**மாவட்டச் செயலகம்,** **க.மகேசன்**
**யாழ்ப்பாணம்.** **அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

மெய்ப்பொருள் காண்பது அறிவு

*Professor. S. Srisatkunarajah*
*Vice Chancellor*
B.Sc(Hons) Jaffna, PGDE(Merit) OUSL, Ph.D Heriot-Watt,
Professor in Mathematics

எமது இல. / මගේ අංකය / My Number

உமது இல. / ඔබේ අංකය / Your Number

Date :

# யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

எமது பண்பாட்டின் மரபுத் தொடர்ச்சியாக கடந்த இருபத்தைந்து ஆண்டு களுக்கு மேலாக, தொடர்ச்சியாக யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வெளியிடப் படுகின்ற நல்லைக் குமரன் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழர் தம் பண்பாட்டின் அடையாளமாய் உலகளவில் கவனம் கொள்ளும் பெருமை பெற்றது நல்லூர் கந்தசுவாமி ஆலயம். இவ் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ தினங்கள் உலகம் முழுவதும் வாழுகின்ற ஈழத்து இந்துக்கள் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு விதத்தில் முக்கியத்துவம் மிக்கன. பெருந் திருவிழாக் காலம் எனப் போற்றத்தக்கதாக அமையும் ஒரு பொழுதில் வருடந் தவறாமல் “நல்லைக்குமரன் மலர்” வெளிவருவது ஒரு சாதனையாகும். இன்று உலகப் பெருநெருக்கடியினால் ஊர்கூடித் தேர் இழுக்க முடியாது போனாலும், எம்பெரு மானின் திருவருட் கடாட்சத்தினால் மகோற்சவம் இடம் பெறுவது மனத்திருப்தி யைத் தருகிறது. இத்தகு நெருக்கடி நிலைமையிலும், “நல்லைக்குமரன் மலர்” மலர்வது மட்டற்ற மகிழ்ச்சி.

முருக வழிபாடு தனித்துவமிக்கதொன்று. முருகன், தமிழ்க் கடவுள் எனப் போற்றப்படுபவர் : ஞானத்தின் வடிவமாக இருப்பவர். அக்கினியிலிருந்து அவதரித்த தன்மையினால் தூய்மையானவனாகவும், ஞானத்தின் ஊற்றாகவும், சக்தியினதும் – சிவத்தினதும் அம்சங்கள் பொருந்தப் பெற்றதனால் அளவற்ற ஆற்றல் மிக்கவனாகவும் விளங்குபவன் முருகன். அவன் தேவர்களின் சேனாதிபதி. தேவர்கள் என்பது மனதால் நன்மை நினைத்து செயலால் நன்மை விளைவிக்கும் எத்தகையவர்களையும் குறிக்கும். அத்தகைய நல்ல ஆத்மாக்களின் தலைவனாக திகழ்பவன் முருகன். அவன் எளியவர்க்கு எளியவனாகவும் வலியவர்க்கு வலியவனாகவும் வாய்க்கப் பெற்றவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவலோகத்து அதிபதி இந்திரன் மகளை இடப்புறத்திலும் பூலோகத்து வேடுவத் தலைவன் நம்பிராசன் மகளை வலப் புறத்திலும் சக்திகளாக கொண்டு தனது ஆளுகை எல்லையை எளியவர் தொடக்கம் உயர்ந்தோர் வரை விசாலமாக்கிய வித்தகக் கடவுள் முருகப் பெருமான். எங்கள் மண்ணில் அவன் செல்வச் சந்நிதியிலும், நல்லூரிலும் ஆளுகை செய்யும் இயல்பு தனித்துவமானது.

கடவுளர்களுக்குள்ளேயே ஆறுமுகசுவாமி, தகப்பன் சுவாமி, கந்தசுவாமி எனப் பல நாமங்களால் "சுவாமி" என இயல்பாக அழைக்கப்பெறும் உயர் தன்மை யுடையவன் முருகன். இத்தகைய பல் பரிமாணமிக்க முருகப் பெருமானுக்கு சிவபூமியாகிய நமது மண்ணுக்கும் நெருக்கமான உறவுகள் உண்டு.

முருக வழிபாடு என்பது ஈழத்தில் பல நூற்றாண்டுகள் தாண்டிய தனித்து வமிக்கது. ஆறுபடை வீடுகளுக்கு நிகரான வரலாற்றுப் பெருமைமிக்க பல முருகன் ஆலயங்கள் எங்கள் மண்ணில் நிறையவே உண்டு. குறிப்பாகக் கதிர்காமம், அருணகிரிநாதர் உள்ளிட்ட சித்தர்கள் அத்தனை பேரும் தரிசித்த புண்ணியபூமி. மனதை தூய்மையாக்கும் ஞான வேள்வியில் தடையாக இருப்பது காமம். இந்தக் காம உணர்வறுக்கும் அதிர்வுகளைக் கொண்ட கருவூலமாகத் திகழ்வது கதிர்காமம். சித்து நிலையில் முக்தி எனும் உயர்நிலை அடைய காமம் அறுத்தல் அவசியம். அதனையறுத்து முத்தியளிக்கும் பெரும் கடவுளாக கதிர்காமக் கந்தனை அருணகிரியார் பாடுவார்.

ஈழத்துச் சித்தர் மரபின் தனித்துவ மையங்களாக விளங்கும் செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் கூட்டிணைவின் நிலைக்களனாக விளங்குவது நல்லூர் கந்தன் ஆலயம். தேரடியில் தேசிகனைக் கண்டு தெளிவுற்று நல்லூரானை நாளும் நினைந்து பல அருட் செயல்கள் செய்த ஆற்றலாளர் சிவயோகசுவாமிகள்.

தமிழகத்தில், வான்புகழ் மிக்க இராமலிங்க அடிகளார் காஞ்சிபுரம் – கந்தகோட்டம் முருகனை நினைந்து "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும் - உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" எனப் பாடியே தனது ஞான வாழ்வை ஆரம்பித்தவர் வள்ளலார். எனவே சித்தர்களின் கடவுளாகவும், தத்துவங்களின் வடிவமாகவும் இருப்பவன் முருகன். இத்தகைய முருகனை ஈழத்தவர்களாகிய நாம் கொண்டாடும் மரபு தனித்துவமானது. இதனால் தான் யாழ்ப்பாணத்துக் கலாசாரத்தை "கந்தபுராண கலாசாரம்" என அடையாளப் படுத்தினார் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை. எமது யாழ்ப்பாணச் சமூகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அன்றாடம் சந்திக்கும் மனிதர்களில் குறைந்தது பத்துப் பேராவது கந்தனின் திருநாமத்தை உடையவர்களாக இருப்பதை நாம் காணக் கூடியதாக இருக்கும். கந்தசுவாமி, ஆறுமுகம், வடிவேல், திருமுருகன், வேலாயுதம், வேலும்மயிலும், சேனாதிராஜா, சரவணன், சரவணபவன், குமரன், குமரேசன், கார்த்திகேயன், கார்த்திக், செந்தூரன், சேயோன் எனப் பலரது பெயர்கள் முருகனின் நாமத்தைக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

பெண்களின் நாமத்தில் கூட வள்ளி, வள்ளிநாயகி, தெய்வானை, முதலான பெயர்கள் எங்கள் பண்பாட்டுப் புலத்தில் அதிகம் உண்டு. இவ்வாறு முருக வழிபாட்டை முதன்மை வழிபாடாகக் கொண்டவர்கள் ஈழத்து இந்துக்கள் : அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்கள். இத்தகைய பெருமைப் பின்புலமிக்க முருக வழிபாட்டின் முதன்மைக் குறியீடாகத் திகழும் நல்லூர் கந்தப் பெருமானின் மகோற்சவத்தின் அடையாளமாக வருடம்தோறும் "நல்லைக்குமரனை" மலரச் செய்யும் யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவினர் என்றும் பாராட்டுக்கும், நன்றிக்கும் உரியவர்கள் – அவர்களது பணி தடையின்றித் தொடரவேண்டும். அவர்களது காரியங்கள் யாவிலும் கந்தன் முன்னின்று இயக்க வேண்டும் என வாழ்த்தி தற்போது நிலவும் உலகப் பெருநெருக்கடியில் இருந்து எமைச் சிறை மீட்கும் சேனாதிபதியாக முருகனும் அவனது அளவற்ற பெருங்கருணையும் என்றென்றும் எம்மோடு நிலைத்திருக்க பிரார்த்திக்கிறேன்.

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

**பேராசிரியர் சி.சிறிசற்குணராசா**
**துணைவேந்தர்**

11091(P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
# JAFFNA MUNICIPAL COUNCIL

## யாழ் மாநகர ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

உலகெங்கும் வாழும் ஈழத்தமிழ் மக்கள் போற்றி வணங்கும் பெருந் தெய்வமான நல்லைக்கந்தப்பெருமானின் வருடாந்தப் பெருந்திருவிழா இம்முறையும் உலகையும் எம்சூழலையும் மிகுந்த அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி இருக்கும் பெருந்தொற்று பரவலுக்கிடையில் ஆரம்பமாகிறது.

கடந்த வருடமும் இதே நோய்த்தொற்று ஏற்பட்டிருந்த போது மிகுந்த சுகாதாரக் கட்டுப்பாடுகளுடன் ஏனையவர்களுக்கு எடுத்துக்காட்டாக நல்லூரானின் பெருந்திருவிழா வழமையான ஆடம்பரங்கள் இன்றி மிக மிகப் பக்திபூர்வமாக நடந்தேறியதை நினைவு கூருகிறேன். எனினும் இம்முறை கடந்த வருடத்தை விட நெருக்கடியான சூழல் ஏற்பட்டுள்ளது. எமது சூழலிலும் நோய்த்தொற்றின் தாக்கம் அதிகரித்து பல பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகிறது.

எனவே இந்த இக்கட்டான சூழலில் மேலும் இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொதுமக்களின் நன்மையையும் கருத்திற் கொண்டு முன்செல்ல வேண்டிய அதேவேளை எத்தடை வந்தாலும் இடையறாது நிகழும் பெருந்திருவிழா இம்முறையும் சிறப்பாக நிகழ்ந்து நல்லை முருகப்பெருமானின் கருணையினூடாகவே இத்தொற்று துயரிலிருந்து நாம் மீள முடியும் எனவும் நாம் உறுதியாக நம்புகிறோம்.

எவ்விடர்க் காலத்திலும் நல்லைக்கந்தப் பெருமானின் பெருந் திருவிழா தடங்கலின்றி அச்சூழலுக்கேற்ப நடப்பது போல யாழ் மாநகர சபை சைவ சமய விவகாரக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெறும் நல்லைக்குமரன் மலர் வெளியீடும் தடையின்றி வழமைபோல இக்காலச் சூழலுக்கேற்ப வெளியிடப்படுகிறது என்பதை எண்ணி மகிழ்வுறுகிறேன்.

இம்முறை 29 ஆவது மலர் வெளியீடும் வழமையான பிரமாண்டங்கள் இன்றி கடந்த ஆண்டு போல் நடைபெறுவது காலத்தின் கட்டாயமாகும். இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டான காலத்திலும் இம்மலருக்கான ஆக்கங்களை வழங்கியவர்களையும் மலர் வெளியீட்டுக் குழுவையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

எம்மண்ணில் சமய மற்றும் சமூகப் பணிகளுக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றுபவர்களுக்கு வழங்கப்படும் "யாழ்" விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் சில கட்டுப்பாடுகளுடன் இம்முறையும் நடைபெற உள்ளது.

இவ்வாண்டு வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் சிறக்க வாழ்த்துவதுடன் மலர் வெளியீட்டு விழா சிறக்கவும் யாழ் மாநகர சபை சைவ சமய விவகாரக்குழுவின் பணிகள் மேலும் சிறக்கவும் நல்லைக் குமரனின் தாள் பணிந்து பிரார்த்திக்கிறேன்.

**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்**

**இ.த.ஜெயசீலன்**
**ஆணையாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்

# 2021


## கவிதைகள்

- அவனருள் வழி செய்யும்
- நல்லூரில் குடியமர்ந்த வேல் முருகன்
- நல்லையூரான் பாதம் நாடிடு மனமே
- வந்தருளைத் தந்திடுவான் வடிவேலன்!
- நல்லூரின் நாயகனே!
- நல்லை நாயகனை நாடிடுவோம்
- நல்லையம்பதியின் நாயகன்
- இந்தாண்டு வரம் மறுத்தாய் ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனருள் வழி செய்யும்

**த.ஜெயசீலன்**

வானம் குனிந்து வணங்க முகில்களோ
மாலையாய் வீழும் இடம் - பல
வாச மலர்கள் விரும்பியே வந்திறை
மார்பில் குவியும் தலம் - தினம்
கானம் பொழியும் குழல் தவில் தேன்மணி
காதில் அமிர்தமிடும் - உயிர்க்
கந்தன் வடிவேலாய்க் காட்சி கொடுப்பதைக்
காணுதல் கோடி சுகம்!

வானத் தமரரும் வந்து வரம் கேட்டு
வாசலில் காத்திருப்பார் - பரி
வாரக் கடவுளர் பக்கத் துணை நின்று
மாரி அருள் பொழிவார் - தங்கள்
ஈனம், வினை, மனப்பாரம், இறக்க
எழும் நரர் நேர்த்தி வைப்பார் - திசை
எங்கும் சுகந்தம் பரப்பும் 'விழா எழில்'
எண்ணுவோர் முக்தி கொள்வார்!

நல்லைக் குமரனின் ஞான மடிதனை
நம்பியோர் நொந்ததில்லை - கோடி
நன்மை தரும் நிழல் தன்னில், இளைப்பாறும்
யாரும் நலிந்ததில்லை - வெறும்
கல்லும் மரமும் உலோகமும் அல்ல
கருணை அருள் பொழியும் - நல்லைக்
கந்தன் புகழுக்கு ஈடில்லை அம்மண்ணில்
கால்பட்டால் இல்லை தொல்லை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை போர்த்துயர் சூழ்ந்தது நேற்று
எழில் விழா நின்றதுவா? - இன்று
இந்தக் கிருமிக் கொடுமைக் கிடையிலே
இன்னருள் ஓய்ந்திடுமா - இடர்
அத்தனையும் ஓட்டும் அன்பு வயிரவேல்
அற்புதம் செய்திடுமாம் - எங்கள்
அல்லல் அகலும்... அடியார் மகிழ
அவனருள் வழி செ(ய்)யுமாம்!

## வியத்தகு வேலா

மணிதரித்த வேலனை மனதாரப் பாடியே
மயில்வாகனன் சேவடி பற்றிப் பிடித்து
கொடுந்துயரை கொல்லும் நோயை
துரத்தும் துன்ப வலிகளைத் தீர்ப்போம்
நாடும் நகரும் நலன்கள் காண
நாளும் பொழுதும் கரங் கூப்பித் தொழுது
விரிந்து பரவும் கதிரொளி சூழ
வியத்தகு வேலனை பயமது நீங்கவே
சிறப்பிற்கோர் மைந்தனாம் பெண்ணிருவர் துணைவனாம்
சிங்கார முருகனை உளச்சுத்தியுடன் வணங்கிடுவோம்!

**சிவரம்யா சிவநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் குடியமர்ந்த வேல் முருகன்

கவிஞர் சின்னப்பு தனபாலசிங்கம்

அண்டங்கள் அனைத்தையும் ஆழ்கின்ற முருகன்
தொண்டர்தம் குறைகளைத்
தீர்க்கின்ற குமரன்
விண்மண்டலம் யாவுமே
மயிலேறி வரும்குகன்
வினையாவும் விரட்டிடவே
வேலெறியும் சக்திமகன்

( அண்டங்கள் )

படைவீடு ஆறு கொண்ட வேல் முருகன்
பன்னிரு கையுடனே முகம் ஆறு கொண்டான்
உடை கோவணம் கொண்ட பழனி மலை முருகன்
உலா வர மயில் மீது ஏறி வரும் அழகன்

( அண்டங்கள் )

அருணகிரி நாவினிலே வேல் தொட்ட முருகா
சிவனுக்கு குருவாகி நின்றாயே முருகா
சரணம் இது எம்மையும் காத்திடவா முருகா
தமிழுக்கு குருவாகி இருக்கின்ற முருகா

( அண்டங்கள் )

சங்கப்புலவர்கள் சபை நடுவில் நீயே
முதற்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் உனதே
எங்கும் நிறைந்திருந்து எமையாளும் வேலே
நல்லூரில் குடியமர்ந்து ஆட்சி செய்யும் கோவே

( அண்டங்கள் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லையூரான் பாதம் நாடிடு மனமே

தங்கராசா தமயந்தி
யாழ்.ஜெயப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவகம்

குணப்படுத்த புற்றென பொங்கியயெழும்
கொடிய நோயாம் கொரோனாவை அழித்திட
கூறுமடியவர் குறை தீர்க்கும்
குன்றத்துக் குமரன் பதம் நாடிடு மனமே.

தனிமைப்படுத்தல், தவிர்த்து ஒதுக்குதல்
பஞ்சம் பதம்பார்த்திட, பட்டினி உயிர்கொல்ல
செய்தொழில் இன்றி செய்வதறியாது தவிக்கும் நிலை நீங்க
சேவற்கொடியோன் பாதம் பணிந்திடு மனமே.

போதையில் புதைந்து முகவரி தொலைக்கும் இளையோர்
இரவல் கலாசாரத்தில் இன்பம் காணும் வாலிபம் உய்வுற
அருவமும் உருவமுமாய், அநாதியுமான
வெவ்வினை தீர்த்தம் வேலோன் பாதம் பற்றிடு மனமே.

ஆலயக் கதவுகள் அடைக்கப்பட்டு
அறமும் தர்மமும் மறக்கப்பட்டு வரும் நிலை மாற
அன்பர்க்கு இரங்கும் அம்பிகை பாலன்
அலங்காரக் கந்தன் பாதம் போற்றிடு மனமே.

நாளொரு மேனி பொழுதொருவண்ணம்
நம் மக்கள் படும் துயர் நீங்கிடவே
நலமும், அருளும் நல்கும்
நல்லையூரான் பாதம் நாடிடு மனமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தருளைத் தந்திடுவான் வடிவேலன்!

**கலாபூஷணம் கீழ்கரவை கி.குலசேகரன்**
ஓய்வுநிலை பிரதேச முகாமையாளர், இலங்கை வங்கி.

**பல்லவி**

சிந்தையில் உறைந்திருக்கும் கந்தனைத் தினந்தினமும்
வந்தனை செய்வதெந்தன் முதல் வேலை!...

(சிந்தை)

**அநுபல்லவி**

செந்தமிழ்க் கடவுளவன் தந்திடும் அருளாலே
சந்ததம் தான் தொடுப்பேன் பாமாலை!...

( சிந்தை )

**சரணம்**

முந்தை வினைபோக்கி முக்திதனை அளிப்பவனை
எந்தன் மனைத் தெய்வமென ஏத்தி நிற்பேன்!
எந்த நிலை வந்தாலும் ஏது குறை நேர்ந்தாலும்
செந்தில் குமரனை நான் போற்றி நிற்பேன்!

( சிந்தை )

தந்தைக்கு உபதேசம் செய்த குருநாதன்!
சிந்தை கனிந்தெனக் கருளும் சிவபரவன்!
“கந்தா! குகா!” என்றே கத்தி வணங்கிடவே
வந்தருளைத் தந்திவான் வடிவேலன்!

( சிந்தை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரின் நாயகனே!

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

**பல்லவி**

நல்லூரின் நாயகனே ஞானவடி வேலவனே
பல்லோரும் பணிந்தேத்தும் பாலசுப்பிர மணியனே

**அனுபல்லவி**

எல்லோரும் உனையே ஏற்றித் துதித்திடவே
நல்லூரின் வீதியிலே அருட்காட்சி தருபவனே

**சரணம்**

வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டாலே
போய்விடும் துன்பங்கள் ஓடிடும் பாவங்களே
நாதியற்ற நாங்கள் நம்பியே வந்து விட்டோம்
நீதியை நிலைநாட்டி நிம்மதியைத் தாருமையா!

நெற்றியிலே வந்துதித்த நிர்மலனே குமரா
பற்றினோம் உன் திருவடிகள் பாவத்தைத் தீருமையா
ஒற்றுமையாய் ஒன்றுகூடி வணங்கினோம் வடிவேலா
சுற்றி வரும் பகையை தூரவே ஓட்டிடுவாய்

தொல்லை வினை தீர்க்கும் தூயவனே நல்லூரானே
இல்லையெனாது வரமீந்தருளும் ஏந்தலே சண்முகனே
நல்லையம் பதியுறையும் ஞானவடிவேலவனே குமரனே
கல்லையொத்த மனமுருக காட்சி தருவாய் சரணம் சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனே முத்துக்குமரனே சண்முகனே சரவணனே
திருமாலின் மருகனே தீர்த்தருள்வாய் எம் வேதனையை
ஒருக்கால் உன் திருநாமம் ஓதியே உச்சரித்தால்
இருக்காதே வல்வினைகள் ஓடியே போய் விடுமே.

புள்ளிமயில் வாகனனே புகழ்மிகு நல்லூருறைபவனே
வள்ளியம்மை நாயகனே வரமருள்வாய் வேலவனே
அள்ளியெடுத் தணைக்க ஆறுமுகனாய் உதித்தவனே
கிள்ளியெறிந்திடுவாய் எம் கவலைகளையே முருகா முருகா.

நல்லூரில் உறைந்திருக்கும் ஞானசக்தி வேலவனே
எல்லோருமே பார்த்திடவே நீ எழிற்காட்சி தருகின்றாய்
கல்மனமும் கசிந்துருக உள் வீதி வலம் வருகின்றாய்
இல்லத்தில் இருந்தபடியே உன்னை நாம் துதிக்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை நாயகனை நாடிடுவோம்

தேவமதுரம் சுகிர் நாகேந்திரா

நல்லையில் நன்றிலங்கி நாற்றிசையும் புகழ்பரப்பி
எல்லையிலா இன்னருளை எம்மவர்க்கு உவந்தருளி
தொல்லையது தீர்த்திடுமெம் தெய்வானை மணாளனே!
தில்லையுறை அம்பலவன் திருநுதல் புதல்வோனே!

வல்வினைகள் வீழ்த்தி வன்கிருமித் தொற்றகற்றி
பொல்லாப் பிணிபலவும் புவனத்தே வேரறுத்து
நல்லிதய சுத்தியுடன் நயந்துருகும் அடியார்தம்
இல்வாழ்வு நலமோங்க அருளீவாய் திருமுருகா!

கனிந்த கோலமுயர் கார்மயில்வாகனனை!
பனித்த சடையோன் பார்வதி பாலகுமரனை!
இனித்தன அனைத்தும் ஈந்தருளிக் காத்திடும்
தனித்தவ முருகோனின் தாளிணையே தஞ்சம்.

ஆரோங்கும் நல்லூராம் அரும்பதியில் கோயிலுறை
சீரோங்கும் செழுந்தலத்து சிங்கார வேலனவன்
தாரோங்கதேரிலங்கி தெய்வானை வள்ளியுடன்
பேரோங்க காட்சிதரு பேரருளைப் பரவிடுவோம்.

கணையெனப் பாய்ந்திடும் கார்வினைகள் களைந்து
துணையெனத் துதித்திடவே துன்பங்கள் துடைத்து
அணைத்தே அனுதினமும் அருள்புரி அறுமுகனை
இணையிலா பக்தியுடன் இதயத்தே இருத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லையம் பதியின் நாயகன்

கலைஞானசுடர் ஸ்ரீமதி சுபாஷினி

முருகனே கருணையிள நெஞ்சனே - நல்லைப்
பதியனே தொழுதுநாம் பணியும் இறைவனே
இடர்தனைக் களைந்து தொற்றிடா வண்ணம்
தொற்றினை முற்றிலும் ஒழிப்பாய்.

பரிவொடு பாசக் கருணைக்கண் பார்வை
வடிவினன் அழகொளிர் முருகா - நல்லைப்
பதியினில் நாளும் மணியொலி கேட்கத்
துயர்தனை அவனியில் களைவாய்.

பிறவியெம் பிணிகள் அகன்றிடத் தினமும்
மனமிதை ஒடுக்கியே வணங்கும்-பக்த
அடியவர் எங்கள் விழிகளின் நீரைத்
துடைத்திடுவாய் நல்லைக் குமரா.

பிழைகளைக் களைந்து இப்பிறவிகள் வாழ்வில்
தகையறக் கருமங்கள் ஆற்றத் - தரணியில்
வழிசெய் சண்முகா ஞானச்செங்கணன் புதல்வா
நல்லையில் தொல்லைகள் தீர்ப்பாய்.

அறிவினுக் கறிவாய் அப்பாலுக் கப்பாலாய்
உறுமிலக்காகிய பொருளாய் பிரணவந் தனையே
பொருளுரைத் தனையே வெற்றிவேல் ஞானநல்லூரா
மற்றவரறியா மாணிக்க மருந்தே துயரினைதுடை நீ விரைந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தாண்டு வரம் மறுத்தாய் ஏன்?

S.பத்மகுமார்

கந்தன் புகழ்பாடும் கணக்கில்லா ஊர் உண்டு
அவ்வுலகில் உதித்த ஊர்தான் - நல்லூர்
யாழ்பாடிப் பூத்திட்ட ஊர்தனிலே
நாம் வாழ செய்திட்டாள் உன்னருளே

ஆண்டாண்டு நடந்திடும் கந்தன் காவியம்
இவ்வாண்டு நடக்கிறது - 2021
உலகமே அலறி வரும் ஆண்டுதனில் - உன்
உற்சவம் நடக்கிறது யாரருளாலே?

தொடங்கியது கொவிட் -19
அந்தாண்டு நடந்தது அச்சமின்றி உற்சவம்
அடுத்தாண்டு நடந்தது அளவான பக்தருடன்
இந்தாண்டு நடந்ததோ அன்பர்கள் எவருமின்றி

ஆண்டாண்டு கண்டு வந்தோம் கந்தனருளை
ஆண்டாண்டு குறைத்து வந்தாய் பக்தர் தொகையை
இந்தாண்டு அழைக்கவில்லை பக்தர் ஏவரையும்
அதனாலே நீர் கொண்ட முடிவுதான் என்ன

இந்தாண்டு நின்று நான் பார்கின்றேன் "பரியல்" முருகா
சென்ற ஆண்டு கண்டுகொண்டேன் அருகருகே முருகா
கோடான கோடி கூடிநின்ற பக்தர் கூட்டம்
தள்ளாடி தள்ளாடி தவழந்து வந்தோ உன்பாதம் பணிய

நீ எம்மை கண்டு கொள்வாய் எங்கெல்லாமோ
நாம் உன்னை கண்டு கொள்ளவரும் ஊர் நல்லூர்
ஆண்டாண்டு கண்டு வந்தோம் அருகருளே நின்று
இந்தாண்டு வரம் மறுத்தாய் எம்வரவை ஏன்முருகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர் 2021
## கட்டுரைகள்


- யாழ்ப்பாணத்து முருகத்திருத்தலங்கள் மீது பாடப்பெற்ற சில பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள்
- பிரமக் குயவன் வனைவதற்கு ஏது
- சாதாரண மக்களுக்கான அரங்கத் தேவையும் சூரன்போர் சடங்கும்
- இந்து சமயத்தில் மனித உரிமைகள்
- தேவார திருவாசகங்களினூடாக தெளிவு படுத்தப்படும் சைவசித்தாந்த முப்பொருள் கோட்பாடு
- இந்து மெய்யியலில் அளவையியல் அறிமுகம்
- பஞ்ச ஈஸ்வரங்கள் பற்றி ஒரு பார்வை
- அலகிலா ஆடல்புரியும் அம்பலத்தரசனின் ஆலயம் - தில்லைச் சிற்றம்பலம்
- திருமந்திரமும் திருக்குறளும்
- திருமந்திரம் சொல்லும் வாழ்வியல்
- சாம்பவீ தீட்சையினை நல்கும் மஹோத்ஸவம் பற்றி ஒரு நோக்கு
- 2021 இல் யாழ் விருதியைப் பெறும் வாழ்வக நிறுவனத்தின் தலைவர் ஆ. இரவீந்திரன் (ச.நீ) அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்து முருகத்திருத்தலங்கள் மீது பாடப்பெற்ற சில பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள்

சண்முகலிங்கம் சஜீலன்
பன்னாலை.

தமிழில் சிற்றிலக்கியங்கள் தொன்னூற்றாறு வகையாகும். அவற்றுள் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்த இலக்கியமும் ஒன்றாகும். பிள்ளைத் தமிழ் அல்லது பிள்ளைக்கவி எனப்படுவது தெய்வத்தை அல்லது மகான்களை அல்லது அறிஞர்கள், புலவர்கள், புகழ் பெற்றவர்களை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவர்களைச் சிறுகுழந்தையாக உருவகித்துப் பாடப்படுவதாகும். பொதுவாக குழந்தைப் பருவத்துக்குரிய இரண்டாம் மாதம் முதல் நான்கு வயது வரையுள்ள காலப்பகுதியை பத்துப்பருவங்களாக வகுத்து பிள்ளைத் தமிழ் பாடுதல் மரபாகும். ஆண்பாற்பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இரு வகையான பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் உண்டு பாட்டுடைத்தலைவர் ஆணாயின் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் எனவும் பாட்டுடைத் தலைவர் பெண்ணாயின் பெண்பாற் பிள்ளைத் தமிழ் எனவும் வழங்கப் பெறும் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வரானை (வருகை), அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என பத்துப்பருவங்களில் அமையும் பெண்பாற்பிள்ளைத் தமிழ் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம் வாரானை அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல் (ஊஞ்சல்) எனப்பத்துப் பருவங்களில் அமையும்.

ஈழத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் எழுந்த பெரும்பாலான பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள் தெய்வத்தைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டதாகும். பொதுவாக விநாயகர், முருகன், அம்பாள், திருமால் ஆகியோரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பல பிள்ளைத் தமிழ்ப்பிரபந்தங்கள் படைக்கப்பட்டுள்ளன. இப்பிள்ளைத் தமிழ்ப்பிரபந்த இலக்கியங்களில் தனித்தன்மை வாய்ந்த சில சிறப்பியல்புகளை அவதானிக்கலாம். இவை சொல்நயம் இனிமை, கவித்துவம், சந்தம் ஆகியவற்றைக் கொண்டு அழகுதமிழில் பாடப்பட்டிருக்கும். இதனைப்பாடிய புலவர்கள் தெய்வங்கள் மீது மிகவும் உணர்வொன்றிய நிலையில் உருக்கமாகப் பாடியிருப்பர். கந்தபுராணம் மற்றும் ஏனைய புராண இதிகாசக்கதைகளை அடியொற்றி அவற்றில் நிகழ்ந்த சம்பவங்கள் வர்ணிக்கப்பட்டிருக்கும். குறித்த பிரதேச மக்களின் கலாசாரம், பண்பாடு, வாழ்வியல், பொருளாதாரம், புவியியல் அம்சங்கள் குறித்துரைக்கப்பட்டிருக்கும். தெய்வங்களின் அற்புதச் செயல்கள் விபரிக்கப்பட்டிருக்கும். பிள்ளைத் தமிழ் பாடப்பெற்ற காலத்தில் உலகில் நடைபெற்ற ஆன்மீக மற்றும் அரசியல் சார்ந்த விடயங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும். பொதுவாக சிவப்பரம் பொருள் பிறவாயாக்கைப் பெரியோன் எனச் சிறப்பிக்கப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதால் சிவப்பரம் பொருளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பிள்ளைத் தமிழ் பாடும் மரபு ஈழத்தில் வழக்கத்தில் இல்லை.

யாழ்ப்பாணத்தில் முருகப் பெருமான் மீது அல்லது முருகத்திருத்தலங்கள் மீதே அதிகமான பிள்ளைத் தமிழ்ப்பிரபந்தங்கள் பாடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் முருகத் திருத்தலங்கள் மீது பாடப்பட்ட பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்களாக செல்வச்சந்நிதி பிள்ளைத் தமிழ், மாவை பிள்ளைத் தமிழ், நயினை முருகன் பிள்ளைத்தமிழ், இணுவை முருகன் பிள்ளைத்தமிழ், பயிரிக்கூடல் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி பிள்ளைத் தமிழ், நல்லைக்கந்தன் பிள்ளைத் தமிழ், பள்ளம் புலம் குமரக்கோட்டம் திருமுருகன் பிள்ளைத்தமிழ், விசவத்தனை முருகன் பிள்ளைத்தமிழ், அத்திதல முருகன் பிள்ளைத் தமிழ், சுழிபுரம் பறாளையம்பதி அருள்மிகு சிவசுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ், அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி பேரில் புதிய பிள்ளைத்தமிழ் ஆகியன உள்ளன. இவற்றுள் செல்வச் சந்நிதி பிள்ளைத்தமிழ் பற்றிய விபரங்கள் அச்சுப்பிரதியாகவோ, ஏட்டுப்பிரதியாகவோ இதுவரை கிடைக்கப் பெறவில்லை. ஏனையவை அச்சுப்பிரதியாக நூல்வடிவில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முருகத்திருத்தலங்கள் மீது பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் சிலவற்றினைப் பற்றிய சிறப்புப்பார்வை 2019ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நல்லைக் குமரன் மலரின் 27ஆவது இதழில் வெளிவந்துள்ளது. இங்கு ஏனைய சில முருகத்தலங்கள் மீது பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள் பற்றிய சிறப்பியல்புகளை முறையே பாடப்பொற்ற தலம், பாடிய அல்லது இயற்றிய ஆசிரியர்கள், பாடப்பெற்ற ஆண்டு, பிள்ளைத்தமிழின் அமைப்புமுறை அவற்றிலுள்ள சிறப்புகள் என்ற அடிப்படையில் நோக்கலாம்.

### விசவத்தனை முருகன் பிள்ளைத்தமிழ்

**இன்றுலகில் உள்ளபல மொழிகளிற் பழைமையும்**
**இலக்கண வரம்புடைமையும்**
**இனிமையும் உடையமொழி தமிழெனவும் ஏனைய**
**இனத்தவர் வியக்கும் வகையில்**
**அன்று தொட்டினியபண் பாடுகலை நாகரிகம்**
**அன்புடைய வீரமக்கள்**
**ஆகவாழ்ந்தோர்தமிழ ரெனவுமம் மக்கள்**
**அனுட்டித்த நல்லசமயம்**
**நன்றெலாம் தாங்கியெப் பாவமும் தள்ளிமெய்ஞ்**
**ஞானியர் பலரையாக்கி**
**ஞாலம் புகழ்சைவ மென்னவும் நம்மவர்**
**நன்குணர்ந் துறுதிகொள்ள**
**சென்று சென் றெவருளத் தினுமுறைத் திடவே**
**சிறுபறை முழக்கியருளே**
**செல்வவிச வத்தனைச் சைவமெய்ந் நாயகா**
**சிறுபறை முழக்கியருளே**
**-(சிறுபறைப்பருவம் பாடல் - 06)**

**பாடப்பெற்றதலம் :-** சுழிபுரம் பண்ணாகம் விசவத்தனை எனும் பதியில் கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலிக்கும் முருகப்பெருமான் மீது பாடப்பெற்றது.

**பாடிய (இயற்றிய) ஆசிரியர் :-** பண்டிதர் அ.ஆறுமுகம்.

**இயற்றப்பட்ட ஆண்டு :-** 1982.

**பிள்ளைத்தமிழின் அமைப்பு :-** 10பருவங்களில் அமைந்துள்ளது. ஒவ்வொரு பருவங்களிலும் 10 பாடல்கள் அமைந்துள்ளன. பாடல்கள் அனைத்தும் விருத்தப்பாக்களால் ஆனது.

**பிள்ளைத்தமிழின் சிறப்பு :-** காப்புச் செய்யுளில் தனியான பிள்ளைத்தமிழுக்குரிய விநா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யகர் காப்பு உள்ளதுடன் திருமால், சிவபெருமான், உமையம்மையார், விநாயகப் பெருமான், வைரவப் பெருமான், தெல்லிப்பழை துர்க்கை அம்மன், நாமகள், சப்தமாதர், பெரியபுராணநாயகர்கள் மற்றும் ஏனைய கடவுளரையும் குழந்தை முருகனைக் காக்கும்படி வேண்டிப்பாடப்பட்டுள்ளது. செங்கீரைப்பருவத்தில் முருகன் சரவணப் பொய்கையில் உதித்தமை, இறைவர் மீதும், உமையம்மை மீதும் ஏறி நின்று குழந்தை முருகன் செய்யும் குறும்புத் தனத்தைப் பற்றியும், முருகனின் பிஞ்சு உள்ளத்தைப் பற்றியும்

விசவத்தனை முருகன் கோவிலின் பங்குனி உத்தரத்தை அண்டிய பெருந்திருவிழா மற்றும் வழிபடவரும் அடியார்களின் வேண்டுதல் பற்றியும் கூறப்பட்டுள்ளது. ஞானியர்களுக்கும், அருளாளர்களுக்கும் இறைவன் கொடுத்த அருள் பற்றியும் சிலாகித்துக் கூறிதனது வேண்டுதலையும் மனமுருகி முருகன் சந்நிதியில் முன்வைக்கிறார் இப்பிள்ளைத் தமிழ் ஆசிரியர் தாலப் பருவத்தில் கந்தபுராணத்தில் நிகழ்ந்த சம்பவங்களும், முருகப் பெருமான் அருள் பெற்ற அருட்செல்வர்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. அன்பு மிக்க அடியார்கள் விசவத்தனைப்பதிக்கு வழிபடவரும் கோலம் பற்றி எடுத்துக் கூறப்படுகிறது. சப்பாணிப்பருவத்தில் கச்சியப்பருக்கு அருளியமை பற்றியும், மலைமகள், திருமகளுக்கிடையில் தனது மைந்தர்பற்றி எழுந்த விவாதம் பற்றியும் சுவைபடக் கூறும் கவிஞர் காலன் வரும் வேளையில் வந்து தன்னைக் காக்குமாறும் முருகனை வேண்டுகிறார். முருகனின் அருள் சுரந்தளிக்கும் திருக்கரம் பற்றியும், விசவத்தனைத்தலத்தில் கார்த்திகை நாளில் கந்தபுராணத்தில் வள்ளியம்மை திருமணப் படலம் படிப்பது பற்றியும், மக்கள் மாவிளக்கு ஏற்றி வழிபாடு செய்வது பற்றியும் கூறுகிறார். முத்தப்பருவத்தில் முருகப்பெருமான் சிங்கமுகாசுரனை வதைத்தமை பொய்யாமொழிப்புலவர் கோழியைப் பாடியவாயால் குஞ்சினைப் பாடுவேனோ எனக் கூறி மமதை கொள்ள அப்படியாயின் முட்டையைப்பாடும் எனக் கூறி அவரது செருக்கை அடக்கியமை, முருகப்பெருமான் சிறுவயதில் புரிந்த திருவிளையாடல்கள் ஆகியனபற்றி கூறியுள்ளதோடு இம்மைக்கும், மறுமைக்கும் முக்திப்பேறு அளிக்கவல்ல கண்கண்ட தெய்வம் முருகப்பெருமானே என்று இப்பருவத்துப்பாடல்களில் கவிஞர் கூறியுள்ளார். இப்பருவத்துப் பாடல்களில் மாணிக்கவாசகர் போன்று ஞான நிலையில் நின்று இறைவனை மிகவும் உருகி வேண்டிப்பாடுகிறார். அம்புலிப் பருவத்தில் சாம, பேத, தான, தண்ட என்ற உபாயத்தின் மூலம் சந்திரன் பெற்ற சாபங்கள், துன்பங்களை எடுத்துக் கூறி மேலான பரம்பொருளான முருகனுடன் வந்து விளையாடினால் உயர்கதி அடையலாம் எனக் கூறி உமக்கு எந்தத் தீங்கும் நினையோம் எனவும், நாம் புனையும் சிற்றிலுக்கு நீர் வந்தால் உம்மை வரவேற்று உபசரிப்போம். இது உமது சிற்றிலே ஆகும். நாம் உம்மை வாழ்த்தி வழிபடுவோம். உமது தந்தை, தாய், அண்ணன், மாமன், கருணையுள்ளவர்கள் அது போல் நீரும் கருணை கொண்டு சிற்றில் சிதையாதீர் என குழந்தை முருகனிடம் வேண்டுகின்றனர் சிறுமியர். அத்துடன் விசவத்தனைத்தலத்தின் வனப்பும் இயற்கைச் சூழலும் நன்கு பதிவுசெய்யப்பட்டுள்ளன. சிறுபறைப் பருவத்தில் விண்ணிலிருந்து பொழியும் மழையால் மண்வளம், பயிர்வளம் செழித்தோங்கவும், தேசம் செழித்து அனைவரும் வாழவும் சிறுபறையை முழக்கியருளுமாறு வேண்டிப்பாடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. அண்ணனான விநாயகப் பெருமானோடு அன்பின் மிகுதியால் குழந்தை முருகன் புரியும் திருவிளையாடலும் இப்பருவத்துப் பாடல்களில் கூறப்பட்டுள்ளது. தெய்வீகமும், சைவ ஆசாரமும் கைகொண்டு ஒழுகும் அன்பர்கள் வாழும் சிற்றூராக பண்ணாகம் சிறப்பித்துக் கூறப்படுகிறது. பண்டைய தமிழ் மொழியும், தமிழகமும் சைவ சமயமும் எல்லா அன்பர்கள் உள்ளத்திலும் மிகவும் உறுதியாகப் பதியும் வண்ணம் சிறுபறை முழக்கியருளுமாறும் நின்னையே ஆடிப்பாடிக் கசிந்துருகி பக்தி செய்யும் அருளைத்தருமாறும் குழந்தை முருகனை பிள்ளைத்தமிழாசிரியர் வேண்டுகிறார். அத்துடன் சகல வறுமை நிலைகளும் நீங்கி எல்லோரும் மகிழ்ச்சியுடன் வாழவும் இவ்வுலகில் அன்பும், அறிவும் செறிந்தோங்கவும் இன்பம் எங்கும் சூழவும் நன்மை எங்கும் பெருகவும் சிறுபறை முழக்கியருளுமாறும் வேண்டுகிறார். சிறுதேர்ப் பருவத்தில் உமையம்மைத் தாயார் குழந்தை முருகனைக் குளிக்கவார்த்து ஈரம் ஒற்றித்துடைத்து உச்சி மோந்து பட்டாடை தரித்து, தலை வாரி, நெற்றியில் திருநீறு பூசி அழகுபார்க்கும் திருக்கோலமும், சிவபெருமான் குழந்தை முருகனை தோற்றுவித்த விதமும் இறைவன் இயற்கை நிலையிலும், உயிர்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் தத்துவமும் மிக அழகாகப் பேசப்படுகிறது. உலக மாந்தர்களுக்கு விதிக்கப்பட்ட கடமைகளை நீதிநெறியினின்றும் வழுவாது நிறைவேற்றுவதற்கு முருகப்பெருமான் துணைபுரிய வேண்டுமென்றும் பிள்ளைத் தமிழாசிரியர் வேண்டுகிறார். பக்தியுடன் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டித்து நாமங்கள் ஜெபித்துத் துதிக்கும் அடியவர்களுக்கு முக்தி இன்பப் பேறளிப்பதாகவும் அடியவர்களில் உயிருக்குயிராக இறைவன் உறைவதாகவும் முருகப் பெருமானையே ஆடிப்பாடி கசிந்துருகி நான் வணங்க வேண்டுமென்றும் கூறும் ஆசிரியர் இறுதிப்பாடலில் ஈழத்தின் முருகத்தலங்கள் சிறந்தோங்க வேண்டுமென்று கூறுவதுடன் சிறந்த ஒழுக்க நெறிகளுடன் எல்லோரும் வாழவும், செந்தமிழும், சிவநெறியும் தழைத்தோங் கவும் சிறுதேரை உருட்டியருளுமாறு குழந்தை முருகனை வேண்டுகிறார்.

**அத்திதல முருகன் பிள்ளைத்தமிழ்**

**சீர்கொண்ட கயிலைமலை திருக்கோயில் வீற்றிருந்து**
**செம்மையோர் நால்வர் வேண்டச்**
**சிற்பரத்து மோனநிலை காட்டியருள் தெய்வமே**
**தெளிவான ஞான வாரி**
**கார்கண்ட குயிலென்னக் கவல்கின்ற அமரர்க்காய்க்**
**கணைகொண்டு வந்த மாரன்**
**கருத்தழித்த செயல் கண்டு கனலாலே நீறாக்குங்**
**கண்கொண்ட கடவு ளேயோ**
**ஏர் கொண்ட கமலத்தோன் முதலாய தேவர்கள்**
**என்றென்றும் இனிது வாழ**
**இமவான் றன் மகள் கரத்தை ஏற்றருளி யின்புற்ற**
**ஏந்தலே யென்றுங் காக்க**
**நேர்கொண்ட சீலத்தோர் நிறைகைதை நகரத்து**
**நின்றோங்கு மத்தி தலத்து**
**நிமலனாஞ் சௌந்தரிய ரூபனென நின்றொளிரும்**
**நிகரற்ற வேளை நன்கே.**

**-(காப்புருவம் பாடல் - 2)**

**பாடப்பெற்றதலம் :-** கைதடி மத்தி மூர்த்தியாவத்தை எனும் தலத்தில் எழுந்தருளியுள்ள மாவடி க்கந்தன் எனும் பெயருடைய அத்திதல முருகப் பெருமான் மீது பாடப் பெற்றது.

**பாடிய ஆசிரியர்:-** சைவப்பெரியார் மு.தியாகராசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயற்றிய ஆண்டு :-** 1986.

**பிள்ளைத்தமிழின் அமைப்பு :-** 10 பருவங்களாய மையும் இப்பிள்ளைத்தமிழில் ஒவ்வொரு பருவத்திலும் மூன்று பாடல்கள் அமைந் துள்ளன. அனைத்தும் விருத்தப்பாக்களால் ஆனது.

**பிள்ளைத்தமிழின் சிறப்பு:-** காப்புப்பருவத்தில் விநாயகப்பெருமான் துதிப்பாவுடன் சிவபிரான், உமாதேவி ஆகியோர் குழந்தை முருகனைக் காக்குமாறு வேண்டப்படு கின்றனர். இதில் கந்தபுராணத்தில் வரும் முருகன் தோன்றிய திருவவதாரம் சொல்லப்படுகிறது. செங்கீரைப்பருவத்தில் முருகன் அண்டங்களை ஒன்றோடொன்று உருட்டி விளையாடி திருவிளையாடல் புரிந்தமை பற்றியும் உலகமாற்றம் கண்டு தேவர்கள் கலங்கியமை பற்றியும் பின்னர் முருகப் பெருமான் அவர்களுக்கு அருள் செய்தமை பற்றியும் சொல்லப்பட்டிருக்கின்றன. பிரமனைக் குட்டி சிறையில் அடைத்தமை, படைகளுடன் போருக்குப் புறப்பட்டமை ஆகியவையும் இப்பருவத்தில் கூறப்படுகிறது. தாலப்பருவத்தில் தாரகன் படையுடன் வீரவாகு தேவர் போர் செய்த காட்சியும் தாரகனுடன் முருகப் பெருமான் போர் செய்து அவனை அழித்த காட்சியும் விபரிக்கப்படுகிறது. பின்னர் தேவகிரிக்கு எழுந்தருளிச் சென்றமை பற்றியும் கூறப்பட்டுள்ளது. சப்பாணிப் பருவத்தில் தென் பெருங்கயிலை, திருக்காளத்தி, திருவாலங்காடு, திருவண்ணாமலை, திருவெண்ணெய் நல்லூர், விருத்தாசலம் ஆகிய தலங்களினூடாக முருகப்பெருமான் திருச்செந்தூருக்கு எழுந்தருளுவதாகக் கூறப்பட்டுள்ளது. திருச்செந்தில் பதியில் முருகன் எழுந்தருளும் திருக்கோலக் காட்சி நன்கு வர்ணிக்கப்படுகிறது. முருகப் பெரு மான் தேவர்களுக்கு அபயமளித்தருளுவதுடன் கைதை நகர் அத்திதலம் அழகான கொத்துக் கொத்தான மலர்களுடைய நந்தவனத்தால் சூழப்பட்ட வனப்பினை உடையதென பிள்ளைத்தமிழாசிரியர் எடுத்துரைக்கிறார். முத்தப்பருவத்தில் வீரவாகுதேவர் சூரபத்மனிடத்தில் தூது செல்லத்தேர்ந்தெடுக்கப்படும் நிகழ்வும், வீரவாகு தேவர் வீரமகேந்திரபுரி செல்லும் காட்சியும், சூரமத்மனின் அவையில் வீரவாகு தேவர் செய்த திருவிளையாடல்கள் மற்றும் அங்கிருந்து மீண்டு திருச்செந்திற்பதிக்கு வருதல் ஆகியனவும் கூறப்பட்டுள்ளது. அத்திதலம் பல சீரும் சிறப்பும் பெற்ற தலமாகக் கூறப்பட்டுள்ளது. வாரானைப் பருவத்தில் சூரபத்மன்போருக்கு செல்வதற்காக அவையைக்கூட்டி மந்திராலோசனை நடத்தும் நிகழ்வும், சிங்கமுகாசுரன் அண்ணனான சூரபத்மனுக்கு போருக்கு செல்ல வேண்டாமென அறிவுரை கூறும் சம்பவமும் அதனை அவன் நிராகரிக்கும் சம்பவமும் கூறப்பட்டுள்ளது. முருகப்பெருமான் போர் புரியவென ஏம கூட பாடி வீட்டிற்கு எழுந்தருளும் காட்சியும் வர்ணிக்கப்பட்டுள்ளது. மேலும் சூரன் சீற்றங்கொண்டு தனது மகன் பானுகோபனைப் போருக்கு அனுப்பும் நிகழ்வும் பாடப்பட்டுள்ளது. அம்புலிப் பருவத்தில் முதலாம் நாள் பானுகோபனுடன் வீரவாகுதேவர் போர் செய்தமையும், இரண்டாம் நாள் சூரபத்மனுடன் முருகப் பெருமான் போர் புரிந்து அவனை தோற்கடித்தமையும், மூன்றாம் நாள் போரில் பானுகோபன் செய்த மாயா ஜாலங்களை முருகப் பெருமான் முறியடித்து வெற்றி கொண்டமை பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதனுடன் திறல்வாகு வெற்றிவீர ரான முருகப் பெருமானுடன் அம்புலியை விளையாட வருமாறு பிள்ளைத் தமிழாசிரியர் அழைக்கிறார். சிற்றிற் பருவத்தில் சூரபத்மனின் மைந்தர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், மந்திரியையும் முருகப் பெருமான் வென்றமை, சிங்கமுகாசுரனை வதைத்தமை, சூரபத்மன் செய்த மாயங்களை அழித்தமை ஆகியன பற்றிக் கூறி கைதைநகர்ச்சிறுமியர் யாம் செய்த சிற்றிலைச் சிதையாதே என குழந்தை முருகனைச் சிறுமியர் வேண்டும் வகையில் பாடல்கள் உள்ளன. சிறுபறைப்பருவத்தில் சூரமத்மனுக்கு முருகப் பெருமான் காட்டிய திருப்பெரும்வடிவம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அடுத்த பாடலில் சூரனை முருகப் பெருமான் வதைத்து சேவலும், மயிலுமாக மாற்றி அவனுக்கு அருள் செய்தமை பற்றியும் கூறப்பட்டுள்ளது. தெய்வானை அம்மையை முருகப் பெருமான் திருமணம் புரிந்தமை பற்றியும் கூறப்பட்டு ள்ளது சிறுதேர்ப்பருவத்தில் வள்ளிநாயகியை திருமணம் புரிய முருகப் பெருமான் செய்த திருவிளையாடல் பற்றியும், பின்னர் திருமணம் புரிந்தமை பற்றியும் கூறி இறுதியில் அடியவர்களாகிய எமக்கு ஏற்படும் பகையை அழித்து நாம் சிறப்புடன் வாழ சிறுதேருருட்டி அருளுமாறும் வேண்டுகிறார் பிள்ளைத் தமிழாசிரியர்.

**சுழிபுரம் பறாளையம்பதி அருள்மிகு சிவசுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ்**

**ஆதியாம் யாழ்ப்பாணத்**
**தமைந்தவூர் சுழிபுரத்**
**தன்பர்கள் ஒன்றுகூடி**
**ஐயனே யுனை வேண்டி**
**அருள்ஞான வேல்நாட்டி**
**அநவரதம் புராணமோதி**
**நீதிசெய் சரியையிலுங்**
**கிரியையிலு நின்றவர்கள்**
**நினையோகத் தாலுணர்ந்தே**
**நெடுவானந் தொடுங் கோயில்**
**நிறைவேற்றிப் பெருஞ் சாந்தி**
**நிறைவிழாச் செய்து மகிழ்வார்**
**பேதியா தவர் வேண்டும்**
**வரங்களில் மரபுய்யும்**
**பிள்ளைப்பே றளித்தலாலே**
**பிள்ளைப்பெரு மாளெனும்**
**காரணத் திருநாமம்**
**பெற்றனை யதுசிறக்க**
**சோதியா யெழுந் தெமது**
**வழிவளர மங்கலச்**
**சிறுபறை முழக்கியருளே**
**திகழுமறை யொலியறாப்**
**பறாளையருள் முருகனே**
**சிறுபறை முழக்கியருளே**
**-(சிறுபறைப்பருவம் பாடல் - 9)**

**பாடப்பெற்றதலம் :-** சுழிபுரம் பறாளை எனும் மருதநிலத்தில் கோயில்கொண்டெழுந்தருளி அருள்பாலிக்கும் சிவசுப்பிரமணியப் பெருமான் மீது பாடப்பெற்றது.

**பாடிய ஆசிரியர் :-** புலவர் வை.க.சிற்றம்பலம்.

**இயற்றிய ஆண்டு :-** 1997.

**பிள்ளைத்தமிழின் அமைப்பு :-** 10 பருவங்களாயமையும் செய்யுட்களில் ஒவ்வொரு பருவத்திற்கும் ஒவ்வொரு பாடல் ஈறாக 10 பாடல்கள் அமைந்துள்ளன. பாக்கள் பன்னிருசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம் எனும் பாக்களால் ஆனது.

**பிள்ளைத் தமிழின் சிறப்பு :-** காப்புப்பருவத்திற்குரிய ஒரே பாடலில் விநாயகரை வேண்டிப் பாடப்பட்டுள்ளதுடன் பொன்னாலைத் திருமால், சிவகாமி சமேத தில்லைக் கூத்தப்பெருமான், ஐங்கரன், முருகவேள், வைரவர், மகாலட்சுமி, சரஸ்வதி, நவக்கிரகம், சண்டேஸ்வரர் ஆகியோர் குழந்தையைக் காக்கும்படி வேண்டப்பட்டுள்ளனர். செங்கீரைப்பருவத்தில் கிண்கிணிச்சதங்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியப்பெற்ற தமிழ்க்கடவுள் முருகனிடம் பாராண்ட நம்மினம் சீரோங்கி வாழ்வு பெற வரம் தரும்படி வேண்டுகிறார் ஆசிரியர். தால ப்பருவத்தில் குழந்தை முருகனது திருக் கோலத்தை வர்ணிக்கிறார். சப்பாணிப் பருவத்தில் பறாளைப்பதியின் அயற் சூழல் அடிவர்கள் கோயில் கட்டியெழுப்பியமை, பூசைமுறைகள் ஆலயத்தருகே அமைந் துள்ள மண்டபங்கள், குடிமனைகள் ஆகி யவற்றைப்பற்றிக் கூறுகிறார். முத்தப்பரு வத்தில் நவரத்தினங்களில் ஒன்றாகிய முத்தை விட முருகன் எவ்வகையில் மேன்மை பெற்று விறங்குகிறார் என்று கூறப் படுகிறது. வாரானைப்பருவத்தில் வழிபடும் பக்தர்களுக்கு முருகப்பெருமான் செய்யும் அற்புதங்கள் பற்றிக் கூறுகிறார். சரணப் பொய்கையில் உதித்தமை, சக்தியிடம் வேல் வாங்கியமை, அகத்திய முனுவருக்கு அருளியமை, நான்முகனைக்குட்டியமை, ஈசனுக்கு உபதேசித்தமை பற்றி எடுத்துக் கூறி அம்புலியைக் குழந்தை முருகனுடன் ஆடவருமாறு அழைக்கும் பாணியில் அம்புலிப்பருவத்துப் பாடல்கள் அமைந்துள் ளன. சிற்றிற்பருவத்துப்பாடல்கள் சம்புத் துறை கடற்கரை மண் கொண்டு நாம் அமைத்த அழகான மணிமண் டபம் போன்ற சிற்றிலைச் சிதைக்காதே எனப்பால முருகனை சிறுமியர் வேண்டும் வகையில் அமைந்துள்ளது. சிறுபறைப் பருவத்தில் அடியவர்கள் ஒன்று கூடி கோயில் அமைத்து கும்பாபிசேகம் செய்து பூசைவழிபாடியற்றும் தலபுராணச் செய்தியும், இத்தலத்து முருகப் பெருமான் பிள்ளைப்பேறளிப்பதால் பிள் ளைப் பெருமான் எனும் காரணப் பெயர் கொண்டிருக்கும் செய்தியும் கூறப்பட்டுள் ளது. தேரில் முருகன் எழுந்தருளி வந்து அடியவருக்கு அருள் வழங்கும் காட்சியை சிறுதேர்ப் பருவப் பாடல் கூறுகிறது. இதே பாடலில் பறாளையில் வதியும் வள்ளி தேவ சேனா சமேத முருகப்பெருமானை வாழ்த்தி யும் பாடப்பட்டுள்ளது.

**காட்டுமலைக் கந்தசுவாமி பேரில் புதிய பிள்ளைத்தமிழ்**

**புகழ்பூத்த அச்சுவேலிப் பெருநகரின் கீழ்பால்**
**தெங்குகளும் கமுகுகளும் சேர்ந்துவளம்**
**கொழிக்கும்**
**கனிகள் தரும் விருட்சங்கள் பல உள்ள பதியில்**
**வளரும் இளமுருகனை நீ வந்து நின்று பாராய்**
**-(அம்புலிப்பருவம் பாடல் - 6)**

**நாவலம் பதிதனிலே நலமுடனே உறைந்து**
**நற் தவத்தோர் பேறெனவே கொண்டு மகிழ்வூட்டி**
**தீராத நோய்களெல்லாம் தீர்த்திடும் சீர்க்கந்தன்**
**சீர்பதியில் உறைகின்றான் செப்புகின்றேன் மதியே**
**-(அம்புலிப்பருவம் பாடல் - 7)**

**பாடப்பெற்ற தலம் :-** அச்சுவேலி, நாவலம் பதி காட்டுமலைக் கந்தசுவாமி என்று வழங் கப்பெறும் திருமுருகன் மீது பாடப் பெற்றது.
**பாடிய ஆசிரியர்கள் :-** சி.சிவலிங்கம், இரா ஜினிதேவி சிவலிங்கம்.
**இயற்றிய ஆண்டு :-** 1998.

பிள்ளைத் தமிழின் அமைப்பு :- 10 பருவங்க ளில் அமைந்துள்ளது. ஒவ்வொரு பருவத்தி லும் 10 பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பரு வமும் விருத்தப்பா, வெண்பா என மாறிமாறி அமையும் வகையில் பாடல்கள் பாடப்பட்டு ள்ளன.

**பிள்ளைத்தமிழின் சிறப்பு :-** காப்புப் பருவப் பாடல்களில் ஐங்கரன், திருமால், சிவபெரு மான், உமாதேவியார் ஆகியோரை வேண்டி குழந்தையைக் காக்குமாறு பாடப்பெற்று ள்ளது. அவ்வூர் சீனியர் எனும் அடியார் மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிகொண்டு நாவலம்பதியில் குடியேறி பக்தர்களுக்கு அருள் செய்யும் முருகப் பெருமானது அருட்காட்சியினை இப்பருவத் துப் பாடல்கள் விளக்குகின்றன. செங் கீரையில் சிவசக்தி பாலனாகவும், ஐம்பூதங் களின் வடிவாகவும், காலங்களின் வடிவா கவும், இயற்கையின் வடிவாகவும் குழந்தை முருகன் காட்சியளிப்பதாக கூறப்படுகிறது. தாலப்பருவத்தில் முருகனின் பரம்பொருட் தன்மையை எடுத்துக்கூறி சித்தத்தின் மலங்களை நீக்கி அடியவர்களுக்கு முருகப் பெருமான் அருளும் விதமும் பாடல்களில் விளக்கப்பட்டுள்ளது. சப்பாணிப் பருவத்தில் முருகனின் அருட்கோலத்தினை இயற்கைச் சக்தியின் அருட்கோலத்துடன் உவமைப் படுத்தியும் வேண்டுவார்க்கு வேண்டும் வரமீயும் கந்தனின் அருட்காட்சியினை விய ந்து போற்றியும் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. தாயொருவர் குழந்தையை முத்தந்தர அழைப்பது போல் சிறுகுழந்தை முருகனின் அழகுக் கோலத்தைக் கண்டு முத்தந்தர வருமாறு வாஞ்சையுடன் அழைத்து மகிழ் கிறார் இப்பிள்ளைத் தமிழாசிரியர் முத்தப் பருவத்தில். வாரானைப் பருவத்தில் சகல ஐஸ்வரியங்களையும் வழங்கும் தெய்வ மாக முருகனை உருவகித்து வருக வருக என தாய் அழைப்பது போல் பாடல்கள் உள் ளன. அம்புலிப்பருவத்தில் மாசற்ற மேன்மை யுடைய முருகனின் குணங்களைக் கூறியும் சந்திரன் பெற்ற சாபம், வடு ஆகியவற்றைக் கூறியும் நல்வாழ்வு பெற குழந்தை முரு கனுடன் விளையாட வருமாறு சந்திரனை அழைக்கிறார் ஆசிரியர் அத்துடன் இப்பருவ த்தில் அச்சுவேலி நாவலம்பதி கோவிற் சூழ லின் இயல்பும் முருகன் அத்தலத்தில் குடி கொண்ட அற்புத வரலாறும் பேசப்படுகிறது. சிறுபறைப் பருவத்தில் முருகனின் அருட் கோலமும் அருளும் வடிவமும் கூறப்படு கிறது. முருகன் குடிகொண்டுள்ள ஆறுபடை வீடுகள் ஒவ்வொன்றிலும் எவ்வடிவில் அருளு கிறார் என்று கூறுவதுடன் சிங்கமுகன், சூரபத்மன் ஆகியோரை முருகப்பெருமான் வதம் செய்தமை பற்றியும் கூறப்படுகிறது. சிற்றிற்பருவத்தில் சிவசக்தி பாலனாகவும் திருமாலின் மருமகனாகவும் கூறி முருகனை அழைக்கும் ஆசிரியர் தமிழகத்தில் ஆறு படை வீடுகளும் ஈழத்தில் புகழ்பெற்ற திருத் தல வீடுகளும் உனக்கு இருக்கிறது எனவே எங்கள் சிற்றிலைச்சிதையாதே என வேண்டு கிறார். சிறுதேர்ப்பருவத்தில் பல இடங்களி லும் ஆறு படை வீடுகளிலும் உறையும் முரு கப்பெருமானை சோலைகளும் கழனிகளும் சூழ்ந்த நாவலம்பதிக்கு வந்து தேருருட்டி அருளுமாறு வேண்டுகிறார் ஆசிரியர்.

**உசாத்துணை நூல்கள்**


- இணுவில் செகராசப்பிள்ளையார் பிள் ளைத்தமிழ், ச.வே.பஞ்சாட்சரம், இளந் தொண்டர் சபை, கந்தசுவாமி கோயில் இணுவில், 1988.
- விசவத்தனை முருகன் பிள்ளைத்தமிழ், பண்டிதர் அ.ஆறுமுகம், அருளமுத வள்ளம், வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம், 1994.
- அத்திதல முருகன் பிள்ளைத்தமிழ், மு.தியாகராசா, அத்திதல முருகன் தேவஸ்தானம், நல்லை ஆதீன புராண படன சபை, 1986.
- சுழிபுரம் பறாளையம்பதி அருள்மிகு சிவ சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ், புலவர் வை.க.சிற்றம்பலம், ஸ்ரீசிவ சுப்பிரமணிய சுவாமி கோவிற்தர் மகர்த்தா சபை, 1997.
- அச்சுவேலி - நாவலம்பதி காட்டுமலை கந்தசுவாமி பேரில் புதிய பிள்ளைத் தமிழ், சி.சிவலிங்கம், சி.இராஜினிதேவி, திருமகள் அழுத்தகம் சுன்னாகம், 1998.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமக் குயவன் வனைவதற்கு ஏது

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

மனதினுள் வேதனை சுரந்து, நிறைந்து கொண்டிருந்தது. எவரும் எதிர்பாராத துன்ப மூட்டத்துள் உலகமே அகப்பட்டுத் தவித் துக்கொண்டிருக்கிறது. கண்களுக்குத் தெரியாத கொரோனா வைரஸ் என்னபாடு படுத்துகிறது! நாளிதழைப் பார்க்கவே பய மாகவிருந்தது. மரண எண்ணிக்கை அதிகரி த்துக் கொண்டிருப்பதை அது புள்ளிவிவரத் துடன் தலைப்புச் செய்தியாக்கியிருந்தது. வெளியே எங்கும் போகவியலாது. தொற்று நோயின் அச்சுறுத்தல் தடையிட்டு வைத் திருக்கிறது.

என்ன செய்யலாம்?

ஏதாவது சமயம் சார்ந்த நூலொன்றை வாசிப்பது

மனதிற்கு இதமாக இருக்கும் போலிருந்தது. சென்று தேடியபோது குல.சபாநாதன் அவர் கள் எழுதிய நல்லூர் கந்தசுவாமி முன்வந்து நின்றார். கையில் எடுத்தவேளை, மனம் கரைந்தது.

கந்தா! போர் போயிற்று. இனி நாளும் உனைக் கண்டு வணங்கலாம். வேறு நாடு களில் வாழ்வோரும் விரும்பிய வேளை வந்து தரிசிக்கலாம் என்று மகிழ்ந்தோமே. இன்று பக்கத்துத் தெருவில் வாழ்வோர்கூட பார் த்துப் பரவமுடியாத நிலை ஏன் ஏற்பட்டது? தொற்றுநோய் உன்னையும் தூர விலக்கி விட்டதே. உள்ளம் புலம்பியழ புத்தகத்தை எடுத்து பக்கங்களைப் புரட்டினேன். கோவில் திருவிழாக்கள் இவை தொடர்பான பல விடயங்கள் முதலான பலவற்றையும் மனக்கண்கள் காணத் தொடங்கின. முருகன் பேரில் எழுந்த பாமாலைகளையும் தொகுத்திருந்தார்.

நல்லூர் முருகன் மேல் பக்தி கொண்ட பாவலர்கள் அனைவருமே அவனைப் பாடிப் பரவி பாமாலைகளை அவனுக்குச் சூட்டி வந்துள்ளனர். இதனால் நல்லூரான் பொன் னடிகளில் மலர் மாலைகளும் பொன்னாபர ணங்களும் குவிந்திருப்பது போன்று பாமா லைகளும் நிறைந்து காணப்படுகின்றன. தமி ழிலக்கிய வகைகள், காலத்திற்குக் காலம் வேறுபட்டு வளர்ந்து வந்துள்ளதை அனை வரும் அறிவர். அவ்வாறு தமிழில் காணப் படும் இலக்கியவகைகள் அனைத்திலும் நல்லூரானுக்கு அழகழகான தமிழாபரணங் களை பாவாணர்கள் ஆக்கி, அணிந்து மகிழ்ந்து வருகின்றனர். அத்தகைய பாக் களே அதில் தொகுக்கப்பட்டு, படிக்கும் போது மனதிற்கு ஆனந்தமளித்தன. அவற் றுள் ஆழ்ந்திருந்த வேளையில், ஓரிடத்தில் என் கண்கள் சிக்கிக்கொண்டு அப்பால் செல்ல மறுத்தன.

இலங்கைத் தமிழிலக்கியத்தில் பல் வகைப் பிரபந்தங்கள் தோற்றம் பெற்று, பிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலம் பெற்றிருந்த காலத்தில், நல்லையில் அருளாட்சி புரியும் பிரபு பேரில் எழுந்த பக்தி இலக்கியங்கள் பிரபந்த வகைகளாக அமைந்தன. அவ்வாறு பாடப்பட்ட நல்லைக் கலித்துறை அங்கிருந்து என் மூளையை ஈர்த்தது. இலக்கியச் சுவை பொதிந்த பக்தி நிறை கலித்துறைப் பாடல்கள் ஆழச் சிந்திக்க வைத்தன. இதனை யாத்தவர் வல்லிபட்டி குமாரசுவாமி முதலியார் என்ற பதிவு அதன் கீழே காணப்பட்டது. யார் இவர்? என்று என்னுள் எழுந்த வினாவிற்கு பின்னொரு நாள், இன்று எல்லோரும் செய்வது போல் இணையத்துள் பதில் தேடி பெற்றுக் கொண்ட விபரங்களை முதலிலே தருகிறேன். அருமையான கலித்துறை யாத்த பெருமை நிறை புலவருக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியது நம் கடமையல்லவா? நம்நாட்டு இலக்கியப் புதையல்களைத் தேடிச் சேமித்துக் கொண்டிருக்கும் நூலகம் இணையத் தளம் குமாரசுவாமி முதலியார் பற்றிய தகவல்களைத் தந்தது. மண்ணின் மைந்தர்களிடமிருந்தும் சிலவற்றைப் பெற்றுக் கொண்டேன். அறிந்து கொண்டவற்றுள் இவ்வாக்கத்திற்கு தேவையானவை வருமாறு.

யாழ்ப்பாணம் வடமராட்சியில் அமைந்திருக்கும் வல்லிபட்டியில் வாழ்ந்திருந்த கதிர்காமபூப முதலியார் வள்ளியம்மை தம்பதியினருக்கு புத்திரனாக 11-08-1791 அன்று குமாரசுவாமி முதலியார் வந்துதித்தார்.

தாயார் வள்ளியம்மையின் தந்தை சந்திரசேகர முதலியார் நன்கு கற்றறிந்த புலமையாளராவார். நொண்டிப்பாடல் எனும் நூலை எழுதியவர். இவரது மைந்தர்கள் குமாரசாமிப் புலவர், முத்துக்குமார முதலியார் ஆகிய இருவருமே கல்வியிற் சிறந்து விளங்கினர். குமாரசுவாமி முதலியார், தாய் மாமன்மாரிடமே இலக்கண இலக்கியங்கள் இசை முதலியவற்றைக் கற்று தேர்ச்சி பெற்றார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிவகாமிப்பிள்ளையை இவர் திருமணஞ் செய்தார். சபாபதி முதலியார், கதிரவேற்பிள்ளை ஆகிய இரு புதல்வர்களும் மீனாட்சிப் பிள்ளை எனும் மகளும் இவர்களது வாரிசுகளாவர். இளைய மகன் கதிரவேற்பிள்ளை நீதிபதியாகப் பணியாற்றியவர். தமிழ் சொல்லகராதியை உருவாக்கிய உவைமன் கதிரவேற்பிள்ளை இவரே.

குமாரசுவாமி முதலியார் பல நூல்களை எழுதி தமிழுக்குப் பணியாற்றியவர். அக்காலத்தில் உரைநடை வழக்கிலிருக்கவில்லை. வித்தியா தர்ப்பணம் என்னும் பத்திரிகையில் கல்வி பற்றி செய்யுள் நடையில் முதலியார் பல ஆக்கங்களை எழுதி வந்தார். உதயதாரகை பத்திரிகையிலும் இவரது ஆக்கங்கள். வெளிவந்துள்ளன. இவரால் எழுதப்பட்ட நூல்கள் வருமாறு-

**நல்லைக் கலித்துறை**
**தீருவில் சுப்பிரமணியர் பதிகம்**
**மூளாய் சித்திவிநாயகர் பேரில் ஊஞ்சல்**
**கந்தவனநாதர் ஊஞ்சல்**
**இந்திரகுமார நாடகம்**
**அருளம்பலக் கோவை**
**கோப்பாய் பலானை சுப்பிரமணியர் ஊஞ்சல்**
**வல்வெட்டித்துறை தீருவில் சுப்பிரமணியர் பதிகம்**
**வல்வெட்டித்துறை பெரியம்மன் பதிகம்**
**வல்வெட்டித்துறை பெரியம்மன் ஊஞ்சல்**
**வல்வெட்டித்துறை கற்பகப்பிள்ளையார் பதிகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைவிட இவர் எழுதிய செய்யுள்களை உடுப்பிட்டி சி.ஆறுமுகம்பிள்ளை அவர்கள் 1887ஆம் ஆண்டு தொகுத்து குமாரசுவாமி முதலியார் கவித்திரட்டு எனும் நூலாக வல்லை பாரதி முத்திராட்ச சாலையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். கிறிஸ்தவ கீர்த்தனங்களையும் முதலியார் பாடியுள்ளார்.

குமாரசுவாமி முதலியாரால் பாடப்பட்ட நல்லைக் கலித்துறை என்னைக் கவர்ந்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. எட்டுப் பாடல்கள்தான் அதில் அடங்கியிருந்தன. அவை அனைத்தும் கலித்துறைப்பாக்கள். அக்காலத்தில் பா வகைகள் பல இருந்தன. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா என பாவகைகளின் பட்டியல் நீளும். அந்தப் பாவகைகளுள் ஒன்றையோ, பலவற்றை இணைத்தோ புலவர்கள் பாடினார்கள். கவிஞர் ஒருவர் தன் மனதில் தோன்றியதை எழுதிவிட்டு, இது பா என்று கூறமுடியாது. அந்தப் பாவிற்குரிய இலக்கண வரையறைக்குட்பட்டதாகவே அதைப்பாடவேண்டும். தவறாகப் பாடினால் அதை பாடலாக ஏற்கமாட்டார்கள். இதனால் அவற்றின் ஓசை நயம் உள்ளங்களை வசப்படுத்துவது வழமை.

**ஆனியி லாடிய வாவணி** என முதலாவது பாடல் ஆரம்பமாகியது. மூன்று மாதங்களின் பெயர்கள் தொடராக வந்தாலும் அவை அனைத்தும் மாதங்களை சுட்டுவதாகத் தெரியவிலலை. அடுத்து வந்த பாடல்களின் முதல் வரிகளும் மாதங்களின் பெயர்களைக் கொண்டமைந்திருந்தமை சுவாரஸ்யமாக இருந்தது. இதே போன்று ஊர்களின் பெயர்களைக்கொண்டு யாக்கப்பட்ட பாவை இரசித்து மகிழ்ந்த ஞாபகமும் வர இது அக்காலப் புலவரின் சொல் விளையாட்டு என்பது விளங்கியது. மூளைக்கு வேலை தரும் இதையொத்த பாடல்களைப் பாடுவோரின் திறமை போற்றப்பட்ட காலம் அது.

அன்று அணியலங்காரங்களுடன் யாக்கப்பட்ட செய்யுள்களே வரவேற்புப் பெற்றன. அணியிலக்கணம் தனியிலக்கணமாகக் கற்கப்பட்டது. உவமை, உருவகம், அவநுதி முதலியவற்றுடன் அவற்றின் பல பிரிவுகளும் அடக்கப்பட்டு அணியிலக்கணம் விரிந்து கிடந்தது. சிலேடையாகப் பாடப்படும் செய்யுள் படிக்கும்போது ஒரு பொருளைக் காட்டி உள்ளார்ந்து நோக்கும்போது, சுவை சொட்டும் மற்றொரு மறை பொருளையும் தந்து நிற்கும். மீளவும் மீளவும் இரசிக்குந்தொறும் சுவையூற்றுப் பெருகி வரும். இத்தகு சிலேடை பாடுவதில் குமாரசுவாமி முதலியார் வல்லவராக இருந்திருக்க வேண்டும். நல்லைக் கலித்துறை தோன்றிய கதையும் அப்படியே நினைக்க வைக்கிறது.

நல்லூரில் இருந்த ஒருவர் பன்னிரு திங்கள்களையும் தொடக்க அடிகளாகக் கொண்டு நல்லைக் கந்தன் பேரில் கலித்துறை பாடித் தருமாறு வேண்டிக் கொண்டதனாலேயே முதலியார் நல்லைக்கலித்துறையை யாத்ததாகக் கூறுகிறார்கள். வல்லவர் ஒருவர் இருப்பதாக அறிந்ததனாற்றான் அவரிடம் பாடல் கேட்டு வந்திருக்க வேண்டும். அந்தக் கோரிக்கையை ஏற்று, அற்புதமான பாக்களை முதலியார் பாடினார்

முதலாவது பாவினைத் தொடர்ந்து வந்தவற்றிலும் மூன்று, மூன்று மாதங்களாக இடம்பெறவைத்து, பன்னிரண்டு மாதங்களையும் நான்கு பாடல்களிலும் புலவர் இணைத்துள்ளார். பெயர்கள் வந்திருந்தாலும் அவை அனைத்தும் மாதங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுவதாகத் தோன்றவில்லை. நோக்கு வோரின் பார்வையைப் பொறுத்து அவை பொருள் தந்தன. ஆனியில் ஆடியவா என பதம்பிரித்தால் ஆனியில் நீராடியவனே எனப் பொருள் கொள்ளலாம். ஆனியில் தீர்த் தோற்சவம் கண்டவனே எனக் கருதலாம். தலைவியுடன் களித்திருந்தவனே என்றும் கருத்துக் கூறலாம். வானளந்து வளர்ந்த நந்தவனஞ் சூழ்ந்த நல்லூர் தலைவனே அழகியபூங்கொடி, மயிலையொத்தவள். அவளை நீ மறந்துவிட்டாய். அவள் இறக்கப் போகிறாள். அவளின் சாபறை கேட்டால் உனக்கு இழுக்கு. அவ்வாறு ஈனமுறுமுன்னர் எங்கள் இறைவா அவளிடம் சென்றுவிடு. எனும் பொருள் பொருந்திய தான

**ஆனியி லாடிய வாவணி**
**பூங்கொடி யண்ணறகு**
**வானிய னந்த வனஞ்சூழு**
**நல்லை மயிலனையா**
**டானு மறந்தன ணீபொருட்**
**கேகுறிற் சாபறைகேட்**
**டீனமுறுமுன் விரைந்துசெல்**
**வாயஎம் மிறையவனே**

என்று முதலாவது பா அமைந்துள்ளது. இது நல்லூரின் அழகை மனக் கண்களின் முன் கொண்டு வந்து உள்ளத்தைக் கொள்ளை யிடுகிறது. இதையொத்த வருணனைகள் ஏனைய சில பாடல்களிலும் உள்ளன. அவற் றைக் கவனத்தில் எடுக்காது அப்பால் செல் வது கடினம். கடையவர்கள் கல்லை எறிய தென்னைகளிலிருந்த குரங்குகளுக்குக் கோபங்கனல்கிறது. அவை பற்களைக் காட்டி உறுமி பதிலாக தேங்காய்களைப் பறித்து எறிகின்றன. அத்தகு வயல்கள் சூழ்ந்த நல்லை எனப் புகழ்கிறது ஒரு பாடல். இடைக்குலப் பெண்கள் கட்டித் தயிரை மத்தினாற் கடைகின்றனர். அதில் எழுந்த ஒலியை குட்டிப்புலியின் சப்தம் என்றெண்ணி புலி குமுறுகிறது. அப்புலிகளுள்ள எல்லை யோரக் காடுகள் அண்மித்திருக்கும் நல்லூர் என்று போற்றுகின்றது மற்றொரு பா.

**கட்டித் தயிரை யிடைச்சியர்**
**மத்திற் கடையப்பிரி**
**குட்டிப் புலியொலி யென்றே**
**புலிகுமு றும்புறவம்**
**கிட்டிக் கிடக்கின்ற நல்லையில்**
**வேலற்குக் கிள்ளைப் பிள்ளாய்**
**எட்டிச்சற் றேசென்றெ னுள்ளஞ்சொ**
**லாய்பின்னை யென்சொல்வதே**

என்பது அந்தப் பா. கிள்ளைப் பிள்ளாய் சற்றே எட்டிச்சென்று அத்தகு நல்லையின் வேலவனுக்கு என் உள்ளத்தைச் சொல்ல மாட்டாயா? என்ற தலைவியின் கெஞ்சல் மனமுருகச் செய்கின்றது.

இவற்றைப் பார்த்ததும் சிற்றின்பம் நாடி பாடிய பாடல்களாகவே தோன்றியது. நல்லை ஐயனை எதிர்நோக்கிப் பார்த் திருந்த அத்தலைவியின் கண்கள் வேறெங் கும் மீளவில்லை. அவளது மேனியில் பசலை படர்ந்து காணப்படுகிறது. பூவை, ஆவி போகப்போகிறது எனக் கூறிய வண்ணம் இருக்கிறாள். தன் நிலையை வேலவனிடஞ் சென்று தெரிவிக்குமாறு முகில்களிடம் கோருகிறாள். இவை அனைத்துமே காதல் கொண்ட தலைவி தலைவனின் செயற்பாடு களேயாகும்.

ஆனால் தொடர்ந்து வந்த பாடல்களைப் பார்த்த பின்னர் ஊன்றி உட்சென்றால் அவை பேரின்பந்தேடும் பாடல்கள் என்று ணரலாம். மரணம் அடையாது முத்திப் பேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிட வேண்டுமென அடியவர்கள் உருகி யுருகி வேண்டுவதை நாம் பலரது பாடல் களில் காணலாம். மரணப் பொறியுள் வீழ் பவர் மீளப் பிறவியெடுத்து நலிவர். வீடுபேறு பெற்றோருக்கு பிறப்பும் இறப்பும் கிடையாது. எனவே எமனின் கைப்படாது காப்பாற்று என் பதே அடியவர்களின் வேண்டுதலாக எப்போ தும் இருக்கிறது. நல்லைக் கலித்துறையிற் கூட

**பாசார்ந்த வின்சொற் பரத்தையர்**
**கூடிச்செய் பாவவெந்நோய்**
**போகா ஞமபுரம் போக்குமு**
**னல்லையிற் போமினங்கோர்**
**சாகா மருந்துண்டஃது செவ்வேள்**
**சற்றுட்கொண் டிடில்விட்**
**டேகாத நோயுமுண் டோநம**
**னார்பின்னை யென்செய்வதே**

பாசங்கூட்டிய இனிய சொற்களைப் பேசும் கணிகையருடன் கூடிச் செய்யும் பாவக் கொடு நோய் நம்மை விட்டுப் போகாது. யமலோகத்திற்கு நம்மை அது போகச் செய்யும். அதற்கு முன் நல்லூரு க்குச் செல்லுங்கள். அங்கு இந்நோய்க்கு ஒரு மருந்து இருக்கிறது. அம்மருந்து அங்கி ருக்கும் செவ்வேள். அதனை சிறிதளவு உட் கொண்டால் போதும். எந்தக் கொடுநோயும் தீர்ந்துவிடும். பின்னர் எமன் என்ன செய்ய வியலும்? என்பது மேற்காணும் செய்யுளின் பொருள். இது உள்ளத்துட்பட்டதுந்தான் மூளை விழித்துக் கொண்டது. சாப்பறை கேட்கும் மரணம் வருமுன் நீ வந்து ஆட் கொள் ஐயா என்று ஆன்மா ஏங்கி நிற்பதே இப்பாடல்கள் கூறும் பொருள். எனக்குச் சாவு வேண்டாம். வீடுபேறே வேண்டும் என ஆன்மா கோரிக்கை விடுக்கிறது.

இறப்பு நிகழ்ந்தால் பின்னர் பிறப்பு நடை பெறும். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்கள் தொடர முத்தி பெறாத ஆன்மாக்களிருப்பதே காரணம். வீடுபேற டைந்தோர் அதிகரிக்க மும்மூர்த்திகளின தும் வேலை குறைவடையும். இதனை அற்புதமாகப் பாடியுள்ளார் குமாரசுவாமி முதலியார்.

**தேசா ரிளமுலை மானார்**
**கலவியிற் சிக்கியவர்**
**பாசாங்கிற் பட்டுப் பதைத்துழன்**
**றேனல்லைப் பண்ணவனே**
**ஈசா வளியனை யிந்நாளுஞ்**
**செய்துகை தேய்ந்தகம**
**லாசாரி கைக்கினிப் பண்ணக்**
**கொடாதெனை யாட்கொள்வையே.**

தேசு நிறைந்த மார்பகங்களையுடைய மானைப் போன்ற பெண்களின் உறவிற் சிக்கி அவர்களது பாசாங்கிலே அகப்பட்டு பதைத்து உழல்கிறேன். இவ்வளவு கால மும் எனது பல பிறப்புகளையும் செய்து செய்து கைகள் தேய்ந்த தாமரையில் வீற்றி ருக்கும் பிரமா மீண்டும் படைப்பதற்கு அவனது கைகளில் என்னைக் கொடுக் காதே ஈசா என்னை ஆட்கொள்வாய் எனப் பிரார்த்திக்கையில் பிறப்பைத் தவிர்க்க முத்தி பெற வேண்டும் எனும் கருத்து அதில் தெரிகிறது. பிறப்புகளை உருவாக்கியதால் படைத்தற் கடவுளின் கைகள் தேய்ந்து விட்டதாகக் கூறுவது நயக்கத்தக்கதா கும். மற்றுமொரு பாடலிலும் பிரமனின் படைப்புத் தொழில் இரசித்து மகிழும் வகை யில் உருவகிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

11091(P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்லைக் கடையர்கள் கைவிட்**
**டெறியக் கனன்றெழுந்து**
**பல்லைத் திறந்துறு மிக்கவி**
**தேங்கின் பழமுதிர்க்கு**
**மல்லற் பழனங்கள் சூழ்நல்லை**
**நாதனை வந்தடைந்தோர்க்**
**கில்லைப் பிரமக் குயவன்**
**வனைவதற் கேதுக்களே.**

எனும் பாவின் முற்பகுதியை முன்னரே நயந்துள்ளோம். இறுதி இரண்டு அடிகள் பிரமனைக் குயவனாக்கி அவனது படைப்புத்தொழிலை வனைதலாக்கி தத்துவப் பொருளை விளக்குகின்றன. அடியவர்கள் நல்லையம் பெருமானை வந்தடைந்து வீடு பேறடைவதனால் பிறப்பிறப்பு அற்றுப்போக படைப்பதற்குக் காரணம் இல்லாது போய் விடுகிறது. பிரமனுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகிறது.

ஏன் ஏற்பட்டது?

மனதுள் எழுந்து குழப்பிய வினாவிற்கு விடை பளீர் எனத்தெரிகிறது. இப்படி மனித சமுத்திரமாக அடியவர்கள் நல்லையில் வந்து வழிபட்டால் அத்தனை ஆன்மாக்களும் முத்தியடைந்தால் பிரமக்குயவன் தொழிலற்று நிற்க நேருமே. அதைத் தவிர்க்கக் கையாண்ட தந்திரமோ!

**நல்லையிற் போமினங்கோர்**
**சாகா மருந்துண்டு. அஃது செவ்வேள்**
**சற்றுட்கொண் டிடில்விட்**
**டேகாத நோயுமுண்டோ?**
**(நல்லைக் கலித்துறை)**



**2020ம் ஆண்டு நல்லைக்குமரன் மலர் வெளியீட்டின் போது ...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரண மக்களுக்கான அரங்கத் தேவையும் சூரன்போர் சடங்கும்

நிருஜா இராசரத்தினம்
ஆய்வரங்கக் கட்டுரை

**அறிமுகம்**

சூரன்போர் சடங்கானது தற்காலத்திலே இடைவினைத் தொடர்புகள் தர்க்கப்பட்டுப் போன நிலையில் இதன் சமகாலப் போக்கின் பங்குகொள் நிலையினுடாகவே இதனை ஆராய வேண்டியுள்ளது. இன்று எம் கைகளில் மிஞ்சியிருக்கும் இக்கலை மரபினை மேலும் ஊக்குவித்து பேண் நிலையின் முக்கியத்துவத்தினை தெளிவுபடுத்த வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது. அரங்கின் மீது சாதாரண மக்களுக்கு தீராத மோகம் காணப்பட்டாலும் இன்றைய அரங்கின் கல்வி முறைகளும் கோட்பாடுகளும் அவர்களை அன்னியப்படுத்தி விட்டதை உணர்கின்றோம். எத்தனை கலைஞர் கள் தம் கலைகளை இன்று வெளிக்காட்டத் தயங்குகின்றனர். எனவேதான் உள்ளிருக்கும் மக்களை வெளிக் கொண்டு வருவதற்கான அரங்கு எமக்குத் தேவையாக இருக்கின்றது.

இவ் அரங்கானது வெளிவரும் மக்களின் சுதந்திரமான செய்கைகளையும், சுதந்திரமான பேச்சுக்களையும் வெளிப்படுத்த பயன்படுத்தப்பட வேண்டும். நம்மிடையே உள்ள சடங்கு அரங்கு நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான மக்களை தன்பால் கொண்டு இன்னும் இயங்குகின்றது. மக்களிடம் சென்று தாக்கம் செலுத்தி அவர்களை ஈர்த்து அன்று தொடக்கம் இன்று வரை தன்னகப்படுத்தியுள்ளது. எனவே அன்னியப்பட்ட மக்களின் அரங்கத்தேடலில் அவர்களின் சுயாதீனத்தையும், கலைகளையும் முன் நிறுத்துவதற்கு நாம் சடங்கு அரங்கிற்குள் மீளத்திரும்ப வேண்டிய அவசியம் இல்லை. சடங்குகளில் காணப்படும் நல்ல இயல்புகளை கொண்டும், தற்கால அரங்கில் இயல்புகள் சிதையாமலும் நாம் இவ் அரங்கை கொண்டாடலாம்.

இவ்வாறான ஒரு அரங்கத்தேடலில் சூரன்போர் சடங்கை முன்னிறுத்துவது முக்கியமானதாகும். முருகன் சூரனை சங்காரம் செய்து தேவர்களைக் காத்த அருட் செயலைக் குறிக்கும் இவ்விழாவின் ஆறாம் நாள் முருகன் ஆலயங்களில் "சூரன் போர்" என்னும் சமய நிகழ்வு நாடக பாணியில் நடைபெறுவது வழக்கம். பார்வையாளரும் பங்காளராக மாறி சூரன்போர் சடங்கினை நிகழ்த்துவர். கோயில் வெளி முழுவதுமாக ஆற்றுகை இடம்பெறும். களம் முழுவதும் அங்குமிங்கும் திரிந்து ஆற்றுகையினைப் பார்ப்பார்கள். நிகழ்த்துவோருக்கும், பார்வையாளர்களுக்கும் களம் ரீதியான கட்டுப்பாடு கிடையாது. அவர்கள் தம் விருப்பப்படி பார்வையாளராகவும் பங்காளராகவும் காணப்படுவர். பெருவாரியான கூட்டத்தின் மத்தியில் ஆற்றுகை நிகழ்த்துவதற்கு களம் (வெளி) மிகவும் அவசியம். தொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டு மனிதன் சடங்கில் பங்குகொண்டு சடங்கை நிகழ்த்தி அதனோடு இணைந்து ஆடிப்பாடி தன்னை வெளிப்படுத்த இந்த வெட்ட வெளியான களங்களே உதவின. மேலும் வெட்ட வெளியான களங்களில் வெளிப்பாடும் செய்கையும் அதிகமாக வெளிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இங்கே வெளிகளிலே தம்மை மறந்த மனிதர்கள் கூச்சலிட்டு கத்தி ஆர்ப்பரித்து ஆடிப்பாடினர். செய்கைகள் யாவும் அவர்களின் மனங்களை தூய்மைப்படுத்தி அமைதியடையச் செய்தது. இதன் மூலம் அவன் தானாகவே குணமடையலானான்.

**சூரன் போர் (கந்தசஷ்டி)**

இவ்விழாவின் ஆறாம் நாள் "சூரன் போர்" நாடக பாணியில் நடைபெறுவது வழக்கம். இங்கு சூரர்களின் உற்பத்தி நிகழ்ச்சி கூறப்படுகின்றது. மாயையும் காசிபரும் சந்தித்தல், சூரர்கள் பிறத்தல், சூரர்கள் சிவபெருமானை நோக்கித் தவம் இருத்தல், சிவபெருமான் வரம் தருதல் ஆகிய நிகழ்ச்சிகள். சூரன் திக்கு விசயம் மேற்கொண்டு தேவர்களை அடிமையாக்கிய நிகழ்ச்சிகள் சொல்லப்படுகின்றன. இந்திரன், அக்னி, எமன், நிருதி, வருணன், வாயுதேவன், குபேரன், ஈசானன், பிரம்மா, சூரியன், சந்திரன், விஷ்ணு ஆகியோரை அடிமை கொள்கின்றான் சூரன் தேவர்களைச் சிறையிலிட ஆணையிடுகிறான். பானுகோபன் அவர்களை சிறையிலிட தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். சூரன் தொல்லையை பொறுக்க முடியாமல் சிவனிடம் முறையிட சிவபெருமான் முருகனையும் நவ வீரர்களையும் சூரனைக் கொல்ல அனுப்புகின்றனர். வழியில் தாரகனையும் அவனது மலையையும் அழிக்கின்றார் முருகன்.

தாரகன் மகன் அசுரேந்திரன் சூரனிடம் தன் தந்தை மரணம் பற்றி குறிப்பிடுகின்றான். வீரவாகு சூரன் அவையை அடைந்து தர்க்கம் நடத்துகின்றார். முடிவில் வீரவாகு வச்சிரவாகுவைக் கொன்று நகரை அழித்து முருகனை அடைகின்றார். இப்பகுதியில் அழிந்த நகர் பிரம்மாவால் மீண்டும் சரி செய்யப்படுகின்றது. சிங்கமுகன் சூரனுக்கு அறிவுரை கூறுகின்றான். அதனை ஏற்காத சூரன் பானுகோபனைப் போருக்கு அனுப்புகிறான். பானுகோபனுக்கும் வீரவாகு தேவருக்கும் சண்டை நடைபெறுகின்றது. இறுதியில் பானுகோபன் கொல்லப்படுகிறான். பானுகோபன் மாண்டது அறிந்த சூரன் புலம்புகின்றான். சிங்கமுகன் போருக்குப் புறப்படுகிறான். வீரவாகு தேவருக்கும் சிங்கமுகனுக்கும் கடும் சண்டை நடைபெறுகிறது. சிங்கமுகன் வீரவாகுவையும், பூதரையும் மாயையால் கட்டி உதயகிரிக்கு அப்பால் தள்ளி விடுகின்றான். அதன் பின்னர் முருகன் சிங்கமுகனோடு போரிட்டு அவனை கொல்கின்றார். சிங்கமுகன் இறந்ததை கேட்டுச் சூரன் புலம்புகின்றார். பின்னர் சேனைகள் புடைசூழ யுத்த களத்திற்கு விரைகிறான். இதேபோல் நாரதர் மூலம் செய்தியறிந்த முருகன் நவவீரர்கள், பூத கணங்கள் புடை சூழ போருக்குப் புறப்படுகின்றார். முதலில் வீரவாகுத் தேவருக்கும் சூரனுக்கும் போர் நடைபெறுகின்றது. இதில் சூரன் வீரவாகுவை அறைந்து வீசி விடுகின்றான். இதற்குப் பின்னர் முருகனுக்கும், சூரனுக்கும் நேரடிப் போர் நடைபெறுகின்றது. இறுதியில் சூரசம்காரம் நிகழ்கின்றது.

சூரசம்காரம் முடிவில் முருகன், மாமரமாக நின்ற சூரனை தன் சக்தியாகிய வேலினால் பிளந்தார். பிளவுபட்ட மாமரம் சேவலும் மயிலுமாக மாறவும் சேவலை கொடியாகவும், மயிலை வாகனமாகவும் முருகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொண்டார். இது கந்த புராணத்தில் சொல்லப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும் சூரனை அழித்த முருகப் பெருமானின் விரதம் முருகன் சூரனை சங்கரித்த பெருமையைக் கொண்டாடுவதே கந்தசஷ்டி விழாவாகும்.

**நிகழ்த்துகையும், ஆட்டமுறைமையும் சூரன்**

சூரன்போரிலே சக்கரத்தில் நிறுத்திய சூரன், சக்கரத்தில் நிறுத்தாத சூரன் என இரண்டு வகையுண்டு. சக்கரத்தில் நிறுத்திய சூரன் இங்கு ஆட்டத்திற்கு உகந்ததாக காணப்பட்டது. இந்த சூரனை ஆட்டும் போது கம்பீரம் தோன்றும். அதுவே மற்றய தைக் காட்டிலும் கலைத்துவமாக மக்களை ஈர்த்து வைக்கக் கூடியது. சூரனின் ஒரு கை மடித்து சக்கரமேந்தும், மறுகை ஆயுதம் ஏந்தும் அதுவே போருக்குரியது. இவ் ஆட்டக் கலையிலே பங்கு கொள்வோர் உடல் வலிமையானோர்களாக இருத்தல் வேண்டும். கொம்புகளை (காவாங்கு, திருவாத்தி) கைகளினால் பிடித்து ஆட்டுவதினால் கைகளுக்கு சிறப்பான பங்கு இங்குண்டு.

**ஆட்டமுறை**

சூரனை ஆட்டும்போது சூரனுடைய புயபராக்கிரமம் அவனுடைய மாயா சக்தி முதலியன புலப்படக் கூடியதாக ஆட்டங்களை நெறிப்படுத்தி ஆடிவந்தனர். சூரன் ஆட்டத்திலே இரண்டு விதமான ஆட்டங்கள் உண்டு. ஒன்று பொதுவான ஆட்டம், இன்னொன்று சிறப்பாட்டம். சூரன் தலைகளைப் பொறுத்து ஆட்டங்கள் அமையும். பொது ஆட்டங்கள் எல்லாத் தலைகளுக்கும் பொதுவாகத் தலைகளை மாற்றியவுடன் ஆட்டப்படும். இவ் ஆட்டங்கள் வழமை போலவே காணப்படும். இவ்வாட்டங்களின் போது வாள், வில், கதாயுதம், என்பன மாற்றப்படுகின்றன. சக்கராயுதம், தடுப்பாயுதம் ஆகும். இது மாற்றப்படுவதில்லை. மறுகையிலே இருக்கும் ஆயுதங்கள் தான் மாற்றப் படுகின்றன. தலைகள் வீழ்த்தப்படும் நேரங்களில் ஆட்டம் விறுவிறுப்படையும். சிறப் பாட்டங்கள் குறிப்பிட்ட ஒவ்வொரு தலைக் குரிய ஆட்டங்களாகவும் அமைகின்றன.

இந்நிகழ்விலே முதலிலே கஜமுகசூரன் ஆட்டத்தைத் தொடருவான். இங்கு சூரனைக் காவுவோர் சூரனை வலம், இடம் என கைளிலே தாங்கி சரித்துப்பிடித்த வண்ணம் முருகனை வலம் வருவர். சூரன் பாசாங்கு செய்வதைப்போல இவர்கள் காவாங்குகளோடு கூடிய சூரனை தோளிலே சுமந்து பாசாங்கு செய்வர். கைகளால் தூக்கி எறிந்து, பிடித்தும், சரித்தும், நிமித்தியும் பல கோணங்களில் வித்தைகளை செய்வார்கள். கஜமுக சூரனை முதலிலே கொண்டு வந்து ஆட்டும்போது யானைக்குரிய இயல்புத்தன்மைகளைக் கொண்டு அவ்வாட்டங்கள் ஆடப்படுகின்றன. நேரே ஓடுதல், அசைந்து அசைந்து ஓடுதல் போன்ற ஆட்டங்களை வகுத்து ஆடி வந்தனர். அடுத்ததாக சிங்கமுகன் தலையைப் போட்டு ஆடும் போது சிங்கத்தின் வேகமும், ஆவேசமும், பாய்ச்சலும் ஆட்டுவோரின் செய்கையிலேயும் காணப்பட்டது. இங்கு ஆட்டம் வீரம் மிகுந்தாகவும் ஆவேசம், விறுவிறுப்பு உடையதாகவும் காணப்பட்டது. சில ஆட்டமுறைகள் ஆட்டப்படும் தன்மையினைக் கொண்டும் வகுக்கப்பட்டுள்ளது.

**வள்ள ஆட்டம்**

கடலிலே வள்ளம் எப்படி ஆடுமோ அதைப் போலவே சூரனை இடம் வலமாக ஆட்டி வரும் முறையாகும். கைகளைப் பதித்து கைகளிலே சூரனை ஏந்தி தாலாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதைப் போலவும், கால்களை அங்கும் இங்குமாக வைத்து தாமும் வள்ளத்தினைப் போல ஆடி வருவர்.

**ஓட்டக ஆட்டம்**

இவ் ஆட்டமானது சிறப்பு ஆட்ட வகைக ளுக்குள் அடங்கும். ஒரு ஆட்ட வகையா கும். "இவ் ஆட்டத்தை ஒருவர் தோள் மீது ஒருவர் அமர்ந்தவாறோ அல்லது ஒருவரது தோளின் மீது ஒருவர் நின்றவாறு சூரனை அதற்கு மேலே வைத்து ஆடும் முறை இதுவாகும். இவ்வாட்டத்தினை எட்டுபேர் மட்டுமே நிகழ்த்துவர் இவ் ஆட்டத்திற்கு கூடிய மனித வலு தேவைப்படுகின்றது.

**தனி ஆட்டம்**

தனி ஆட்டம் என்பது நான்கு பேர் மட்டும் ஆடும் ஆட்டமாகும். சூரனை நான்கு பேர் மட்டும் தோளிலே காவி ஆடிவருவர். தமது உடல் நிலைக்கு ஏற்றவாறு தாளத்திற் கேற்ப ஆடலையும் நிகழ்த்துவார்கள்.

**வட்டம் போடுதல்**

முன் தலை கொம்பை ஒரு சாரார் நிலத்திலே பதித்து ஊன்றி பிடிக்க பின் பக்க கொம்பினைப் பிடிப்பவர்கள் உயர்த்தி சூரனை சுற்றுவதன் ஊடாக நிலத்தில் வட்டம் கீறுதல் இது பின் தலைக் கொம் பிற்கும் இடம்பெறும். பார்ப்பதற்கு சுவார ஸ்யமான முறையிலே காணப்படும்.

**சரிவாட்டம்**

ஒரு பக்கத்தில் நிற்போர் கைகளிலே பதித்து தாங்க மறுபக்கத்தில் இருப்போர் தண்டை உயர்த்தி தலைக்கு மேலே பிடிக்க சூரன் சரிந்த வண்ணம் முருகப்பெருமானை சுற்றி வருதல் இவ் ஆட்டமாகும்.

**நேராட்டம்**

முருகனுக்கு நேரே சூரனைக் கொண்டு ஓடிச் சென்று திரும்பி பின்தலைக் கொம்பு பக்கமாக திருப்பி ஓடுவார்கள். இவ் ஆட்டம் அனைத்து தலைகளுக்கும் ஆட்டப்படும் பொதுவான ஒரு ஆட்டமாக காணப்படுதல்.

**வளைவாட்டம்**

வளைந்து நெளிந்து முருகனை சுற்றி ஆடும் ஆட்டம் இதுவாகும். முதலில் முன்பக் கத்தாலும் பிறகு பின்பக்கத்தாலும் வளைப் பதன் ஊடாக இதனை நிகழ்த்துவர். கொம்பு பிடிப்போர் இதனை நெறிப்படுத்தி வலம் இடம் என ஏனையோரை திரும்ப வைப்பர்.

**சிறப்பாட்டம்**

சிறப்பாட்டத்தின் உள்ளே சூரனின் கொம்புகளை கையிலே பதித்து ஏந்தி எண்ணிக்கை வைத்து சூரனை எறிந்து பிடித்தல் இவ் ஆட்டமாகும். முதலிலே எத் தனை தரம் எறிந்து பிடித்தல் என்பதை தீர் மானித்து விடுவார்கள் அதற்கு ஏற்ப கொம்பு களை எறிந்து கைகளில் சூரனை ஏந்துவார் கள்.

**தோப்புக்கரணம் போடுதல்**

சூரனை கைகளில் ஏந்திக் கொண்டு அவர்கள் தாம் தீர்மானித்த எண்ணிக் கையை கொண்டு எண்களை உச்சரித்த வாறு நிலத்திலே இருந்து தோப்புக்கரணம் போடுவதை போல எழுவார்கள். இத்தோப்பு கரணம் ஒன்றிலிருந்து நூறு தடவை கூட இடம்பெறும்.

**ஆற்றுகையை வழிநடத்துவோர்**

இவ்வாறான ஆட்டங்களின் போது காவு தடியின் முன், பின் புறங்களில் இருவர் வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துபவர்களாகக் காணப்படுவர். அவர்கள் தான் ஆட்டத்தை எங்கு நிறுத்துவது, எங்கு தொடருவது எந்த திசையில் நகர்த்துவது என ஏனையோருக்கு அறிவுறுத்துபவர்களாக காணப்படுவர். ஆட்டத்தினை மாற்றும் போதும், அடுத்து என்ன செய்யப் போகின்றோம். எந்த எந்த ஆட்டங்களை நிகழ்த்தப் போகின்றோம் என்பதையும் கூடித்திட்டமிடுவர். கொண்டு வழிநடத்த குழுவிலே சிலர் காணப்படுவர். விறுவிறுப்பு, வேகம் என்பவற்றைக் கூட்ட அடுத்தடுத்து ஆட்டங்களை மாற்றும் போது அவர்கள் தொடர்ந்து வழிநடத்துவோரின் வழிகாட்டலில் செயற்படுவார்கள்.

**சூரன் ஆட்டக்காரர்கள்**

"இங்கு சூரனைக் காவுவோர் தம்மை அறியாமலே சூரர்களாக வெறி கொண்டு நிகழ்த்துவர்". சூரன்போருக்கான ஆட்டங்கள் தற்பொழுது வகுக்கப்பட்டவை அல்ல. அவை முன்னர் தொட்டு நிகழ்த்தப்படுகின்றது. தற்காலத்தில் இளைஞர்கள் தமது விருப்பத்திற்காகவும், தமது பலத்தைக் கொண்டும் சிலசில ஆட்டங்களை வகுக்கின்றனர். சூரன் ஆட்டத்திற்கு ஆட்பலம் மிகவும் தேவை இதில் பதினெண்மர் தேவைப்படுகின்றனர். இருவர் தீவட்டி பிடிக்கின்றனர். ஆட்டத்திற்கு ஏற்ப அங்கும் இங்கும் தீவட்டி பந்தங்களைக் கொண்டு கீழும் மேலும் பந்தங்களை அசைத்து சூரனின் உடம்பினை மின்னலிடச் செய்வர். சக்கரத்தின் பின் சூரன் பீடத்தில் நின்றாட்ட ஒருவர் இவர் எந்த நிலையினையும் சுதாகரிக்கக் கூடிய சுயம் உடையவராக இருத்தல் வேண்டும். ஆட்டத்தின் போது தன்னை நிலைநிறுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும். கால்களை உறுதியாக பீடத்தின் மேல் பதித்து நிலை கொள்ளச் செய்திருப்பார். ஆட்டங்களுக்கு ஏற்ப இவர் தனது உடலையும் சுதாகரித்துக் கொள்வார். இருந்தும், குனிந்தும், நின்றும், சரிந்தும் சூரனை இறுகப் பிடித்துக் கொண்டு மறுகையால் சூரனின் தலையினை அசைப்பார். சக்கரத்தை அசைத்துக் கொண்டேயிருப்பார். இது பார்ப்போருக்கு தனி கவர்ச்சியை வழங்கும் ஆட்டத்தின் போது இவரிடத்தே காணப்படும் துணிவானது பார்ப்போரை மெய்சிலிர்க்க வைக்கும். பக்கவாட்டில் சூரன் சரியும்போது முன்பக்கமும், பின்பக்கமும் மாறி மாறி தாழ்த்தி உயர்த்தப்படும்போதும் இவரின் அசைவுகள் உடலசைவுகள் பார்க்கும்போதே எமக்கே மெய் சிலிர்க்கும்.

சூரனை எண்ணிக்கை சொல்லி தூக்கி எறிந்து ஏந்துவார்கள் ஏந்தும் போது பீடத்தில் நிற்பவரும் சூரனுடன் சேர்ந்து போய் வருவார். கீழ் இருப்போர் காட்டும் வித்தைகள் அனைத்திற்கும் ஈடுகொடுக்கக் கூடியவராகவே பீடத்தில் நிற்பவர் மனமும் உடலும் இருக்கும். இங்கு உடல் மொழி முக்கியமாகும்.

கொம்பு பிடிப்பவர்கள், இவர்கள் இருவர் முன் கொம்பு பிடிப்பவர், பின்கொம்பு பிடிப்பவர் ஆட்டத்தின் போது சூரன் சுழண்டு வருவதன் காரணமாக முன்கொம்பு, பின் கொம்பு பிடிப்பவர்கள் தான் பார்வையாளரை கணித்தறிய வேண்டிய நிலை இருக்கும். கட்டளை இடுபவரே முன்கொம்பு பிடிப்பவராக இருப்பார். முன்கொம்புக்கு உரியவரே தலைவராக இருப்பார். இவரது கட்டளைக்கு ஏற்பத் தான் ஏனையோர் செயல்படுவதும் ஆட்டம் அரங்கேறுவதும் இடம்பெறும். மக்களால் புரிந்து கொள்ள முடியாத பதங்களையே இங்கு பயன்படுத்துகின்றனர். வழக்கமாக சூரன் ஆட்டத்தினை நிகழ்த்தும் இளைஞர்கள் அணியே பங்குபற்றுவதன் காரணமாக அவர்களுக்குள் சில சொற்கள் பயன்படுத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்படுகின்றன. இதற்கேற்ப கட்டளைகள் பரிமாறப்படும். இதனால் சூரன் ஆட்டுபவர்கள் தொடர்ந்து அடுத்ததாக என்ன செய்யப் போகின்றனர் என்பது மக்களுக்கு தெரியாமலே இருக்கும். தலைக்கொம்பை பிடிப்பவர், தலைக் கொம்பை மாத்திரம் பிடித்துக் கொண்டு செயல்படுவராக மட்டும் அல்லாமல் மாறாக ஏனையோருக்கு அறிவுறுத்துதல், ஆட்டத்தை மாற்றுதல் என ஏனைய பணிகளையும் ஒரே நேரத்தில் செய்யும் வலிமையுடையவராக இருப்பார். பின் தலைக் கொம்பினைப் பிடிப்பவர் கட்டளைக்கு ஏற்ப பின் பக்கத்திலே நிற்பவர்களை வழி நடத்திச் செல்வர்.

கட்டளைச் சொற்கள் பெரும்பாலும் மேலே நின்று சூரனின் தலையினை ஆட்டுபவருக்கும் இரு பக்க கொம்புகளைப் பிடிப்பவருக்கும் உதவுவதைக் காணலாம். கட்டளை பிறப்பிக்கப்பட்டவுடன் கொம்பு பிடிப்பவர்கள் யாவரும் தமது தோளிலே இருந்த கொம்பினை தமது கைகளில் பதித்துப் பிடிப்பார்கள். சூரனின் பீடத்தின் மேல் நின்று கொண்டிருப்பவர் உடனே சூரனின் கையிலே காணப்படும் ஆயுதத்தை ஆயுத மேந்தும் ஒருவனிடம் வீசுவார். அதே நேரம் ஆயுதம் வழங்குபர் சூரன் ஆட்டுபவரிடம் பிறிதோர் ஆயுதத்தை வீசுவார். அவ் ஆயுதத்தை பிடித்து சூரனின் கரத்திலே மாட்டிவிடுவார். இதனை தொடர்ந்து "அப்" என்ற கட்டளை வர கொம்பு பிடிப்போர் கொம்பினை தமது தோள்களுக்கு எடுப்பர். இவற்றுக்கு எல்லாம் இங்கு உடல்மொழியே பயன்படுத்தப்படுகின்றது. கொம்புகள் தமது தோள்களுக்கு வந்தவுடன் விரதக்களையுடனும் அவர்கள் பலம் பெறுகிறார்கள் என்றே கூற வேண்டும். இவை அனைத்தும் நொடிப் பொழுதிலான செயற்பாடுகளாகவே காணப்படுகின்றது. இவ்வாறு ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு அர்த்தங்களைக் கொண்டுள்ளனர். இதற்கேற்பவே ஆட்டங்களும் நிகழ்த்தப்படுகின்றது.

**மக்களும் நம்பிக்கையும்**

பண்டைய சடங்குகளை போல சூரன்போரிலே வெறி கொண்டு சூரனை அவர்கள் ஆட்டும்போது தமது தீய குணங்கள் யாவும் விலகுவதாக கருதுகின்றனர். சூரன் என்னும் தீமையை முருகன் வதம் செய்வதானது தம் ஊரிலே உள்ள ஒட்டுமொத்த தீமைகளையும் சேர்த்து வதம் செய்வதாக தமக்கு தோன்றுவதாக கூறினர். இன்னொருவர் கூறுமிடத்து முருகன் தனது அசுரத்தன்மையினை நீக்கி தன்னை சுகப்படுத்துவதாக கூறினார். தாம் கேட்டதை எல்லாம் தருபவன், என மக்கள் அனைவரும் முருகனை தமது அன்னியோன்னிய உறவாகவும் அவன், இவன் என அழைத்தமையை காணக்கூடியதாக இருந்தது. அனைவரும் கூடிபங்கு கொண்டு தம்மை வெளிப்படுத்துவதில் அவர்கள் அதிகம் இங்கு குணமடைகின்றனர்.

**முடிவுரை**

இவ்வாறு தனித்தன்மைகளோடு கூடி தன்னுள் ஏராளமான பார்வையாளர்களைக் கொண்ட சடங்கு அரங்காக சூரன் போர் சடங்கு திகழ்கின்றது. உண்மையில் அரங்கு தன் தோற்றத்தில் மக்கள் சுதந்திரமாக திறந்தவெளியில் ஆடிப்பாடும் ஒரு கலையாக இருந்ததாக அரங்கமானுடவியலாளர்கள் கூறுவர். "கார்சியா லோர்க்கா" கூறுகையில், "ஒரு நாட்டின் நாடகம் அரங்கு அதன் நிலவொளி மற்றும் அதன் மக்களுடைய மெய்யான வண்ணத்தை வசப்படுத்த கூடியதாக இருத்தல் வேண்டும்" என்கின்றார். காத்திரமான ஜனரஞ்சகமான வடிவங்கள் கொண்ட அரங்கு மக்களுக்கு தேவைப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. அரங்கு தற்போது பல்வேறு வடிவங்களில் மாறிவிட்டது. பார்வையாளன் எவ்வளவு தூரம் திருப்திப்படுத்தப்படுகின்றான். தற்போதுள்ள அரங்குகள் எவ்வளவு தூரம் நோய் தீர்க்கும் பண்பை கொண்டிருக்கின்றன. என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. ஜனரஞ்சகமான அரங்கு எம்மிடம் காணப்பட்டால் எப்படி இருக்கும். நம்மிடையே காணப்படும் அரங்கானது தன்பால் குறிப்பிட்ட மட்டுப்படுத்தப்பட்ட பார்வையாளர் கூட்டத்திலேயே திருப்திப்படுத்தும் முகமாக உருவாக்கப்படுகின்றது. நமது அரங்கினை பார்ப்பதற்கு எத்தனை பேர் முன் வருகின்றார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

தொன்றுதொட்டு வழங்கிய பழமையான அரங்கு இசைக்கருவிகள், தன்னியக்கம், செய்கை, வெளிப்பாடு, பாடல், ஆடல் காரணமாக பார்வையாளனை வெளிக் கொண்டு வருவது மட்டுமல்லாது அவர்களின் உள்ளக் கிடக்கைகளை எழவைத்து கைகால்களை எறிந்து ஆட வைத்து அவனை பங்காளனாக மாற்றி விடுகின்றது. அரங்கிலே கலை இணைப்பு எனும் போது அதிகமாக அத்தன்மை குறைவாகவே காணப்படுகின்றது. இன்று மனிதன் தனது செயலில் வளர்ச்சி கண்டு உலகமயமாக்கல் நாகரீக சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். ஆனாலும் சடங்குகள் சம்பிரதாயங்கள் என்பனவற்றோடு மாறாமல் பயணப்பட்டுக் கொண்டே வருகின்றான். எனவே மனிதன் செயல்கள் சடங்கில் மெய்நிலைப்பட்டதாகவும், வாழ்வியல் தேவைகளை நிறைவு செய்வதாகவும், அவனது கூட்டத்திலே உயர்ந்தான் பற்றிய நம்பிக்கையை கொண்டிருப்பதாலும், அவனை சுகப்படுத்துவதாகவும் அவனது பிணிகளை நீக்கி குணப்படுத்தச் செய்வதாகவும், ஜனரஞ்சக தன்மையுடன் காணப்படுவதாலும் மரபுகள் அவனோடு பயணப்பட்டு வருகின்றன.

மரபுரீதியான அரங்கிற்கு வருபவர்கள் தாமாகவே தம்மை வெளிப்படுத்துகின்றனர். பொதுவாக ஆடல் பாடல்கள் என்பது பண்டைய சமூக மக்களிடையே நிலவி வந்தது. இவர்களை ஆடல், பாடல்கள், செய்கைகள் என்பன வெளிப்படுத்தவும் குணப்படுத்தவும் செய்தது. மனிதன் ஒன்றிணைந்து வெளிப்படுத்தும் போது உடல் ரீதியாக தன்னை குணப்படுத்திக் கொண்டு தன் பிணிகளை போக்க முடியும். இவ்வாறான பிணி போக்கும் அரங்கு நமக்கு தேவையாக இருக்கின்றது. அவ் அரங்கில் ஜனரஞ்சக தன்மை, எல்லோரையும் ஒன்றிணைக்கும் தன்மை என்பவற்றை நாம் நிறுவ வேண்டும். எனவே நாம் மரபு ரீதியான அரங்குக்குள் மீளத்திரும்பாது விட்டாலும், மரபின் அம்சங்களை புகுத்தி அரங்கினை அளிக்கை செய்வதன் ஊடாக நாம் சமூக மாற்றத்துக்கான அரங்கத்தேடலை வளர்த்தெடுக்க முடியும்.

**உசாத்துணை நூல்கள்.**


- சிவத்தம்பி. கா, "யாழ்ப்பாணம் சமூகம், பண்பாடு, கருத்துநிலை" குமரன் புத்தக இல்லம், கெழும்பு, 2008
- சிதம்பரநாதன். கா, "சமூக மாற்றத்திற்கான அரங்கு" சூர்யா அச்சகம், மெட்ராஸ், 1995
- மதுசூதனன். தெ, ஜீவாகரன். ச, "அரங் கின் பரிமாணங்கள்" விபவி மாற்று கலாசார மையம், இராயகிரிய, 1997
- வானமாலை. நா, "தமிழர் பண்பாடும் தனித்துவமும்" அலைகள் வெளியீட்டகம், சென்னை, 2008
- நாடகச் சிறப்பிதழ், "ஓலை" கொழும்பு தமிழ் சங்கம், இதழ் : 48 – 49
- ஆடி-ஆவணி, இலங்கை, 2008




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்தில் மனித உரிமைகள்

**பா. பிரசாந்தனன்,**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
நன்னடத்தை, சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

**அறிமுகம்**

இன்றைய நவீன உலகிலே மனிதத்தன்மை இல்லாமல் போயுள்ளது. மனிதநேயமற்ற செயல்கள் வியாபித்துள்ளன மற்றும் மனிதனைச் சீரழிக்கும் பல செயற்பாடுகள் பரந்துபட்டு காணப்படுகின்றன என்ற செய்திகளையும் கருத்துக்களும் நாம் அன்றாடம் கேள்விப்படுகின்றோம். இவ்வாறான கருத்துக்கள் எழுவதற்கு மனிதர்களிடையே உருவாகின்ற சமய, இன முரண்பாடுகளால் மனிதனது உரிமைகளுக்குப் பாதிப்பு ஏற்படுவதே காரணமாக அமைகின்றது. அந்த வகையில் மனதனாகப் பிறந்தவன் தான் அனுபவிக்கக்கூடிய உரிமைகள் எனப்படுபவை அவன் பிறக்கும் போதே அவனுடன் கூடப்பிறப்பதாக மானிடவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதாவது மனிதப்பிறவிக்கு கௌரவம் வழங்கப்படுவது இப்புவியில் உள்ள ஏனைய உயிரினங்கள் எவற்றிலும் காணப்படாத சிறப்பம்சமாகும். இது இனம், மதம் , பால் பேதங்கள் இன்றி பின்பற்றப்படுகின்ற மிக முக்கியமான பேசுபொருளாக நாம் வாழும் உலகில் அறியப்படும் விடயமாகும். அதன் அடிப்படையில் நாகரீகமடைந்த மனித சமூகமானது மனித கௌரவத்தை மேம்படுத்தும் முகமாக மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் என சர்வதேச ரீதியாக அழுத்தங்கள் உலக அரசுகளில் காணப்படுகின்றது. இந்த பாரிய கரிசினையானது மனித நாகரீக வளர்ச்சியின் காரணமாக உருவானதாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மனிதனுக்குரிய உரிமைகள் எனப்படுபவை "மனிதனை மனிதனாக ஆக்குபவை, மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உரித்தான உரிமைகள் ஆகும். அந்தவகையில் மனித உரிமைகளை "மனிதர்களை மனிதர்கள் என்ற வகுதிக்குள் உள்ளடக்குவதற்கு அவசியமான விழுமியங்கள்" என்று குறிப்பிடுவது பொருத்தமானதாகும். இதேவேளை "மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலமாக மனித கௌரவம் மிக்க புனிதமான உலகினை நிறுவ முடியும்" என ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் **kofi Annan** அவர்கள் குறிப்பிட்டிருந்தமையும் இங்கு கவனிக்கத்தக்கது. மனித உரிமைகள் என்கின்ற போது மனிதன் சிறுவனாக உள்ள போது சிறுவர் உரிமைகள் என்றும் பெண்கள் அடக்கி ஒடுக்கப்படும் போது பெண்கள் உரிமை மீறப்படுதல் என்றும் இருபாலரும் பாதிக்கப்படும் போது மனித கௌரவம் பாதிப்படைதல் என்றும் மனித உரிமைகள் பலதரப்பட்டு நோக்கப்படுகின்றன. இன்றைய நவீன காலத்தில் மனித உரிமைகள் மீறப்படுகின்ற போது அதனைத் தட்டிக்கேட்பதற்கும், உரிமை மீற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லால் ஏற்பட்ட பாதிப்பிற்கு நிவாரணங்கள் வழுங்கவும் எனப் பல சட்ட ஏற்பாடுகள் உலக அரசுகளால் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது நாம் அறிந்ததாகும். எவ்வாறாயினும் மனித நாகரீகம் வளர்ச்சியடைவதற்கு முன்னர் மக்கள் சமயங்களை அடியொற்றி வாழ்ந்த காலத்தில் மனித உரிமைகளை உலகில் விளங்கிய மதங்கள் அல்லது மத ஸ்தாபனங்கள் எவ்வாறு கவனத்தில் எடுத்திருந்தன எனத் தொடர்ந்து நோக்கலாம்.

உலகிலே தோற்றகாலம் என்று குறித்துக் குறிப்பிட முடியாதளவிற்கு அநாதியான சமயமாக விளங்கும் இந்து சமயத்தினுடைய அடிப்படைக் கருத்தாக விளங்குவது "அன்பே சிவம்" என்ற வாசகமாகும். அதாவது அன்பு, கருணை என்பன மனிதனை மட்டுமல்ல ஏனைய ஜீவராசிகளிடத்திலும் செலுத்தப்படல் வேண்டும் என இந்து மதம் இவ்வாசகத்தின் வாயிலாக தெளிவுபடுத்தியுள்ளது. இதேபோல கிறிஸ்தவ சமயக் கொள்கையின் சாராம்ச கருத்து உயிரினங்கள் மீது அன்பு, கருணை என்பன காட்டப்படுதல் வேண்டும் என்பதாகும். இச்சமய மார்க்கத்தின் புனித நூலான புனித பைபிள் நூலிலே குறிப்பிடப்பட்ட "அயலவனை நேசி" என்ற சிறந்த மனித உரிமைத்தத்துவம் குறிப்பிடப்பட்டுள்ளதோடு மனிதர்களிடையே வேறுபாடுகள், பாராபட்சங்கள் காட்டப்படக்கூடாது எனவும் விதந்து கூறப்பட்டுள்ளது. அடுத்து கௌதம புத்தரால் இந்த உலகிற்கு தரப்பட்ட பௌத்த மதத்தினை எடுத்துக் கொண்டால் கொல்லாமை, அகிம்சை, சகோதரப்பண்பு போன்ற மனித உரிமை விழுமியங்கள் பௌத்த சமய நூலான திரிபிடகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. இவ்வாறே இஸ்லாமிய மதமும் அதன் சமய நூலான புனித குரான் சகோதரத்துவம், அமைதி, நட்புறவு பேணல் போன்ற மனித கௌரவத்தை பாதுகாக்கின்ற கருத்துக்களை இஸ்லாமிய மக்களுக்கு எடுத்துக்கூறியுள்ளதை அறியமுடிகின்றது. மேற்குறித்த சமய மார்க்கங்களைத் தவிர குருநானக்கினால் தோற்றுவிக்கப்பட்ட சீக்கிய மதம், சீனாவின் கொன்பியூசியஸ் மதம் என்பனவற்றிலும் மனித உரிமைக் கருத்துக்கள் வியாபித்திருப்பதை அறிய முடிகின்றது.

எனவே மேலே சொல்லப்பட்டவாறு உலகில் மனிதகுலத்தின் தோற்றம் முதல் மனிதனை நல்வழிப்படுத்தும் நோக்கத்திற்காக மனிதனால் பின்பற்றப்பட்ட சமயங்கள் யாவற்றிலும் மனித உரிமைகள் தொடர்பாகவும், மனித கௌரவத்தினை பாதுகாப்பது தொடர்பாகவும் பல கருத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த சமயமார்க்கங்களை அடியொற்றிய செயற்பாடாக மனித உரிமைகள் எண்ணக்கரு பல சர்வதேச பிரகடனங்களையும், கோட்பாடுகளையும், உடன்படிக்கைகளையும் தன்னகத்தே கொண்டமைந்து இன்றைய நவீன உலகில் மாற்றமுடியாத ஒரு விடயமாக பாரிய தோற்றத்துடன் மனித சமுதாயத்தில் இடம்பிடித்துள்ளது என்பது மனிதகுல வரலாற்றை ஆராய்ந்தால் கண்டுணர முடிகின்றது.

அந்தவகையிலே உலகில் பின்பற்றப்படுகின்ற சமய மார்க்கங்கள் பலவும் மனித உரிமைகள் என்கின்ற சிறப்புமிக்க விடயத்தை விளம்பியிருக்கையில், இந்துசமயம் தனது வழிகாட்டல்களில் எந்தவிதமாக மனித உரிமைகளை வெளிக்காட்டியுள்ளன என்பது தொடர்பாக கவனிக்கலாம். சண்மதங்களின் ஒன்றித்த வடிவமான இந்துசமய இலக்கியங்களான நால்வகை வேதங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபநிடதங்கள், தேவார புராணங்கள், திவ்யப்பிரபந்தங்கள் மற்றும் சைவ சித்தா ந்த நூல்கள், இதிகாசங்கள், தர்மசாஸ்திர ங்கள் போன்றனவற்றில் மட்டுமன்றி இந்த சமயத்தை வழிநடத்திய நாயன்மார்கள், ஆழ்வார்கள், சமயப் பெரியார்கள் போன் றோரின் வாழ்க்கை வரலாறுகளிலும் மனித உரிமை விழுமியங்கள் வியாபித்துள்ளமை யைக் காணலாம்.

அதன்படி பஞ்சமா பாதகங்களைச் செய் தல் கூடாது என அறிவு புகட்டிய இந்துசம யத்திலே நீதி என்ற விடயம் பிரதான இடத் தைப் பெற்றிருந்த ஒரு சிறப்பான மனித உரிமை விழுமியமாகும். இந்துசமய இலக்கி யங்களை உற்று நோக்குகையில் தர்மம் நிலைநாட்டப்படுவதற்கும், அடியவர்கள் உடல் ரீதியாக துன்புறுத்தப்படும் போதும் கடவுளர்கள் நீதியை நிலைநாட்ட அவதார ங்கள் எடுத்திருப்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. அதாவது கந்தபுராணத்தில் சூரனை அழித்தமையையும், துர்க்கை மகி க்ஷாசூரனை வதம் செய்தமையும், தன் பக்தர்களை காக்க விநாயகர் கஜமுகாசூர வதம் செய்தமையையும் மற்றும் கம்சனை அழிக்க கிருஸ்ணர் பிறப்பெடுத்தது, இரணி யனை ஒழிக்க விஸ்ணு தோன்றியது உள்ளி ட்ட தசாவதாரங்கள் உருவானமையும் என ப்பல இறை அவதாரங்கள் உலகில் நீதியை நிலைநிறுத்திய வரலாற்றை அறிய முடி கின்றது. இவை தவிர பகவத் கீதையில் விஷ்ணுபகவான், தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்கும் போது தான் யுகந்தோறும் அவதரிப்பதாக குறிப்பிட்டுள்ளமை இவ்விட யத்தில் நுணுகி நோக்கத்தக்கது. மேலும் பண்டைய இந்து அரசர்கள் நீதிவழியே ஆட்சிசெய்த வரலாறுகளும் உள்ளன. அந்தவகையில் மனுநீதிகண்ட சோழன் நீதியை நிலைநாட்ட தன் மகனை இழக்க தயங்கவில்லை என்ற வரலாறு மட்டுமல்ல மகாபாரதத்தில் கௌரவர்கள் அதர்ம வழி யிலும் அதனைத் தவிர்த்து பாண்டவர் தர்ம வழியிலும் ஆட்சி செய்த முறைமைகள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

அடுத்து மனிதனுக்குரிய பிரதான உரிமை சுதந்திரம் என்பதாகும். இந்து சமய த்தவரால் சுதந்திரங்கள் தடையின்றி அனு பவிக்கப்பட்டிருந்தமையை அவதானிக்க முடிகின்றது. அதாவது எழுத்துச் சுதந்திரம் நிறைந்து காணப்பட்டமையினால் தான் நாயன்மார்களும், ஆழ்வார்களும் மட்டு மன்றி அரசவையில் இருந்த புலவர்களும் பல நல்இலக்கியங்களை இந்து சமயத்திற்கு வழங்கியிருந்தனர். இத்தகைய எழுத்துச் சுதந்திரத்தினால் இறைவனை மையமாக வைத்து தர்மம், நீதி, நல்ஒழுக்கங்கள் போன்ற கருத்துக்களைக் கொண்டமைந்த அரிய பொக்கிஷங்களாக இலக்கியங்கள், நூல்கள் என்பன இந்து சமயிகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன என்றால் அதற்கு மாற்றுக்கருத்தில்லை. மேலும் பேச்சுச் சுதந்திரம் சைவ சமயத்தில் தாராளமாக அனுபவிக்கப்பட்ட காரணத்தினாலேயே உயிர்களைப் படைத்த இறைவன் தன் கண்முன்னே வந்து கேட்ட பொழுதிலும்" நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே" என நக்கீரர் குறிப்பிடுவதற்கு சந்தர்ப்பம் இருந்திருக்கின்றது. அவ்வாறே இறைவனை "பித்தா" என விழித்து சுந்தமூர்த்திநாயனார் பாடியதற்கு பக்தியுடன் கூடிய பேச்சுச் சுதந்திரத்தினை சைவசமயம் வழங்கியி ருந்திருக்கின்றது என்பதற்குப் பிறிதொரு சான்றாகக் கூற முடியும்.

அதேபோல இந்து சமயத்தவர் தாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பிய படி சரியைத்தொண்டு செய்தோ அல்லது இறைவனைத் துதித்து பாடியோ விரும்பிய கடவுளர்களை வழிபடுவதற்கான வழிபாட்டுச் சுதந்திரமும் இந்து சமயத்தில் காணப்பட்டமையையும் நாம் நோக்கலாம். எனினும் பிற்காலத்தில் பாரத தேசம் மற்றும் இலங்கையிலும் நிலவிய அந்நியர் ஆட்சியி னால் இந்த வழிபாட்டு சுதந்திரம் மறுக்கப் பட்டமையினால் இந்து சமயத்தவர் சொல் லொண்ணா துயரங்களை அனுபவித்தனர் என்பது வரலாற்று உண்மை. இதனாலேயே நல்லைநகர் நாவலர் போன்ற சமயப் பெரியா ர்கள் சமயத்தைக் காப்பாற்றத் தூண்டப் பட்டனர்.

இவைதவிர மனித உரிமைகளில் பிறி தொரு விழுமியமான சமத்துவம் என்பது சிறப்புற விளங்கியமைக்கும் பல சான்றாதா ரங்களைக் குறிப்பிட முடிகின்றது. அந்த வகையில் இறைவனைப் பாடிபணிவதில் வல்லவர்களான அறுபத்து மூன்று நாயன் மார்கள் மற்றும் ஆழ்வார்கள் வயது வேறு பாடு , பால் வேறுபாடு, சாதி வேறுபாடு , சமூக அந்தஸ்து வேறுபாடு இன்றி வாழ்ந்த சரித்திரங்கள் இந்து சமயத்தில் சமத்து வத்தை பறைசாற்றும் சிறப்பம்சமாகும். இதனாலேயே வயதில் இளையவரான திரு ஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும் முதிய வரான திருநாவுக்கரசு நாயனாரும் தவிர பெண் நாயனாரான காரைக்காலம்மையா ரும் அரசவையில் மந்திரியாராக விளங்கிய மாணிக்கவாசக நாயனாரும் வேடரான கண் ணப்ப நாயனாரும் பக்திமார்க்கத்தில் ஒரு மிக்க நோக்கப்பட்டனர். அதாவது இறை பக்தி என்ற நோக்கில் சிவபக்தர்கள் சமமா னவர்களாகக் கருதப்பட்ட சிறப்பியல்பை இவ்விடத்தில் அவதானிக்க முடிகின்றது.

இவைமட்டுமின்றி இன்னொரு மிக முக்கி யமான மனித உரிமை விடயமான பெண்கள் உரிமைகள் கூட இந்துசமயத்தில் சிறப்புற நிலவியமைமையயும் அறிந்து கொள்ள முடிகின்றது. எனினும் இந்துசமயத்தில் புராண இதிகாச காலங்களில் ஆணாதிக் கம் உயர்வாக இருந்தது என்றும் பெண்கள் ஒடுக்கப்பட்டிருந்தனர் என்றும் பெண்கள் மதிக்கப்படவில்லை என்றும் பல விமர் சனங்கள் முன்வைக்கப்படுவது உண்டு. இவ் விமர்சனங்களை தகர்ப்பதாக சில வரலா ற்று உண்மைகள் சாட்சியங்களாகக் கண்டு ணரப்படுகின்றன. அதாவது இந்துசமயத் திலே தான் பல பெண் தெய்வங்கள் வழி பாட்டுக்குரியவையாக விளங்கின என்ப தனை சிந்து வெளி நாகரீகம் தொடர்பான ஆராய்ச்சியின் போது கிடைக்கப் பெற்ற இலச்சனைகள் மற்றும் சிலைகள் என்பன சாட்சிகளாக நிற்கின்ற அதேவேளை அப் பெண்தெய்வங்களை புகழ்ந்து காலத்திற் குக் காலம் பற்பல தோத்திரங்கள், தேவார ங்கள், பாமாலைகள் இயற்றப்பட்டுள்ளமை யும் கவனிக்கின்ற போது "பெண்" உயர் அந் தஸ்துடன் இந்துசமயத்தில் விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். இதை விடவும் பெண் தெய்வங்கள் "தாய்" என்ற உயரிய அந்தஸ்து வழங்கப்பட்டு கிராமியத் தெய்வங்களாக கூட வழிபடப்படுகின்ற சிறப்பு இந்து சமயத் தில் காணப்படுகின்றது. மேலும் ஒரு மனிதனு க்கு அவசிமான கல்வி, வீரம், செல்வம் போன்ற வற்றிற்கு பெண் தெய்வங்களே வழிபாட்டுக் குரியவையாக விளங்குகின்றன.

அத்துடன் பெண் நாயன்மாரான காரைக் கால் அம்மையர் இறைவனைத் துதித்தார் என்பதும், இறைவனைப் பாடுவதால் கருத்து சுதந்திரத்தை வெளிக்காட்டிய பெண் புலவராக ஔவையார் வாழ்ந்தார் என்பதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனைக் கணவனாக கருதி வாழ்ந்த பெண் ஆழ்வார் ஒருவராக ஆண்டாள் அம்மையார் இருந்துள்ளார் என்பதும் புராண இலக்கியங்கள் எமக்கு சிறப்பித்துக் காட்டி நிற்கின்றன. மேலும் மகாபாரத போருக்கு வழியமைத்து, தர்மத்தை நிலைநாட்டுவதற்கு காரணமாய் அமைந்தது பெண்ணாகிய பாஞ்சாலியின் சபதமாகும். இந்தவகையில் பெண்களுக்கு பலவகையான அந்தஸ்துக்களை வழங்கியிருப்பது இந்து சமயம் என்பதில் ஐயம் எழுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. அதன் மூல மாக பெண் உரிமைகள் நற்சிறப்பாக அனுபவிக்கப்பட்டுள்ளன என்ற முடிவை பெற்றுக்கொள்ளலாம்.

அடுத்து சிறுவர் உரிமைகள் என்கின்ற விடயமும் இந்துசமயத்தில் கருத்திலெடுக்கப்பட்டுள்ளதும் அவதானிக்கதக்கது. அதாவது புராதன கால இலக்கியங்களில் சிறுவர்கள் மற்றும் அரச குமாரர்கள் குரு குல கல்வியைப் பெற்றிருந்தமை குறிப்பிடப் படுகின்றது. எனவே சிறுவர்களின் கல்வி உரிமை அக்காலத்தில் மறுக்கப்படவில்லை என்பது அறியக்கிடக்கின்றது. மேலும் புராண, இதிகாச காலங்களில் காலத்தில் நடைபெற்ற பாரிய யுத்தங்களின் போது சிறுவர்களும் பெண்களும் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்பதோடு அவர்கள் யுத்தத்தால் பாதிக்கப்படக்கூடாது என்ற தீர்மானம் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த அரச தரப்பினரிடையே ஏகோபித்த கருத்தாக விளங்கியிருந்தது. மேற்குறித்த கருத்தினை அடியொற்றி தற்கால உலக அரசுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை என்பன சிறுவர் பட்டயங்களை உருவாக்கி அதில் சிறுவர்களை போரில் ஈடுபடுத்தப்படுவது இல்லாதொழிக்கப்படல் வேண்டும் என்ற ஏற்பாட்டையும் செய்துள்ளன என்றால் அதற்கு இந்து சமயத்தில் சிறுவர் உரிமைகள் இடம்பெற்றிருந்தமை அத்திவாரமாக அமையலாம் எனக் கூறுவது பொருத்தமானதாகும்.

எனவே உலகின் தொன்மையான சமயமான இந்து மதமானது மனித உரிமைகளை காப்பதில் காத்திரமான பங்கினை மிக நீண்டகாலத்திற்கு முன்னரே வகித்திருந்தது என்பது விளங்கிக்கொள்ள முடிகின்றது. இதனடிப்படையில் நோக்குகின்ற போது தற்காலத்தல் உலக அரசுகளாலும், அரச சார்பற்ற நிறுவனங்களாலும், பொதுமக்களாலும் மிகத்தீவிரமாகப் பேசப்படுகின்ற விடயமாகவும், ஆராய்ச்சிக்குட்படுத்தப்படுகின்ற கருப்பொருளாகவும் விளங்குகின்ற மனித உரிமைகள் என்பது மிகத் தொன்மையான காலத்திலேயே இந்து மதத்தால் பின்பற்றப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது என்பது அறியப்படுகின்றது. மேலும் இறைவனால் இயற்கையாக வழங்கப்பட்ட மனித உரிமைகளை எந்தவொரு சக்தியாலும் மனிதனிடமிருந்து பறிக்கப்பட முடியாததாகும். எனவே எல்லா வகையான சுதந்திரங்களையும் மனிதர்களுக்கு அனுபவிக்க வழங்குவதிலும் மனிதர்களின் உரிமைகளை பாதுகாப்பதிலும் முன்னுதாரணமாக விளங்கியது இந்து சமயம் என்றால் அதற்கு மாற்றுக்கருத்துக்கள் கிடையாது. ஆகவே இறைபக்தியுடன் இந்துவாக வாழ்வோம் மனித உரிமைகளைக் காப்போம்.

**உசாத்துணை**


- இலங்கைச் சட்டங்கள், செ.செல்வகுணபாலன்
- Human Rights in Third World Perspective , V.T.Thamilmaran
- Human Rights in Hunduism , AhmadSyarif H
- (www. media.neliti.com/media/publications)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவார திருவாசகங்களினூடாக தெளிவு படுத்தப்படும் சைவசித்தாந்த முப்பொருள் கோட்பாடு

**சைவப்புலவர் சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்**
ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

ஆகமங்களை அடிப்படையாகக் கொண்ட சைவசித்தாந்த தத்துவம் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்கள் பற்றிக் கூறுகின்றது. முப்பொருள் கோட்பாட்டை சாதாரண மக்கள் இலகுவாக விளங்கக் கூடிய வகையில் நான்கு குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் தமது தேவார திருவாசகங்களினூடாக எடுத்துக் கூறியுள்ளனர். முதல் மூவரும் தேவாரங்களையும், மாணிக்கவாசகர் திருவாசகத்தையும் பாடியருளியுள்ளனர்.

சைவசித்தாந்த தத்துவம் மலங்களால் கட்டுண்டிருக்கும் ஆன்மாக்கள் மலங்களிலிருந்து விடுபட்டு பதியாகிய இறைவனை அடைவது என்பதாகும் பத்தி நெறியை மக்கள் பின்பற்றுக் கூடிய வகையில் சமய குரவர்கள் வாழ்ந்து காட்டினார்கள் தம் வாழ்க்கையில் பின்பற்றி வாழ்ந்தார்கள். நால்வரும் நால்வகை மார்க்கங்களில் வாழ்ந்து மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்பதை வாழ்ந்து காட்டினார்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்களையும் படிமுறையாகவும் கடைப்பிடிக்கலாம். அவரவர் பக்குவத்திற்கேற்ப நேரடியாகவும் கடைப்பிடித்து ஈடேறலாம் என்பது நால்வர் வாழ்க்கையிலிருந்து நாம் கண்டு கொள்ளலாம் நாவுக்கரசர் சரியை நெறியைப் பின்பற்றியவர் திருஞான சம்பந்தர் கிரியை நெறியைப் பின்பற்றியவர் சுந்தரர் யோக நெறியைப் பின் பற்றியவர் இவர்களது வாழ்க்கை வரலாறு அவர்கள் வாழ்ந்த காலத்து மக்களுக்கும் பின் வந்த காலத்து மக்களுக்கும் எடுத்துக் காட்டாக அமைந்தது. மக்களையும் சேர்த்து ஆலயங்களுக்குச் சென்று வழியடுவது, பத்தி நெறியை வளர்ப்பது, ஆலயத் தொண்டு செய்வது திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டமை, பல அற்புதங்களை நிகழ்த்தியமை பதி, பசு, பாசக் கருத்துக்களைப் பாடியமை மக்களை அவர்கள் பத்தி வழியில் பின்பற்ற வழிவகுத்தது எனலாம். சமகாலத்தில் வாழ்ந்த அப்பூதியடிகள் எனும் பத்தர் திருநாவுக்கரசர் பணியைப் போற்றி அவரது பெயரில் தண்ணீர் பந்தல் போன்ற பல சமூகச் செயற்பாடுகளைச் செய்தார். தனது மகனுக்கு திருநாவுக்கரசர் எனப்பெயரிட்டு மகிழ்ந்தார்.

திருஞான சம்பந்தர் முதற் தேவாரத்திலே "தோடுடைய செவியன் விடையேறியோன்" எனப் பதி இயல்பைக் கூறுவதுடன் தொடங்குகிறார்" தாயினும் நல்ல தலைவர் என்று அடியார் தம்மடி போற்றிசைப்பார்கள்" போன்ற அடிகள் பதியைப் பற்றிப்பாடுவதாக அமைத்துள்ளன. திருநாவுக்கரசர் குனித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்" ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே நிலைபெறுமா றெண்ணுதியேல் நித்தலும் எம்பிரானுடைய கோயில்" போன்ற அடிகள் பதி இயல்பைக் காட்டுகின்றன. சுந்தரரின் முதல் பாடல் "பித்தா பிறை சூடி பெருமானே" "நீள நினைந்து அடியேன் உனை நித்தலும் கைதொழுவேன்" பதியைக் குறிக்கும் வகையில் அமைந்தன. மணிவாசகரின் திருவாசகத்தில்" நமச்சிவாய வாழ்க நாதன் தாழ் வாழ்க இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க"

**ஆதியும் அந்தமுமில்லா அரும் பெரும்**
**சோதியையாம்பாட"**
**"முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்**
**பழம் பொருளே**
**பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப்**
**பெற்றியனே"**
**"போற்றி அருளுக நின் ஆதியாம் பாத மலர்**
**போற்றி அருளுக நின் அத்தமாம்**
**செந்தளிர்கன்"**

போன்ற பாடலடிகள் பதியின் இயல்லை எடுத்துக் காட்டுகின்றன.

பதியைப்பாடியது போல பசு, பாசம், முக்திக்குரிய வழிகள் பற்றியும் பாடல்கள் பாடப்பட்டுள்ளமையை நாம் காணலாம்.

**"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே"**
**"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா**
**உன்னடி என் மனத்தே"**
**"தன் கடன் அடியேனையும் தங்குதல் என்**
**கடன் பணி செய்து கிடப்பதே"**
**"பாசம் பரஞ்சோதிக்கென்பாய் இராப்பகல்**
**நாம் பேசும் யோ தெப்போதும்"**

**"ஆர்த்த பிறவித்துயர் கெடநாம் ஆர்த்தாடும்"**

**"கண்ணைத்துயின்றவமே காலத்தைப்**
**போக்காதே"**

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்பல் விருகமாகி பறவையாய் பாம்பாகிக் கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய் செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" "சிக்கெனப்பிடித்தேன் எங்கெளுந்தருளுவது இனியே" என ஆன்மாக்கள் இறைவனை வேண்டுகின்ற முறையில் தேவார திருவாசகப் பாடல்கள் அமைந்துள்ளன.

பதி பசு பாசம் ஆகிய முப்பொருள்கள் பற்றிய கருத்துக்கள் தேவார திருவாசகங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. எல்லாப் பாடல்களிலும் எல்லாக் கருத்துக்களும் இடம்பெறாவிட்டாலும் பசுவாகிய ஆன்மா தம்மைப் பீடித்துள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களில் இருந்து விடுபட்டு பதியாகிய இறைவனை அடைவதே நோக்கமாகும். இவ்வாறு இறைவனை அடைவதற்கான வழிவகைகளையும் தம் பாடல்களில் பாடியுள்ளனர்.

**"நிலை பெறுமா நெண்ணுதியே நெஞ்சே**
**தீவா தித்தலும் எம் பிரானுடைய கோயில் புக்கு"**
**"தோயிலும் பிணியும் தொழிலர் பால்**
**நீக்கி நுழை தரு நூலினர் ஞாலம்"**
**"பாவம் வினை அறுப்பார் பயில்பாலாரி**
**யின் கரைமேல்"**
**"பாதம் தொழுவார், பாவம் தீர்ப்பார் பழன**
**நகராரே"**
**"அங்கத்துற நோய்கள் அடியார் மேல் ஒழித்தருனி"**
**'பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்"**
**"பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் மாரியனே"**
**"ஆர்த்த பிறவித்துயர்கெட நலம் ஆர்த்தாடும்"**

ஆன்மாக்கள் இறைவனை அடைவதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனே வழிகாட்டுவதாக தேவார திரு வாசகப் பாடல்கள் அமைந்துள்ளன "அவன ருளாலே அவன்தாள் வணங்கி"

**"முத்தி நெறி அறியாத**
**மூர்க்கரொடு முயல்வேணைப்**
**பத்தி நெறி அறிவித்துப்**
**பழவினைகள் பாறு வண்ணம்**
**சித்தமலம் அறுவித்துச்**
**சிவா மாக்கி எனையாண்ட**
**அத்த னெைக் கருளிய வாறார்**
**பெறுவார் அச்சோவே"**

எனும் திருவாசகப்பாடல் பதியைப் பற்றியும் பசுவைப் பற்றியும் பாசங்களை நீக்குவது பற்றியும் பக்தி நெறியால் முக்தி அடைய லாம் என்பதையும் மிக இலகுவாக விளக்கு வதாகப் பாடப்பட்டுள்ளது.

தேவார திருவாசகங்களிலே பக்தி நெறி யைப் பின்பற்றக் கூடியதாகவும் இறைவன் சிறப்புக்களையும் இறைவனை அடைவதற் கான வழிமுறைகளையும் எடுத்துக் கூறி தாமும் வாழ்ந்து காட்டி மக்களை இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு வழி யமைக்கும் வகையில் நால்வரின் வாழ்க்கை வரலாறும் அவர்களால் பாடப்பட்ட தேவார திருவாசகங்களும் ஆதாரமாக விளங்கு கின்றன.

சைவசித்தாத்த தத்துவம் கடைப்பிடிக் கக் கூடிய வாழ்க்கை நெறியாக அமைவத ற்கு இற்றைக்கு 1000 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த நால்வரின் வாழ்க்கை வர லாறும் அவர்கள் பாடிய தேவார திருவாசங் களும் பெரிதும் பயனுடைவையாக அமை கின்றன. மிக நீண்ட காலத்திற்குப் பின்பும் கூட மொழியைப் புரிந்து கருத்து விளங்கிக் கடைப்பிடிக்கக் கூடிய வகையில் பாடிய பாடல்கள் சைவசமயத்தின் பொக்கிசமாக விளங்குகின்றன.

முன்னார் இவற்றை மக்கள் மனனம் செய்து ஆலயங்களில் பாராயணம் செய்தனர். தற்காலத்திலும் அப்பணி நடைமுறைப் படுத்தப்படுகின்றன. தற்போதய கொரோனா வைரஸ் தாக்கக்தினால் வெளியில் செல்ல முடியாத நிலையிலுள்ள மக்கள் தத்தமது இடங்களில் இருந்து தேவார திருவாசகங் களைப் பாராயணம் செய்து சைவசித்தாந் தக் கருத்துக்களை விளங்கி இறைவனை அடைவதற்கான வழி வகைகளைக் கடைப் பிடித்து ஆன்ம ஈடேற்றம் பெற நால்வர் காட்டிய வழி மகத்தானதாகும்.

**யாழ் விருது 2020**

28ஆவது நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழாவில் கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதன் (சோ.ப) அவர்களுக்கு யாழ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மெய்யியலில் அளவையியல் அறிமுகம்

**ஆறுமுகம் சசிநாத்** B.A (Hons)
இந்துநாகரிகத் துறை

**அறிமுகம்**

மனிதனின் சிந்தனை தத்துவ வழிப் பெற்றவை. அவை சரியானதா அல்லது தவறானதா என்பதை அளவையியல் தெளிவாக்குகின்றது. அளவையியலை தருக்கம், நியாயம் என்றும் அழைப்பர். இதனைப் பிரமாணம் எனச் சைவசித்தாந்தம் கூறுகின்றது. அளவை அறிவு இல்லாதவிடத்து தத்துவங்களைப் புரிந்து கொள்வது மிகவும் கடிணமானதாகும். ஆக தத்துவக் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் அளவையியல் அறிவு மிகவும் அவசியமானதாகும். அளவையியலின் இன்றியமையாமையை V.A சேனாதிபதி அவர்கள்,

**"இராகமறியார் இசைப்பயன் தாம் அறியார்**
**தராதரமறியார் சற்காரியமறியார்**
**ஓரார் அளவை ஒரு பயனுந் தாமறியார்**
**ஆராய்ந்தளவை அறிந்து கொளீரோ"**

என்கின்றார். மெய்ப்பொருள் தரிசனம் அளவை கடந்த கைங்கரியம் என சைவ சித்தாந்தம் குறிப்பிடுகின்றது. தத்துவம் மற்றும் சைவசித்தாந்த கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு அளவையறிவு அவசிய மாகும் என்பதனை அருணந்தி சிவாசாரியார்,

**"அருளினால் ஆகமத்தை அறியலாம்.**
**அளவினாலும் தெருளலாம் சிவனை**
**ஞான செய்தியாற் சிந்தனையுள்ளே**
**மருளெலாம் நீக்கங்கண்டு வாழலாம்"**

என்று சிவஞானசித்தியாரில் பதிவு செய்கிறார்.

தருக்க நூற்பயிற்சியானது அறிவு வேட்கையாய் அனைவருக்கும் இன்றியமையாதது எனக் கொண்டே திருவள்ளுவரும் "ஆற்றின் அளவறிந்து கற்க" எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் மணிமேகலை, நீலகேசி போன்ற சமண, பௌத்த நூல்களில் பெரிதும் தருக்கம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. சைவசித்தாந்தம் எனும் நமது அரிய பெரிய தத்துவக் கொள்கையானது "புறச் சமயத் தவர்கிருளாய் அகச்சமயத்தொளியாய்ப் புகல் அளவைக்கு அளவாகிப் பொலிவது" என்ற இக்கருத்துக்கள் தொடர்பாக சிவ ஞான போதத்திற்குச் சிவஞான சித்தியார் என விரிந்த வழி நூலை இயற்றிய ஆசிரியரான அருணந்தி சிவாசாரியார் அளவையியல் எனத்தனியே ஒரு பகுதியாக அளவை நூற் பொருளைத் திரட்டித் திட்பநுட்பமும் சுருக்கவிளக்கமும் அமையச் சுபக்கம் எனும் பகுதியில் 14 பாடல்களில் பாடியிருப்பது சைவசித்தாந்தத்திற்குரிய அளவையியல் என்பதை அங்கீகரித்துள்ளார் எனக் காட்டுகின்றது. அதற்கமைய அருணந்திச் சிவாசாரியார் அளவையானது பதி பசு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசம் ஆகிய முப்பொருளையும் உயிரின் அறியும் ஆற்றல் (ஆன்ம சிற்சக்தி) கொண்டு காண்டல், கருதல், உரை எனும் அளவைக ளால் அறிவது என குறிப்பிடுகின்றார்.

பொதுவாக இந்திய மெய்யியல் பரப்பில் அளவைகள் பத்து எனக் கூறப்படுகின்றன. அவை முறையே

- **காண்டல் : பிரத்தியட்சம், காட்சி**
- **கருதல் : அனுமானம்**
- **உரை : ஆப்தவாக்கியம், ஆகமம்**
- **அபாவம் : உண்மை**
- **அருந்தாபத்தி : பொருள்**
- **உபமானம் : ஒப்பு, உவமை**
- **பாரிசேடம் : ஒழிபு**
- **சம்பவம் : உண்மை**
- **ஐதீகம் : உலகவாதம்**
- **சுபாவம் : இயல்பளவை**
- என்பன அவையாகும்.

இந்திய மெய்யியல் பரப்பில் உள்ள எல்லாத் தத்துவ பிரிவுளும் அறிதல் முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. தத்துவவாதிகள் ஒவ்வொருவரும் இவ்வறி தல் முறைகளை தங்களுடைய கோட்பாட்டு தன்மையை விளக்குவதற்காக் காலத்திற் கேற்றல் போல பிரமாணங்களை கையாண்டு நிறுவியிருக்கின்றனர். இருப்பினும் இந்திய மெய்யியலாளர்கள் இடையே அளவைகள் பற்றி ஒருமித்த நிலைப்பாடு காணப்பட வில்லை.

மேற்குறிப்பிட்ட பத்து அளவைகளில் முதலாவதை சார்வாகர் ஏற்றனர், முதலாவ தோடு சேர்த்து இரண்டாவதை பௌத்தர் களும் வைசேடிகரில் ஒரு சாராரும் ஏற்றுக் கொண்டனர். முன் இரண்டுடன் மூன்றாவதை சாங்கியர்கள், சைவ சித்தாந்திகள் ஏற்றுக் கொண்டனர். முதல் மூன்றோடு நான்கா வதை நையாகியரும். பிரபாகர் முதல் நான் கோடு சேர்த்து அருந்தாபத்தியினையும் ஏற்று ஐந்தாகக் கூறுவர். பட்டரும், அத் வைதிகளும் முதல் ஐந்தோடு அனுபலத்தி யையும் ஏற்று ஆறு பிரமாணங்கள் எனக் கூறுவர். பௌரானிகள் முதல் ஆறோடு சாம் பவம், ஐதீகம் என்பவற்றை ஏற்று எட்டாக கூறுவர். வேதவியாசர் முதல் எட்டோடு சுவாவம், பரிசேடகம் என்பவற்றை இணைத் துப் 10 பிரமாணங்களாகக் கூறுவர்.

இவ்வாறு பத்து வகையாக பிரமாணங் களை வகைப்படுத்தினாலும் இந்திய மெய்யியல் பரப்பில் ஆறு பிரமாணங்கள் மிகவும் முக்கியமானதாக குறிப்பிடப்படு கின்றது. அவற்றுள் முதல் மூன்று பிரமாணங் களும் (காண்டல், கருதல், உரை) ஏனைய பிரமாணங்களுக்குள் உள்ளடங்கிக் கொள் ளும். இதனையே சிவஞான சித்தியார் சுபக்கம் 07 வது பாடல்,

**"அளவை காண்டல் கருதலுரையபாவம்**
**பொருளொப்பாறென்பர்**
**அவை மேலு மொழியுண்மை யைதீகத்**
**தோடியல் பெனநான்**
**களவை காண்பரவையிற்றின் மேலுமறை**
**வரவையெல்லாம்**
**அளவை காண்டல் கருதலுரை யென்றிம்**
**மூன்றினடங்குமே"**

என்று குறிப்பிடுகின்றது. இம்மூன்று பிர மாணங்கள் பற்றிய பொதுவான அறிமுக த்தை வழங்குவதனை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.

1. **பிரத்தியட்ஷம் - (Perception)**
2. **அனுமானம் - (Inference)**
3. **ஆப்தவாக்கியம் - (Scripture)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரத்தியட்ஷம் (காட்சியளவை)**

பிரமாணங்களில் காட்சி முதன்மை யானது. அனுபவத்தின் வாயிலாகவோ அல்லது சிந்தனையின் வாயிலாகவோ அல்லாமல் நேராக அறியும் அறிவு காட்சி யறிவு என்பர். ஒரு பொருளை மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐந்து இந்திரியங் கள் வாயிலாக அறிவது புலக்காட்சி, இந்திரியக்காட்சி என்பனவாக அறியப்படு கின்றது. இதனை சைவசித்தாந்தம் பிரத்தி யட்ஷம் என வழங்கும். இது பிரத்தி + அக்ஷி அல்லது பிரத்தி + அக்சி எனப் பிரித்து புலனுறுப்புக்கு முன்னதாக அல்லது கண் முதலான புலன்களுக்கு முன்னதாக என விளக்கம் தருகின்றது. சைவசித்தாந் தம் காட்சி என்பதற்கு பெயர், சாதி, குணம் கன்மம் பொருள் என்னும் ஐந்து வேறுபாடு களுடன் அவ்விடயத்தை அறியும் ஆன்ம சிற் சக்தியே குற்றமற்ற காட்சிப் பிரமாணம் எனக் கூறியுள்ளது. காட்சியானது இலட்ச னம் கருதி இரண்டாக வகைப்படுத்தப்ப ட்டுள்ளது அவையாவன

- நிர்விகற்பக்காட்சி
- சவிகற்பக்காட்சி

•என்பனவாகும். நிர்விகற்பக் காட்சி என்பது பெயர், சாதி, குணம் பொருள் எனும் வேறு பாடுகள் இல்லாது பொருண்மை மாத்திரம் அறிவதாகும். இது எழுவாய்க் காட்சி எனவும் பொதுமைக்காட்சி எனவும் கூறப் படும். சவி கற்பக்காட்சி என்பது மேற்கூறப் பட்ட விகற்பங்கள் எதுவுமற்ற நிலையாகும். அதாவது நேரடியாக அறிதல் காட்சியின் தன்மையாகின்றது இது பகுத்துணர்வுக் காட்சி என விளக்கப்படுகின்றது. சிவஞான சித்தியாரில் காட்சி அளவையானது வாயில் காட்சி, மானதக்காட்சி, தன் வேதனைக் காட்சி, யோகக்காட்சி என நான்காக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதனை தத்து வப் பிரகாசசுவாமிகள் **"மேலானவை காட்சியொரு கருதலிலை மூன்றாம்"** எனத் தத்துவப் பிரகாசத்தில் குறிப்பிட்டுள்ளார். அவர் ஐயம், திரிபு, விகற்பம், வாயில் மானதம், தன்வே தனை, யோகம் எனக் காட்சியை ஏழுவகையாகக் குறிப்பிடுகின்றார்.

வாயில்காட்சி அல்லது இந்திரியக் காட்சி என்பது மெய், வாய், கண், மூக்கு செவி என்னும் ஐம்பொறிகள் வாயிலாகக் கொண்டு பொருளைப் பொதுவாக அறிவது இதனை சிவஞான சித்தியார் தெளிவாக விளக்கியுள்ளார். மானதக் காட்சியென்பது பொறிகளால் அறிந்த பொருளை மனதின் கண் ஆராய்ந்துணர்வதாகும். பொருள் பற்றிய அறிவால் ஏற்படும் இன்ப துன்ப உணர்வு பற்றிய அறிவு தன்வேதனைக் காட்சியாகும். மனம் புலன்களில் துணை யின்றி தொலைவில் நிகழ்ந்தவற்றையும் எதிர்காலத்தில் நிகழ்பவற்றையும் அறியு மானால் அது யோகக் காட்சியாகும். இதனைப் பெறுபவர் ஒரு சிலரே ஏனென்றால் அரிய தவங்களைச் செய்து மனதைக் கட்டுப்படுத்தி சமமான நிலையில் வைத் திருப்பவர்கள் இன்ப துன்பங்களுக்கு ஆட் படாமல் உண்மையை உள்ளவாறு உணர முடியும். இம்மூன்று காட்சி நிலைகளில் இருந் தும் வேறுபட்டதாக விளங்குகின்ற யோகக் காட்சியை "சமாதியான் மலங்கள் வாட்டி பொருந்திய தேச கதாலவியல் கல பொருள் களெல்லாம" என சிவஞானசித்தியார் குறிப் பிடுகின்றார். இராமானுஜர் காட்சியை லௌ கீகக் காட்சி - (சாதாரண நிலையில் உலகப் பொருளை அறிதல்) அலௌளகீகக் காட்சி - (அசாதாரண வழியில் அக உணர்வில் அறிதல்) என விளக்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனுமானம் (கருதலளவை)**

இந்திய மெய்யியல் பரப்பில் அனுமானம் மிக முக்கியமான பிரமாணமாகக் கொள்ளப்படுகின்றது. பிரத்தியட்ஷ அறிவினால் பெற்றுக் கொண்ட விடயங்களை நாம் அமைக்கும் ஊகம் அனுமானமாகும். இதனை கருதலளவை, ஊகம், உத்தேசம், உய்த்துணர்வு எனப் பொருள்கருதி பலவாறு அழைப்பர். அனுமானம் என்பது ஐம்புலன்களால் அறியப்படுவதல்ல மாறாக மறைந்து நின்ற பொருளை அப்பொருளோடு நீங்காது உடனால் இருக்கின்ற ஏது வைக் கொண்டு உணர்வதான அறிவு என விளக்கப்படுகின்றது. ஒரு குன்றில் நின்று புகை புகை யாது எனில் புகையுள்ளதேல் நெருப்புக்குள்ளா குதல் வேண்டும். அதாவது காணப்படாத ஒரு பொருளினைக் காணப்பட்ட பொருளின் உறவினை அனுமானித்து அறிவது அனுமானத்தின் சிறப்பியல்பாகும்.

சுருக்கமாக கூறின் அறிந்த ஒன்றை அடிப்படையாகக் கொண்டு அறியாத ஒன்றை ஊகித்து அறிந்து கொள்ளுதலாகும். அதாவது ஒன்றிற்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்ற வேளையில் யாதாயினும் ஒரு நிகழ்ச்சியைக் கொண்டு மற்றைய நிகழ்ச்சியை அனுமானித்துக் கொள்ளுதலாகும். எடுத்துக் காட்டாக நிலம் நனைந்திருப்பதை மட்டும் பார்த்து விட்டு மழைபெய்திருக்க வேண்டும் என ஊகித்து அறிந்து கொள்ளுதலாகும். இந்திய அறிவாராட்சியலில் அனுமானம் இரண்டு வகையாகப்பாகு படுத்துகின்றனர்.

- **தன்பொருட்டனுமானம் / சுவார்த்தனு மானம்**
- **பிறர்பொருட்டனுமானம் / பரார்த்தனு மானம்** என்பன அவையாகும்.

தன் பொருட்டனுமானம் என்பது இயல்பு, காரியம், அநுபலப்தி எனும் மூன்று ஏதக்களில் ஓர் ஏதுவுடைய பொருளைப் பக்கம் சுபக்கம் விபக்கம் என மூன்றில் வைத்து தானறிவதாகும். அதனை பிறருக்கு விளக்கும் பொருட்டு அனுமானத்தை பயன்படுத்தும் போது அது பிறர் பொருட்டனுமானம் என பெயர் பெறும். அருணந்தி சிவாசாரியார் தன் பொருட்டனுமானம் பற்றிக் குறிப்பிடுகையில் "பக்க மூன்றில் மூன்றேதுவுடைய பொருளை பார்த்துணரத்தக்க ஞானந்தன் பொருட்டாம்" எனவும் அதே பாடலில் பிறர் பொருட்டனுமானம் பற்றிக் கூறுகையில் "பிறர் பொருட்டனுமானந் தொக்க விவற்றார் பிறர் தெளிய சொல்லாகும்" எனவும் குறிப்பிடுகின்றார். பிறர்பொருட்டனுமானம் ஆனது உடன் பாட்டு பிறர்பொருட்டனுமானம், எதிர்மறை பிறர்பொருட்டனுமானம் எனஇரண்டு வகையாக பாகுபடுத்துவர். இதனை அன்னுவயம், வியதிரோகம் எனவும் அழைப்பர். உடன் பாட்டுப் பிறர்பொருட்டனுமானத்திற்கு எடுத்துக் காட்டாக,

**இம்மலை நெருப்புடையது - மேற்கோள்**
**புகையுடைமையால் - ஏது**
**யாது யாது புகையுடையது - எடுத்துக் காட்டு**
**அது அது நெருப்புடையது - ஏற்றல்**
**அடுக்குகளைப் போல் - முடித்தல்**
**எதிர்மறை பிறர்பொருட்டனுமானத்திற்கு** எடுத்துக்காட்டாக,

**இம் மலை புகையுடைத்தன்று**
**நெருப்பின்மையால்**
**யாது யாது நெருப்பிலது**
**அது அது புகையிலது**
**தாமரைப் பொய்கைபோல்**

உடன்பாடாகவும், எதிர்மறையாகவும் வரும் இவ்விரு பிறர்பொருட்டனுமானங்களை ஐந்து உறுப்புக்களால் இணங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக்கூறுகின்றது மணிமேகலை. அவை மேற்கோள் - (Staterment), ஏது - (Reason), எடுத்துக்காட்டு - (Illustration), ஏற்றல் - (Application), முடித்தல் - (conclusion) என்ற ஐந்து அங்கத்துவங்கனூடாக இதனை விளக்குகின்றனர். அத்துடன் நிறுவுடைமையை பாதிக்கக் கூடியவாறு போலிகள் அனுமானத்தில் ஏற்படும் அவை யாவன பக்கப்போலி, ஏதுப்போலி, உவமைப்போலி தோல்வித்தானம் என நான்கு வகையாகும். இவை மேலும் 65 ஆக பிரியும் என்று சிவஞான சித்தியார்

**"ஈண்டு பக்கம் போலிநான் கேதுப்போலி**
**யொரு மூன்றாய்...**
**ஆண்டு மொழிவரவையெல்லா**
**மளக்கிலறு பத் தைந்தாகும்"**

எனக் கூறுகின்றது.

**ஆப்த வாக்கியம் (உரையளவை)**

இந்து மெய்யியலில் மிகமுக்கியமானதாக ஆப்தவாக்கிய பிரமாணம் அமைகின்றது. அதாவது நேரிலே கண்டுணரும் சிலவற்றில் கருவியாகக் கொண்டு ஆராய்ந்து உணர முடியாத உண்மைகளை நூல்கள் வாயிலாக உணருதலே ஆகும். இது ஆகமப் பிரமாணம், சுருதிப் பிரமாணம் எனவும் சப்தம், உரை, வாக்கு எனப் பல வாறாக அழைக்கப்படுகின்றது ஆப்தம் என்பது முதல்வன் வாக்காகக் கருதப்படுகின்றது. நிட்சிதமாக இருக்கின்ற அர்த்தத்தைக் கூறுபவன் ஆப்தனாகின்றான். சைவ சித்தாந்தம் வேதாகமங்களை பொது, சிறப்பு பிரமாண நூல்களாக ஏற்றுக் கொள்ளுகின்றது. இவ்விரு நூல்களையும் இறைவன் தான் அருளியவர் என்பதனை திருமூலர்

**"வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்..."**

என திருமந்திரத்தில் பதிவு செய்கிறார். அநாதியே மலத்தினுள் பந்திக்கப்படாத முற்றறிவுடைய முதல்வன் அருளிச் செய்த நூல்கள் என்கிறார் அருணந்திச் சிவாசாரியார்,

**"அனாதியே அமலனாய அறிவனூலாக**
**மந்தான்..."**

எனக் குறிப்பிட்டுள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது.

பெருமை மிக்க வேதங்கள், ஆகமங்கள் யாவும் தீர்க்கதரிசிகள் அருளிய மூலச் சான்றுகளாம் அந்த அருள்வாக்குகள் வேதங்களில் அருளிச் செய்யப்பட்டுள்ளன. என டாக்டர் - இராதாகிருஸ்ணன் கூறுகின்றார். சிவஞான சித்தியார் "காட்சி அனுமானம் விட்ட பொருள் விளக்குவது ஆகமம்" எனவும் தொல்காப்பியம் "வினையில் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதன் நூலாகும்" எனவும் சிறப்பித்துக் கூறுகின்றன.

இந்த ஆகம அளவையானது தந்திரம், மந்திரம், உபதேசம் என மூவகைப்படும் வேதங்களில் சொல்லப்படும் கிரியைகளை முரண்பாடின்றி ஆற்றுவதற்காக வழி காட்டுவனவாக தந்திரங்கள் அமைகின்றன. இறைவழிபாட்டை மேற்கொள்வதற்குப் புலன்களைச் செம்மைப்படுத்தி அவற்றின் வழி உண்மைத் தத்து வத்தை காட்டுவதற்கு உதவுவன மந்திரங்களாகும். இறைவன் பற்றிய அறிவு அளவை ஊடாகவும் நெறிப்படலாம் என்பது சித்தாந்திகளின் ஏக மனதான கருத்தாகும். இந்தவகையில் சைவசித்தாந்தம் தத்துவம்சார் கோட்பாடு மட்டுமன்றி, தர்க்கவியல் ரீதியிலும் நிலை பெறுவதற்கு அவை ஏற்று நிற்கும் பிரமாணங்களே காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்**

- தேவசேனாதிபதி, வ. ஆ., 1924, சைவ சித்தாந்தத்தின் அடிப்படைகள், சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை.
- மெய்கண்ட சாஸ்திரம், 1924, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.
- திருவிளங்கம், மு., 1971, சிவஞானசித்தியார் சுபக்கம் (உரை), கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்புக்கழகம், யாழ்ப்பாணம்.
- ஞானகுமாரன், நா., 2012, சைவ சித்தாந்த தெளிவு, தூண்டி கேணியடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
- கிருஸ்ணராஜா, சோ., 1995, சைவசித்தாந்த அறிவாராட்சியல், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கொழும்பு.
- முத்துராமன், எம்., 2006, சைவ சித்தாந்தம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.
- சிவானந்தமூர்த்தி, க., 2017, சைவ சித்தாந்த - தமிழர் மெய்யியல், அம்பாள் வெளியீட்டகம், புத்தூர், யாழ்ப்பாணம்.

## யாழ்.விருது பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | வைத்தியகலாநிதி இ.தெய்வேந்திரன்<br>(சைவசமய விவகாரக்குழுவின் ஆரம்பகர்த்தா) | 2006 |
| 2. | உயர்திரு வே.பொ.பாலசிங்கம் (முன்னாள் ஆணையாளர், யா.மா.ச) | 2007 |
| 3. | வைத்திய நிபுணர் திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி<br>(யாழ் போதனா வைத்தியசாலை) | 2008 |
| 4. | உயர்திரு க.கணேஸ் (முன்னாள் அரச அதிபர், யாழ் மாவட்டம்) | 2009 |
| 5. | சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (தேகாந்தநிலை) | 2010 |
| 6. | வைத்தியநிபுணர் ந.ஜெயக்குமார்<br>(புற்றுநோயியல் வைத்திய நிபுணர், யாழ் போதனா வைத்தியசாலை) | 2011 |
| 7. | நயினாதீவு நாகபூஷணி அம்மன்<br>அமுதசுரபி அன்னதானசபை | 2012 |
| 8. | அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளார்<br>(அமைப்பாளர், திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்) | 2013 |
| 9. | வித்யாசாகரம் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்<br>(தலைவர், சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம்) | 2014 |
| 10. | பேராசிரியர் க.தேவராஜா | 2015 |
| 11. | உயர்திரு.திருநாவுக்கரசு இராசநாயகம்<br>(ஓய்வுநிலை அரச அதிபர்) | 2016 |
| 12. | கலாநிதி. ஆறுதிருமுருகன்<br>(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை) | 2017 |
| 13. | சிவத்திரு.செந்தில்வேலி மோகனதாஸ் சுவாமிகள்<br>(சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமனாறு) | 2018 |
| 14. | வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை | 2019 |
| 15. | கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதன் (சோ.ப) | 2020 |
| 16. | திரு.ஆ.இரவீந்திரன் (சமாதான நீதவான்)<br>(வாழ்வக தலைவர்) | 2021 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச ஈஸ்வரங்கள் பற்றி ஒரு பார்வை

**ஆரணி விஜயகுமார்**
மாணவி
யாழ் பல்கலைக்கழகம்.

பஞ்ச ஈஸ்வரங்கள் என்பன சிவபெருமானுக்காக இலங்கையில் கட்டப்பட்டுள்ள கோவில்களாகும். இவ்வீஸ்வரங்கள் நாட்டின் கரையோரப் பகுதிகளில் ஒவ்வொரு திசையிலும் அமைந்திருக்கின்றன. இராவணன் காலத்திலேயே இவ்வீஸ்வரங்கள் கட்டப்பட்டுவிட்டன என்பது மக்களிடையே காணப்படும் தொன் நம்பிக்கை ஆகும். 1917ஆம் ஆண்டில் ரோயல் ஏசியாட்டிக் கூட்டத்தின்போது டாக்டர் பவுல் ஈ.பீரிஸ் கீழுள்ளவாறு குறிப்பாக "விஜயனின் வருகைக்கு முன்பே இந்திய வழிபாட்டு அம்சத்தைக் கொண்டுள்ள பஞ்ச ஈஸ்வரங்கள் காணப்பட்டன என்கிறார்.

**பஞ்ச ஈஸ்வரங்களின் பட்டியல்**

| பெயர் | திசை | மாவட்டம் | தகவல் |
|---|---|---|---|
| திருக்கேதீஸ்வரம் | வடக்கு வடமேற்கு | மன்னார் | 274 பாடல் பெற்ற சிவாலயங்களுள் இவ்வாலயமும் ஒன்றாகும். |
| திருக்கோணேச்சரம் | கிழக்கு | திருகோணமலை | தெற்குப் பகுதியில் (நெடுங்கோட்டடிப்படையில் அமைந்திருப்பதால் தென்கையாலயம் என இது அழைக்கப்படுகின்றது. |
| நகுலேஸ்வரம் | வடக்கு | யாழ்ப்பாணம் | கீரிமலைக்கோவில் என இது அழைக்கப்படுகிறது. |
| முன்னேஸ்வரம் | மேற்கு | புத்தளம் | இராமர் இத்தலத்தில் இராவணனைக் கொன்ற தோசத்தை நீக்கிக் கொண்டார். |
| தொண்டீசுரம் | தெற்கு | மாத்தறை | கட்டடக்கலை வடிவத்தில் மற்றைய ஈஸ்வரங்களுடன் ஒப்பிடுகைகள் இது முற்றிலும் வேறுபடுகின்றது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்சேதீச்சரம்**

விதிகளுக்கு இணங்க மீண்டும் கட்டப்பட்டு பாலாவிப் புனித தீர்த்தக்குளமும் புதுப்பிக்கப்பட்டது. 1952ஆம் ஆண்டு ஆவணி மாதம் குடமுழுக்கு செய்யப்பட்டது. மேலும் சில அகழ்வாராய்ச்சியின் பின்னர் இத்திருக் கோயிலில் மீண்டும் 1976ஆம் ஆண்டு யூலை மாதம் நான்காம் தேதி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1990க்குப் பின் பூசையோ பெருவிழாக்களோ நடைபெறமுடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுக் காடு மண்டித் தளையாழுந்து காட்சி தருவது கண்கூடு பண்டைய அழகுத்திருக்கோயிலில் தற்போது இல்லையென்றாலும் சிவாகம விதிகளுக்கு இணங்கவும், திராவிடர் சிற்பக் கலை முறைகளுக்கிணங்கவும் தற்போதுள்ள திருக்கோயில் அழகும் சிறப்பும் ஒருங்கே அமையும் வண்ணம் அமைக்கப் பட்டு வருகிறது.

இந்நாட்டுப் பழங்குடியினரான நாகர்களது முக்கிய வழிபாட்டுத் தலமாதலால் இத் திருக்கோயிலிற்கு நாகநாதர் எனவும் பெயர் வழங்கி வந்துள்ளது. சோழர், பாண்டிய மன்னர்கள் பலதிருப்பணிகளை இத்திருக் கோயிலில் ஆற்றிய பெருமையும், வன்னி, யாழ்ப்பாண அரசர்கள் நித்திய நைமித்தியர்கள் இடையுறாது செய்த பெருமையும் கொண்ட திருத்தலம் இதுவாகும்.

இத்திருத்தலத்தை அண்டிய பகுதிகளில் பல சிவாலயங்களில் இருந்தமையை அகழ்வாய்வுத் தரவுகள் மூலமறிய முடிகிறது. அன்றியும் இத்திருவாலயம் உலகப் புகழ்பெற்ற பெருநகரமாகவும் பல்துறைத் தொழில் வல்லுனர்கள் வாழ்ந்த நகரமாகவும் சிற்பம் கலைநுணுக்கம் நிறைந்த ஆற்றல் மிக்க கலைஞர்களைக் கொண்டு திகழ்ந்த அழகு நகரமாகவும் மிளிர்ந்ததாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

திருக்கேதீச்சர திருத்தலத்தில் கணித்தால் வல்காலை என்னும் நகரமிருந்தமையும் பண்டல்கள் ஏற்றியிறக்கும் துறைமுகமாகவும் வல்கமெனும் பெருங்கப்பல்கள் கட்டுமிடமாகவும் இருந்துள்ளமையையும், வேறு மாலிகைத்திடல் என்னும் பாப்பா மோட்டை என்று இன்றும் அழைக்கப்படும் ஊர்கள் இருப்பதையும் காணலாம். அந்தணர்கள் வாழ்விடமாய் இருந்தமையால் அது பாப்பாமோட்டையெனவும் மாடமானினத்தார் மிளிர்ந்தமையால் மாலிகைத் திடல் லெனவும் அமைந்திருந்தன. பத்தாம், பதினோராம் நூற்றாண்டில் இக்கோயில் சோழ மன்னர்களின் இராசராசேஸ்வர மகாதேவன் கோவிலென அழைக்கப்பட்டது.

**திருக்கோணேச்சரம்**

இலங்கையில் உள்ள இரண்டு தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் இதுவும் ஒன்று. வருடாவருடம் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் விக்கிரகம் நகர்வலம் வருவதும் குறிப்பிடத்தக்கது. இக்கோவில் பதினெட்டு மகாசக்தி பீடங்களில் தேவியின் இடுப்புப்பகுதி விழுந்த பீடமாகவும் தந்திர சூடாமணி கூறும் 51 சக்தி பீடங்களில் தோளின் சிலம்புகள் விழுந்த பீடமாகவும் கருதப்படுகிறது. இவ்வாலயத்தை இலங்கையை ஆண்ட மனு மாணிக்கராசா என்ற மன்னன் இக்கோயிலைக் கட்டினான் என்று சான்றுகள் கூறுகின்றன. இது தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் ஈழநாட்டுத் தலங்களில் ஒன்றாகும். காலோட்டத்தில் கல்வெட்டு சிதைந்தபோதும் பலர் அக்கல்வெட்டினை வெற்றிடம் நிரப்பி புரிந்து கொள்ள முயற்சி செய்துள்ளனர். அவற்றில் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்க்காணுவது.

**"முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப் பணியை**

**பின்னே பங்கி பிரிக்கவே பூனைக்கண் - புகைக்கண்....**

ஆண்ட பின் தானே வடுகாய்விடும்" இங்கு குளக்கோட்டன் என்பானே இக்கோயிலுக்கு திருப்பணி செய்தான் எனப்படுகிறது. குளமும், கோட்டமும் கட்டுவித்ததால் இயற் பெயர் மறைந்து குளக்கோட்டன் எனும் பெயர் வழங்குவதாயிற்று. மீண்டும் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு சுமார் 450 வருடங்களின் பின்னர் 1952இல் உள்ள பெரியோர்களால் மீளக்கட்டுவிக்கப்பட்டது.

இத்தலத்தில் இறைவன் கோணேச்சரரும் இறைவி மாதுமையம்மாள் வீற்றிருந்து அருள்புரிகின்றனர். இக்கோயிலின் தீர்த்தம் பாவநாசம் என அழைக்கப்படுகிறது. அதன் அர்த்தம் பாவங்களைக் கழுவித் தீர்க்க வல்லது. தலவிருட்சம் கல்லால மரம் ஆகும்.

மஹோற்சவம் பங்குனி உத்தரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து பதினெட்டு நாட்களுக்கு நடைபெறுகின்றது. இந்த ஆலயத்தில் சிவராத்திரி தினம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மூன்று புறம் இந்துமகா சமுத்திரம் சூழ்ந்திருக்க உயரமான மலை உச்சியில் திருக்கோணேச்சரம் அமைந்துள்ளது. மலையேறவும் யாத்திரிகர்கள் சென்று வரவும் நல்ல சாலை வசதி உள்ளது. ஆலயத்தில் வலதுபுறம் பிரமாண்ட கலை வடிவ சிவபெருமான் நம்மை வரவேற்க கிழக்கு நோக்கிய சிறிய ராஜ கோபுரம் கடலை நோக்கி காட்சி தருகிறது. உள்ளே மகாமண்டபம், கருவறை முன்மண்டபத்தை அடுத்து மூலவர் கோணேச்சரம் அருங்காட்சி தருகிறார். அவருக்கு எதிரில் தெற்கு முகமாய் மாதுமை நாயகி எளிய வடிவில் அருள் வழங்குகின்றாள்.

ராவணன் சிவலிங்கம் ஒன்றைப் பெறுவதற்காக திருக்கோணேஸ்வரம் வந்து இறைவனை வணங்கி நின்றான். ஆனால் இறைவன் உடனடியாக ராவணனுக்கு காட்சி தரவில்லை. இதனால் கோபம் கொண்ட ராவணன் திருக்கோணேஸ்வர மலையை தன் வாளால் ஓங்கி வெட்டினான். இதனால் இறைவனின் கோபத்திற்கு ஆனான். இதையடுத்து தன் பத்து தலைகளில் ஒன்றை செய்து தசைநார்களால் வீணை செய்து சாமகானம் இசைத்தான். இதனால் மகிழ்ந்த இறைவன், ராவணனுக்கு சிவலிங்கம் ஒன்றைக் கொடுத்தார் என்றும் மற்றொரு வரலாறு சொல்கிறது.

**நகுலேஸ்வரம்**

நகுலேச்சரம் இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டம் கீரிமலையில் அமைந்துள்ள சிவன்கோவில் ஆகும். மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற சிவாலயமாக இது விளங்குகின்றது. அதனாலேயே உலகில் உள்ள பிரசித்தி பெற்ற ஆயிரத்தெட்டு சிவத்தலங்களுள் இதுவும் ஒன்றாக உள்ளது.

நகுலமுனி, இராமன் சோழவேந்தன், நளன், அருச்சுணன், மாருதப்புரவீகவல்லி, ஆதி சோழமன்னன் முகுசுகுந்தன் போன்றோராய் தொழப்பெற்ற தீர்த்தத் திருத்தலம் இதுவாகும். இவ்வாலயம் பிரதிக்கடன் செய்ய மிகப் பிரசித்திபெற்று விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலத்தில் திருத்தம்பலை கோவில் கொண்ட பெருமான் என்றும் திருத் தம்பலேசுவரர் ஆலயம் என்றும் பெயர் கொண்ட இக்கோவில் பின்னர் கீரிமலைக் கோவில் என்றும் நகுலேஸ்வரம் என்றும் அழைக்கப்பட்டது.

நகுலேஸ்வரத்தின் வரலாறுகள் தொடர்பில் தட்சிணை கைலாசபுராணம் யாழ்ப் பாண வைபவமாலை, சீர்பாத குழலானது கைலாசமாலை, நகுலேஸ்வர புராணம், நகுலவதிநிப்புராணம், என்பனவும் நகுலேஸ் வரர் விநோத விசித்திரக் கலிச்சொத்து, நகுலாம்பிகை, குறவஞ்சி, நகுலேஸ்வர சதகம் என்பனவும் இக்கோயிலின் சிறப்பைக் கூறுகின்றன.

இக்கோயில் ஆதிகாலத்தில் யாழ்ப்பா ணப் பகுதியில் வாழ்ந்துவந்த நகுலேசப் பாசுதர்களினால் அமைக்கப்பட்டதென்று வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றா ர்கள். இலங்கைத்தீவின் சகல திசைகளில் இருந்தும் தென் இந்தியாவிலிருந்தும் மக்கள் தலயாத்திரையாக இக்கோயிலு க்கு வந்தார்கள். மேலும் இத் திருக்கோயில் சமுத்திரக்கரையில் அமைந்திருப்பதால் நீத்தார் கடமைகளான அந்தியேட்டி, திவசம், சபிண்டீகரணம், அஸ்திசஞ்சபனம் முத லிய கிரியைகளுக்குச் சிறப்பாகவும், புண் ணியஸ்தலமாகவும் விளங்குகிறது.

சமுத்திர தீர்த்தமானது அங்கு தீர்த்த மாகும். பக்தர்களுக்குப் பாவ விமோசனங் களையும் இராஜயோகம் முதலான இரட் டைப் பயன்களையும் கொடுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் வல்லுனரைத் தலைவரா கக் கொண்டு ஆட்சிசெய்த ஆரியச்சக்கர வர்த்திகள் காலத்தில் அரச ஆதரவு பெற்ற பிரதான தலமாக நகுலேச்சரம் திகழ்ந்துள் ளது. பின்னர் மூன்று பிரகாரங்களும் 5 கோபுரங்களும் கொண்டு காணப் பட்டு இந்த பிரமாண்ட ஆலயமானது போர்த்துக்கீசர் காலத்தில் இடிக்கப்பட்டுள்ளது.

1000 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த வர லாற்று நிகழ்வுகள் இங்கு சிறப்பம்சங்க ளாக செதுக்கப்பட்டுள்ளன மாருதப்புரவீக வல்லி குதிரை முகத்துடன் இருக்கும் சிற்பங்கள், முனிவரிடம் வரம் பெறுவது போல் செதுக்கப்பட்ட சிற்பங்கள் குதிரை முகம் நீக்கிய மாருதப்புரவல்லியின் தோற்றம் ஆட்சி அரியணையில் இருந்த அவர் வீற்றி ருக்கும் காட்சி போன்று செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் இவ்வாலயத்தின் வரலாற்று மர புரிமையை நினைவுபடுத்துவதாக உள்ளது எனலாம்.

**முன்னேச்சரம்**

இத்திருத்தலம் அழகேசுரம் எனவும் வழ ங்கப்படுகின்றது. இக்கோயிலில் மக்கள், இன. சமய, மொழிவேறுபாடின்றி வழிபட்டு வருகின்றமை சிவன் கோயிலில் வடிவாம் பிகை சமேதராக முன்னைநாதர் உள்ளார். இக்கோயிலில் 18 மகாசக்தி பீடங்களில் தோளின் இடுப்புப்பகுதி பரந்த பீடமாகவும் தந்திரசூடாமணி கூறும் 51 சக்தி பீடங்க ளில் தேரியன் சிலம்புகள் பரந்த பீடமாகவும் கரு தப்படுகின்றது.

இத்திருக்கோயிலும் வரலாற்றுக்கு முந் திய காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட தா கவும், இராமாயண காலத்தில் உருவானதா கவும் பலவித கருத்துக்கள் நிலவுகின்றன. இராமாயண காலத்தில் இராமபிரான் இலங் கைத் தீவு வந்து இராவணனை எதிர்த்துப் போரிட்டு வெற்றிகண்டு, தனது மனைவி சீதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராட்டியை மீட்டுக்கொண்டதும் அவ்வெற்றிக்காக நன்றி தெரிவிக்க சிவபெருமானை இத்திருத்தலத்தில் வழிபட்டார் என்று கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

பண்டைய சில கல்வெட்டுக்களின்படி சோழமன்னன் குளக்கோட்டன் கோட்டை சிங்கள மன்னர்களான ஆறாவது பராக்கிரமபாகு ஒன்பதாம் பராக்கிரமபாகு ஆகியோர் இத்திருக்கோயிலினைச் சிறப்பித்துக் கட்டித் திருப்பணிகள் செய்ததாகவும், இக்கோயிலின் பராமரிப்புக்காக ஏராளமான வயல் நிலங்களை எழுதி வைத்ததாகவும் தெரிய வருகின்றது.

நவராத்திரி சிவராத்திரி ஆகிய இரண்டு பண்டிகைகளும் இத்திருக்கோயிலில் வெகு விமரிசையாகத் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவ்வாலயத்தின் தலவிருட்சம் அரச மரம் ஆகும். வேறெந்த ஆலயத்திலும் இல்லாதவாறு இங்கு திருவிழாக் காலத்திலே தினமும் காலையும் மாலையும் சோமஸ் கந்தமூர்க்கத்தின் வீதியுலா இடம்பெறும். இத்திருவிழாக்களுக்கு கோயிலின் சுற்றுப்புறத்தில் உள்ள மக்கள் பக்தியோடு ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர்.

**தொண்டேசுரம்**

தொண்டேசுரம் அல்லது தொண்டேச்சரம் என்பது இலங்கையின் தெற்கில் மாத்தறை மாவட்டத்தில் தெவிதுற எனும் பகுதியில் இருந்த ஒரு வரலாற்றுசிறப்பு மிக்க சிவன் கோவிலாகும். தற்போது தொண்டேச்சரம் கோவில் இருந்த இடத்தில் ஒரு விஷ்ணு கோவில் அங்கிருந்த சிங்களப் பௌத்தரால் எழுப்பப்பட்டுள்ளது. தெவிநுவர என இது அழைக்கப்படுகிறது.

காலத்தால் முற்பட்ட இந்த அழகுத் திருக்கோயில் இன்று அழிந்துவிட்டாலும் இதனைப் பற்றி அறிந்து வைத்திருந்தால் ஏனைய ஈழத்து இந்துத் திருக்கோயில்களும் நிலையை அடைந்து விடாமல் விழிப்புடன் பாதுகாத்துள்ள இடமும் என்பதே உண்மை. இபின்பதுதா முதலிய பிறநாட்டு யாத்தீரிகர்களும் வந்து பார்த்து வியந்து பாராட்டி தமது வரலாற்று குறிப்புக்களை நூலில் எழுதி வைத்துச் செல்லுமளவுக்கு இத் திருக்கோயில் அழகிலும், செல்வத்திலும். தெய்வீகத்திலும் சிறந்து விளங்குகின்றது.

தென்னாவரம் தொண்டீஸ்வரம் திருக்கோயிலின் மற்றொரு சிறப்பம்சம் அத் திருக்கோவில் சைவ, வைணவ பேதங்களுக்கு இடமளிக்காமல் முழு இந்தமதத்திற்கும் பொதுவாக விளங்குமாறு சிவபெருமான் மகாவிஷ்ணு ஆகிய இரு தெய்வங்களுக்கும் ஒரே வளாகத்துள்ளேயே கோயில்களைக் கொண்டு அமைந்திருந்தது என்பதாகும்.

தென்னாவரம் தொண்டீஸ்வரம் திருக்கோயில் 5ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இக்கோயில் உறையும் சிவபெருமான் தமது சிரசில் பிறை நிலவைச் சூடுவிப்பதனால் அவர் சந்திர மௌலீஸ்வரர் என்றும் திருப்பெயரைக் கொண்டிருக்கிறார். அதனாலேயே இப்பெயர் பெற்றார்.

இந்திரக் கோலங்களாயுமே திராவிட கேரள சிற்ப மற்றும் கட்டடக்கலை முறைகளுக்கிணங்க, சிவாகம விதிகளுக்கு அமைய அமைக்கப்பட்டிருந்தன. தங்க பண்ணக் கோபுரங்களுடன் இத்திருக்கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபுரங்கள் விளங்கியதால் கடல் மூலம் மாத்தறை மற்றும் காலித் துறைமுகங் களுக்குப் பயணம் செய்த மாலுமிகளின் பார்வையில் இத்திருக்கோவில் வளாகம் ஒரு நல்ல நகரமாகக் காட்சியளித்ததாக வரலாற்று எழுத்தாளர்கள் எழுதியுள்ளார் கள்.

தென்னாவரம் தொண்டீஸ்வரம் திருக் கோவில் அமைந்த மிகச்சிறந்த துறைமுக நகரமாகவும் விளங்கியது. இத்திருக் கோளங்களின் கருத்தறிகளைக் கொண்டு. கட்டியெழுப்பினார்கள். அந்நாட்களுடன் இத்திருக்கோவில் தனது புனிதத்துவத் தையும், மகத்துவத்தையும் இழந்தது.

நீண்டகாலத்துக்குப் பின்னர், இருபதாம் நூற்றாண்டில் புதைபொருள் ஆராய்ச்சியா ளர்களால் இத்திருக்கோவிலின் சிதைபாடு களும், தெய்வ திருவுருவச் சிலைகளும் கண்டெடுக்கப்பட்டன.

பஞ்சேஸ்வரங்களில் ஒன்றான தொண் டீஸ்வரத்தின் பழைமை, மேன்மை, இருப்பு, வளம் யாவும் வெளிக்கொண்டு வரப்படு வதன் மூலம் இலங்கையின் ஆதிக்குடி களின் வழிபாட்டு முறையை நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்தலாம். எனவே விட யங்கள் மூலம் பஞ்ச ஈச்சரங்களின்மேன்மை, தொன்மை, வளம் ஆகியவற்றினை நாம் கண்டுகொள்ள முடிகின்றது.

தமிழர்களுடையதும் இலங்கையினுடை யதும் பூர்வீக புராதன சமயமான சைவத் தினுடைய ஆதி வழிபாட்டு இடமும் பாடல் பெற்ற தலமும் மாமன்னன் இராவணனு டைய காலத்திலேயே இருந்த ஈச்சரமுமான திருக் கோணேச்சரத்தை விகாரை அமைந்திரு ந்த இடம் எனவும் மேதானந்த தேரர் வெளி யிட்டுள்ள கருத்துக்கள் சைவத் தமிழர்களை மிகவும் மனவேதனைக்கு உள்ளாக்கி உள்ளது.

திருமூலரால் சிவபூமி என்று அழைக்கப் பட்ட இந்த நாட்டில் ஒரு காலத்தில் சிவ வழிபாடு மட்டுமே எங்கும் பரந்து வியாபித்து இருந்தது. பின்னர் காலத்திற்கு காலம் அந் நியர் வருகையால் ஏற்பட்ட மத மாற்றங்கள் காரணமாக பல புராதன சிவாலயங்கள் அழிக்கப்பட்டன. இதேபோன்று சைவத் தமிழ் மக்களுடைய வாழ்விடங்கள் பறிக்கப் பட்டன. உண்மையும் மத நல்லிணக் கத்தை யும் நேசிக்கும் அனைவரும் நாட்டின் பூர்வீகக் குடிகளான சைவத்தமிழர்களின் வழிபாட்டு தொன்மங்களை பாதுகாக்க உரத்து குரல்கொடுக்க வேண்டும் என அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**உசாத்துணைகள்**


பஞ்ச ஈஸ்வரங்கள் ta.m.wikipedia. org/wiki/ பஞ்ச - ஈஸ்வரங்கள்.

பஞ்ச ஈஸ்வரங்கள் - thuruvi.com

தொண்டீஸ்வரம் - ourjaffna.com

திருக்கேதீச்சரம் - தமிழ் விக்கிப்பீடியா, ta. wikipedia.or

திருக்கேதீஸ்வரம் திருக்கோயில் வரலாறு புரா தன இலங்கையின் சிவாலயம் our Jaffna.com

கேதுபகவான் வழிபட்ட திருக்கோவில் www.maalaimalar.com

திருக்கோணேச்சரம் - தமிழ் https://ta.m Wikipedia.org>wiki

முன்னேஸ்வரம்/Jaffna/

யாழ்ப்பாணம் /Jaffna

https://ta.mwikipedia.org.wiki

நகுலேச்சரம் -தமிழ் https://ta.mwikipedia.org.wiki




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகிலா ஆடல்புரியும் அம்பலத்தரசனின் ஆலயம் - தில்லைச் சிற்றம்பலம்

**தி.மனோஷன்**
மாணவன்,
பேராதனை பல்கலைக்கழகம்.

**அமைப்பும் தத்துவமும்**

இப்பேருலகில் மனிதன் தோன்றிய காலந் தொட்டு இன்றுவரை காலவெள்ளத்தாலும், நாத்திகவாதத்தாலும், வேற்றுமத ஊடுரு வல்களாலும் தன் பரிமாணத்தை இழக்காத ஒரே சமயமெனில், அது சைவப் பெருஞ் சமயமேயாகும். பஞ்சகிருத்திய காரண சொரூபனான சிவபெருமானையே பரம் பொருளாகக் கொண்ட உண்மைச்சமயமே சைவம் ஆகும். சிவபெருமான் ஆன்மாக் களை தன்வயப்படுத்தி ஆட்கொள்ள தானாகவோ அல்லது பக்தர் மூலமாயோ ஆலயங்களைக் கட்டுவித்தார் அங்கு தாம் அமைந்து பக்தர்க்கு மும்மலம் அறுவித்துத் தன்னோடு அணைத்தார். இவ்வாறு இப் பரந்த பூவுலகில் எண்ணற்ற சிவாலயங்கள் அமைந்திருப்பினும், அவை யாவற்றுக்கும் மணிமுடியாயத் திகழ்ந்து மிளிர்வது, ஆழி சூழ் நாவலந்தீவான பரதக் கண்டத்தில் உள்ள சோழவளநாட்டின் கடலூரில் உள்ள அதிமகோத்தமோத்தம புண்ணியத் தலமான சிதம்பரம் ஆகும். சகல சிவத்தல ங்களுக்கும் தலைமைத்தலமாதலால் கோயில் என்றாலே சிதம்பரம் எனப் பொருள் மையும். இத்திருத்தலமானது, தில்லைவ னம், புலியூர்/வியாக்கிரபுரம், புண்டரீகபுரம், ஆகாசஷேத்திரம் எனப் பல பெயர் கொண்டு விளங்குகின்றது.

**திருத்தல வரலாறு**

சிதம்பரத் திருத்தலத்தின் புராண வரலா றானது வேதவியாசர் அருளிய வடமொழிப் புராணமான ஸ்காந்தத்தின் சனற்குமார மற்றும் சூத சம்ஹிதைகளில் கூறப்பட்டுள் ளது. அவை தொகுக்கப்பட்டு முறையே சிதம்பர மகாத்மியம் என்றும் வியாக்கிரபுர மகாத்மியம் என்றும் வழங்கப்படுகின்றன. மேலும், சனற்குமார சம்கிதையை ஒட்டி தில்லை வன மகாத்மியமும் இயற்றப்பட்டுள் ளது. மேலும், ஹேமசபா மகாத்மியம், புண்டரீகபுர மகாத்மியம், பதஞ்சலி விஜயம் உள்ளிட்ட வடமொழி நூல்களும் சிதம்பரத் தின் வரலாறு கூறும் நூல்களாகும். இவற்றைவிட தமிழ்மொழியில் கோயிற் புராணம் மற்றும் சிதம்பர புராணம் எனும் நிலைமண்டிய ஆசிரியப்பாவும் சிதம்பர வரலாற்றைக் கூறுகின்றது.

இறைவன் தில்லைவனத்தில் அண்டம் அனைத்துக்குமாய் ஆனந்தத்தாண்டவம் ஆட முன்னமே, தாருகாவனத்தில் வேதமே பரம்பொருளென்று எண்ணி செருக்குற்றி ருந்த முனிவர்களின் ஆணவங்களைய ஆனந்தக் கூத்தாடினார். ஈசனுடன் மோகினி ரூபம் கொண்டுவந்த திருமாலும், தாருகா வனத்தினரும் மற்றும் சில தேவர்களுமே அவ்வானந்தக் கூத்தைக் கண்டின்புற்றோ ராயிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திருக்கூத்தைத் தானுங்காண அவா வுற்ற ஆதிசேடன், விட்டுணுவின் அனுமதியு டன் சிவனை நோக்கிக் கடுந்தவம் இயற்றி னார். தவத்தால் மகிழ்ந்த சிவன் பிரசன்ன மாகி தான் ஆன்மாக்களுக்கு அருளும் பொருட்டு பூலோகத்தில்தில்லை மரங்க ளால் சூழப்பெற்ற வனத்தில் திருக் கூத்தை ஆடுவதாக வரமருளினார். அதனால் ஆதி சேடனும் பூவுலகில் பிரம்பரிக்ஷி அத்திரிக்கு குழந்தையாக ஆற்றில் கிடைத்தார். அக் குழந்தைக்கு "பதஞ்சலி" எனப் பெயரிட்டு வளர்த்தார் மகரிக்ஷி அத்திரி.

காலப்போக்கில், அத்திரி மகரிக்ஷியும் வியாகிரபாதரும் (புலிக்கால் முனிவர்) சிவனின் கூத்தைக் காண தில்லைவனத் தில் பர்ணசாலை அமைத்து, அங்கு ஏலவே தான்தோன்றியாய் இருந்த ஸ்ரீ உமைய பார்வதி உடனாய ஸ்ரீ ஆதிமூலநாதரை (சிவ லிங்கத் திருமேனி) பூசித்தும், தவமியற்றியும் வந்தனர். அத்தவத்தில் பதஞ்சலி முனிவரும் இணைத்து கொண்டார். பதஞ்சலிக்கு அருளிய வரத்தை நிறைவேற்றத் திருவுளங் கொண்டார் ஈசன்.

தை மாதத்தின் பூச நட்சத்திரமும், பௌர்ணமித் திதியும் கூடிய வியாழக்கிழ மையில் தான் தில்லையில் அம்பலத்தில் ஆடல் நிகழ்த்துவதாக திருவாய் மலர்ந்த ருளினால் சிவபெருமானார். இப்புண்ணிய வாக்கானது அகிலம் முழுதும் அறிவிக்கப் பட்டது. பரம்பொருளின் ஆடல் காண முப் பெருந்தேவதேவியரும், முப்பத்துமுக் கோடி தேவர்களும், ரிஷிகளும், முனிவர்களும் தில்லைவனத்தில் கூடினர். இந்திர தேவனின் வேண்டுகோளுக்கிணங்க, தேவ சில்பியான வர் மானிடரூபத்தில் தென்திசை நோக்கி செம்பொன்னாலாகிய அரங்கை அமைத் தார். சிவகணங்களின் கைலாய வாத்தியங் கள் முழங்கவும், விட்டுணுவானவர் பஞ்சமுக வாத்தியத்தை இசைக்கவும், பிரமாதி தேவர்கள் ஈசனைப் பலவாறு துதித்துப் பாடவும், பத்தர்கள் "நமச்சிவாய" என்று கோக்ஷமிடவும், இவர்கள் அனைவரையும் நந்தியெம்பெருமான் பொற்பிரம்பு கொண்டு கண்காணித்து நிற்கவும், அச்செம்பொன் னம்பலத்தில் நட்சத்திரங்களெல்லாம் வெட் கித் தலைகுனியும் வண்ணம் சொல்லெணா முடியாத அனேக கோடி சூரியப் பிரகாரத் துடன் ஸ்ரீமன் நடராஜப் பிரபுவானவர் ஸ்ரீமத் சிவ காமசுந்தரியம்மையுடன் சோதியாய்த் தோன்றி பின் உருவங்கொண்டு, அன்னை யானவள் அருகில் நின்று ரசிக்கும் வண்ணம் அண்டப் பேரண்ட நடனத்தை தில்லையில் பதஞ்சலிக்கும் வியாக்கிரபாதருக்கும் மற்றும் ஏனையோருக்கும் காட்டியருளி, ஈற்றில் ஆனந்தமயமான பஞ்சகிருத்திய கோலத்து டன் நடராஜராகக் காட்சியருளினார். இவ் வண்ணம் பதஞ்சலிக் களித்த வரத்தை நிறைவேற்றுங்கால் எம்பிரான் சகல உயிர் களுக்கும் அருள்புரிந்தார். இதுவே இறை வன் தில்லையில் ஆனந்தக் கூத்து ஆடிய புராணமாகும்.

இத்தலம் தோன்றிய காலத்தை அறிவ தற்கு அரிதாய் உள்ளது. இத்தலம் வேத காலத்திற்கும் முந்தையது என்பது, வேதாந் தங்களிலும் சிற்றம்பலம் பற்றிய குறிப்புகள் இருப்பதிலிருந்து தெளிவாகின்றது.

ஒருமுறை சிவபூதகணங்கள் திருக்கயி லையில் சிவத்தைக் காணாது எல்லா விட முந்தேடி ஈற்றில் காசியிலுங்காணாது பரித வித்து நின்றபோது, சிவபெருமான் அவர்க ளைத் தில்லைக்கு வரவழைத்தார். சிவ னின் ஆணைப்படி தில்லைக்கு வந்த சிவக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணங்கள் அப்பனின் ஆடலில் இலயித்து, அங்கேயே தங்கிவிட்டனர். அங்கேயே தங்கியிருந்து ஆடல்வல்லானுக்கு பூசனைகள் புரிந்துவரலாயினர். இச்சிவபூத கணங்களின் பரம்பரையினரே பிற்காலத்தில் தில்லை மூவாயிரத்தார் (திரிஸஹஸ்ர முனீஸ்வரர்கள்) எனப்படலான மூவாயிரம் தீட்சித ர்கள் ஆவார்கள். ஆரம்பத்தில் தில்லையில் மகுடாகமம் வழிவந்த பூசைகளே ஆற்றப்பட்டன. பிற்காலத்துத் தீட்சிதர்கள் மகுடாகமப் பத்ததிக்குப் பதிலாக, பதஞ்சலி தொகுத்த வைதீக முறையிலான பூசைப் பத்ததியான ஸ்ரீ சிதம்பரேக்ஷ்வர நித்திய பூஜா சூத்திரத்தையே (பூஜா பதஞ்சலம்) பின்பற்றி நடராஜருக்குப் பூசைகளை ஆற்றலாயினர். இன்று வரை இந்த பதஞ்சலிப் பத்ததியே வழக்கிலுள்ளது.

**நடராஜ தத்துவம்**

எங்கும் எப்போதும் எல்லாமுமாய் இறைவன் குணங்குறி ஏதுமின்றி வியாபித்துள்ள நிலை சொரூபநிலை ஆகும். இந்நிலையில் சிவபெருமான் சகலதும் கடந்த பரப்பிரம்ம நிலையிலிருப்பார். மும்மலம் பீடித்து உழலும் ஆன்மாக்களுக்கு அருள்புரிந்தருள இறைவன் அருவம், உருவம், அருவுருவம் என்னும் முத்தோற்றம் கொள்வார். இந்நிலை, தடத்த நிலையாகும். இந்தநிலையில் குணங்குறி கொண்டு எழுந்தருள்வார். அருவமாய் உள்ளபோது எங்கும் வியாபித்த தன்மையை விளக்க அண்ட ஆகாய ரூபமாயும், அருவுருவாய் சிவசக்தி சொரூபமாக சிவலிங்கத் திருமேனியாயும், ஆன்மாக்கள் எளிதில் உணர்ந்து சிவத்தை அடைய அறுபத்து நான்கு திருமேனிகளாகவும் உருக்கொண்டு எழுந்தருள்வார். இந்த அறுபத்து நான்கு சிவமூர்த்தங்களுள் தலைமை மூர்த்தமாகவும், மற்றைய மூர்த்தங்களின் சாரமாயும் விளங்குவது ஸ்ரீ நடராஜ மூர்த்தமாகும்.

நடராசப் பெருமானின் திருவடிவை நோக்கினால், தெற்கு நோக்கி நடமிடுவதைக் காணலாம். பெருமான் நான்கு திருக்கரங்களில் இடது முன்கரத்தினை அபயமாகவும், பின்கரம் உடுக்கை ஏந்தியதாகவும் நடமிடுவார். வலப்புற முன்கரத்தை கஜஹஸ்தமாகவும், பின்கரத்தில் அக்கினியை ஏந்தியும் கூத்தாடுவார். மேலும், வலது காலை சிறிது வளைத்து, முயலவன் மீது ஊன்றியும், இடதுகாலைத் தூக்கியதாகவும் காட்சி தருவார். பெருமானின் ஒவ்வொரு அசைவும் பலபொருள் தருவன.

எவ்வாறெனில், அபயகரமானது உயிர்களை அபயமளித்துக் காக்கும் வண்ணமும், உடுக்கை ஏந்திய கரமானது ஏழிசை மற்றும் தனு, கரண, புவன போகங்களின் தோற்றத்தையும், கஜஹஸ்தமானது தூக்கிய திருவடியை நோக்கியபடியிருந்து, ஆன்மாக்களின் மலபந்தத்தை நீக்கி பேரின்பமான முத்திக்கு வழிகாட்டுவதாகவும், அக்கினியேந்திய கரமானது பிறவியுடலின் சங்காரத்தையும், முயலகன் மீது ஊன்றிய திருவடியானது ஆணவமுருக்கொண்ட முயலகனை அழுத்தி மறைத்து மலபரி பாகம் செய்வதையும், தூக்கிய குஞ்சிதபாதமானது முத்தியின்பத்தை ஆன்மாக்களுக்கு அருளுவதாயும் உள்ளது. மேலும், கூத்தன் நின்றாடும் பீடத்தின் திருவாசி ஓங்காரத் திருவாசியாகும். ஓங்காரத் தத்துவமே நடராசர் தானென அது கூறி நிற்கின்றது.

பஞ்சகிருத்திய காரண சொரூபனான ஸ்ரீமன் நடராஜப் பிரபுவின் அங்கங்களே பஞ்சாட்சர மந்திரமான நமசிவாய என்பதை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆடம் படிகேணல் லம்பத்தா னையனே**
**நாடுந் திருவடியிலே நகரங் - கூடு**
**மகர முகரம் வளர்த்தோள் சிகரம்**
**பகருமு கம் வாமுடியப் பார்.**

என திருவதிகை மனவாசகங் கடந்தார் கூறியுள்ளார். அதாவது, கூத்தனின் நினைத்தற்கரிய திருப்பொற்பாதத்தில் "ந" காரமும், திருவந்தியிலே "ம" காரமும், திருத்தோள் தன்னில் "சி" காரமும், பெருந் திருமுகத்திலே "வ" காரமும், திருமுடியிலே "ய" காரமும் பொருந்தும். இவ்வாறு பஞ்சாக்கரமாகவும், பஞ்சாக்கரப் பயனாகவும் தில்லையம்பலச் செம்பொற்சோதி வானவனே திகழ்கின்றான்.

**திருச்சிற்றம்பலத் தத்துவம்**

ஒருமுறை தரிசித்தாலே இம்மையில் மறுமை நல்கும் தலம் தில்லைச்சிற்றம்பலம் ஒன்றேயாம். இத்தகு பீடுடைய திருத்தில்லையானது அங்கு நின்றாடும் அம்பலவாணனால் பல தத்துவங்களையும், பெருமைகளையும் தன்வசம் வைத்துள்ளது.

அண்டமே பிண்டம் என்பர் ஞானியர். அங்ஙனம், மானுட உடலில் அமைந்துள்ள இடை நாடி, பிங்கலைநாடி, சுழுமுனை நாடியென்னும் இவற்றுக்கொப்பாக முறையே ஈழம், இமயம், தில்லை எனும் மூன்று திருத்தலங்கள் இப்பேரண்டத்தில் அமைந்துள்ளன. சுழுமுனை நாடி செல்லும் தில்லையிலே எம் அப்பன் சதாசர்வ காலமும் தானும் ஆடி, தன்னிலிந்து பிறந்த இப்பேரண்டத்தையும் ஆட்டுவித்துமுள்ளான்.

சிற்றம்பலம் என்பது சிறுமை + அம்பலம் (தமிழ் மொழி), சிதம்பரம் என்பது, சித் + அம்பரம் (வடமொழி) எனப் பிரியும். அம்பலம்/அம்பரம் எனப்படுவது வெளி/ஆகாசம்/அண்டம் எனப் பொருள் கொள்ளத்தக்கது. சிறுமை/சித் என்பது நுண்ணியது எனப் பொருள்படும். அதாவது, சிவன் இவ்வண்டத்தின் நுண்ணியவற்றிலிருந்து இப்பிரபஞ்சம் முழுவதிலும் எங்கும் வியாபித்தும் என்றும் நிலைபெற்றிருக்கும் தன்மையே சிற்றம்பலமாகும்.

தில்லைத் திருத்தலமானது, 45 acre இற்கும் மேற்பட்ட பரப்பளவில் வடதமிழகத்தின் கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இத்தலம், இப்பேரண்டத்தின் இருதயதானத்தில் அமைந்துள்ளதாக புராணங்கள் விளம்பி நிற்கின்றன. சிற்றம்பலத்தை, இந்திரதேவன் தேவசிற்பியைக் கொண்டு கட்டுவிக்கும்போது மானுடயாக்கை வடிவிலேயே கட்டுவித்தார். ஏனெனில், அண்டத்தைச் சுருக்கினால் அது இப்பிண்டமான மனித உடலுக்கு சமமானதாகும்.

தில்லைக் கோயிலின் ஒன்பது வாயிற் கோபுரங்களும் மனிதவுடலின் நவதுவாரங்களைக் குறித்து நிற்கின்றன. தில்லைக் கோயிலில் சிற்றம்பலம்/ சிதம்பரம்/சிதாகாசம்/ஹேமசபை, பொன்னம்பலம் (கனக சபை), பேரம்பலம் (தேவசபை), தேரம்பலம் (நடன/நிருத்தசபை), ஆயிரங்கால் அம்பலம் (இராஜசபை) ஆகிய ஐந்து அம்பலங்கள் உள்ளன.

**சிற்றம்பலம்**

அண்டப்பேரண்ட ஆனந்தக்கூத்தை அன்னை அருகில் நிற்க அப்பன் ஆடுவது, இச்சிற்றம்பலத்திலேயே ஆகும். தில்லைக் கோயிலின் இச்சிற்றம்பலம், கோயிலின் நடுப்புள்ளியிலிருந்து சற்று இடதுபக்கம் விலகியுள்ளது. ஏனெனில், மானுட யாக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவான தில்லையின் இருதய தானத்தில் இச்சிற்றம்பலம் உள்ளதாலாகும். இவ்வம் பலத்தின் கூரையானது நவசக்திகளை நவகலசங்களாகக் கொண்டும், பஞ்சாக் கரம் எழுதப்பட்ட 21 600 செம்பொன் ஓடுகள் மானுடன் ஒருவனின் ஒருநாளின் சுவாச அளவைச் சுட்டியும், அவ்வோடுகளை இணைக்கும் 72 000 பொன்னாலான ஆணிக ளும் சுவாச நாடிகளின் எண்ணிக்கையைக் குறிப்பதுமாக வேயப்பட்டுள்ளது. இப்பொற் கூரையைத் தாங்கும் 64 கைமரங்கள் (beams), ஆயகலைகள் அறுபத்து நான் கையும், குறுக்குப் பலகைகள் இரத்த நாளங்களையும் சுட்டி நிற்கின்றன.

பொன்னம்பலத்தைக் கடந்து, பக்கவாட் டாக உள்ள படிகளாலேயே சிற்றம்பலத்தை அடையலாம். இந்தப் பக்கவாட்டான படி களை அடுத்து, சிற்றம்பலத்தின் வாயிலில் இருபுறமும் கஜயாளிகளையுடைய ஐந்து படிகள் காணப்படும். இவற்றை பஞ்சாக் கரப்படி/திருக்களிற்றுப்படி என அழைப்பர். இவை தூயவெள்ளியால் பூணிடப்பட்டிருக் கும். இப்பஞ்சாக்கரப்படியைத் தாண்டி சிற்றம்பலத்துட்டசெல்ல தீட்சி தருள்ளும் சிலருக்கே அனுமதியுண்டு. பஞ்சாக்கர மந்திர செபத்தின் மூலமாக, அதன் பயனா யும் சொரூபமாயுமுள்ள நடராசரை அடைய லாமென்பதே இதன் தத்துவமாகும்.

சிற்றம்பலத்தில் இறைவன் நின்றாடும் ஓங்காரப்பீடமானது பிரம்மா, விஷ்ணு, உருத்திர, மகேச்சர பீடங்களின் மேல் அமைந்துள்ளது. பிரம்ம பீடத்தில் காமிகாதி ஆகமங்கள் இருபத்தெட்டும், இருபத்தெட்டு சந்தனக் தூண்களாகவும், விஷ்ணு பீடத் தில் ஐம்பொறி/ஐம்பூதங்கள் ஐந்து தூண் களாகவும், உருத்திரபீடம் ஆறு சாத்திரங் களை (தருக்கம், வியாகரணம், வேதாந்தம், மீமாம்சம், சோதிடம், வைத்தியம்) ஆறு தூண்களாகவும் கொண்டுள்ளது. மகேச்சர பீடமானது சிற்றம்பலத்தின் கிழக்குப் பகுதி யில், பிரம்ம, விஷ்ணு, உருத்திர பீடங்களின் மேல் அமைந்துள்ளது. சந்தம், கல்பம், சோதிடம், நிருத்தம், வியாகரணம், சிட்சை ஆகியவற்றை ஆறு தம்பங்களாகவும் பஞ்சதத்துவங்களை (வைசேசிகா, பூர்வ மீமாம்சை, உத்தரமீமாம்சை, சாங்கியம், கௌடம்) ஐந்து தூண்களாகவும் கொண்டு, தன்மீது ஓங்கார பீடத்தையும் கொண்டுள் ளது. இவ் ஓங்காரபீடத்திலேயே நடராசரும் சிவகாமியம்மையாரும் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றனர்.

சிற்றம்பலத்தில் நடராசருக்கு வலப்புற மாக, அதாவது சிற்றம்பலத்தின் மேற்குப் பக்கமாக உள்ள சதாசிவபீடமே சிதம்பர ரகசியமென பரவலாக அறியப்படும் மகோ ன்த சந்நிதியாகும். சிற்றம்பலம் அண்டத் தின் இதயமாயும், அதிலுள்ள இச்சிறு சதாசிவபீடம் அண்டத்தின் உயர் நாடியாயு முள்ளது. இதனையே மருத்துவத்தில் மனித இதயத்தின் வலது இதயவறையில் (Right Atrium) இதயத் துடிப்பை ஆரம்பிக்கும் உயிர்போன்ற Sinoatrial node (SA node)/SA கணு என்று கூறுகின்றனர்.

இச்சந்நிதியில் நான்கு வேதங்களும் நான்கு பொற்துண்களாக விளங்கி நிற் கின்றன. இச்சிறு சந்நிதி, முன்பக்கம் நீல மும், பின்பக்கம் சிவப்புமான பட்டுத்திரையி னால் திரையிடப்பட்டிருக்கும். இது மாயை என்னும் திரைக்கு ஒப்பிடப்படுகின்றது. இத் திரையானது நாளொன்றின் இரகசிய பூசை க்காலத்தில் விலக்கப்பட்டு மாகாதீபாரா தனை நிகழ்த்தப்படும். ஆனால் அச்சந்நிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள் எந்நவொரு திருவிக்கிரகமும் காணப் படாது. செம்பொன்னாலான வில்வதள மாலையே தொங்கவிடப்பட்டிருக்கும். அச்சந்நிதியின் சுவரில் பொன்னாலான சிவ சொரூபமான திருவம்பலச் சக்கரம் பதிக்கப் பட்டும், கீழே திருவாசியுடன் கூடிய ஶ்ரீசக்கர மகாமேருவும் காணப்படும். இது ஶ்ரீமத் லலிதா திரிபுரசுந்தரியின் சொரூபமான தாகும். திருவம்பலச் சக்கரத்திற்கு சாற்றப் பட்டிருக்கும் புனுகு, வருடத்தின் ஒருமுறை களையப்பட்டு அபிஷேகம் நிகழ்த்தப்படும்.

சிதம்பர இரகசியம் யாதெனில், பரம்பொருளான சிவபெருமான், மாசற்ற வெளியான இப்பேரண்டம் முழுவதும் வியாபித்து, மந்திர, தந்திர, யந்திர சொரூபமாக என்றும் நிலைபெற்றுள்ளார். அதாவது, நுண்ணிய தான அணுவின் துணிக்கைகளிலும், மிகப் பெரியதான பிரபஞ்சத்திலும் எங்கும் அவனே நின்று ஆடலியற்றி அனைத்தையும் ஆட்டுவிக்கின்றான். இந்த உண்மையை மாயை என்னும் திரை மூடியுள்ளது. ஆன்மா வானது எப்பொழுது மாயையை இழக்குமோ அன்றே இவ்வுண்மையை அறியலாம். இது மிகவும் நுண்ணிய உண்மை என்பதனால், இரகசியம் எனப்படுகின்றது. அதனாலேயே சதாசிவபீடம் என்றும் திரையிடப்பட்டுள் ளது.

ஓங்காரபீடத்தில் நின்று நடஞ் செய்யும் நடராஜரானவர் தூலசொரூபமானார். அத்த கையவருடைய சூட்சும சொரூபமாக இரத் தினசபாபதியும் (மாணிக்க நடராஜர்), அவ் வியத்த சொரூபம் (வெளிப்படாது நிற்கும் ரூபம்) ஆக ஸ்படிகலிங்கமும் இச்சிற்றம் பலத்தின் மகேச்சரபீடத்தில் உள்ளனர். இந்த அவ்வியத்தமான ஸ்படிகலிங்கப் பெரு மானை சபாபதியே தன் சடைநிலவின் குளிர்ந்த கிரணங்களிலிருந்து தோற்று வித்து, நித்ய பூசைகளுக்காக தீட்சிதப் பெருமக்களிடம் வழங்கினார் என்கிறது தலபுராணம். இத்தகைய ஸ்படிகலிங்கப் பெருமான் தினமும் ஆறுகாலப் பூசையின் போதும் திருமஞ்சனத்தை ஏற்கின்றார். தினமும் இரண்டாங்காலப் பூசையின்போது ஸ்படிகலிங்கருடன் இரத்தினசபாபதிக்கும் திருமஞ்சனாதி உபசாரங்கள் இயற்றப்பட்டு பஞ்சாராத்தியானது அவ்விக்கிரகத்தின் முற்புறமாயும் பின்புறமாயும் காட்டப்படும். முற்புறமாகக் காட்டும் போது சுவாமி இருண்ட நிறத்தில் தென்படும் அதேவேளை, பின்புறமாகக் காட்டும் போது சுவாமி செந் நிறத்தில் பிரகாசிப்பார். ஆனி மற்றும் மார்கழி மாத உற்சவகாலங்களில் மட்டும் எட்டாம் திருவிழாவன்று அர்த்தசாமப் பூசை யின்போதே மாணிக்கசபாபதிக்கு மறு நாளைக்கான பூசைகள் நடந்தேறிவிடும். ஏனெனில் மறுநாளான ஒன்பதாந் திருவிழா வன்று நடராசப் பெருமான் சிற்றம்பலம் நீங்கி, தேருக்கு எழுந்தருள்வதாலாகும்.

**பொன்னம்பலம்**

இது கனகசபை என்று வழங்கப்படும். இதன் மேற்கூரையானது பொன்முலாமிடப்ப ட்ட செப்போடுகளால் வேயப்பட்டது. இவ் வம்பலம், நான்கு வாசல்களும் பித்தளைத் தகடுகளால் வேயப்பட்ட திருக்கதவங்க ளையுடைய செவ்வக வடிவச் சபையாகும். இச்சபையிலுள்ள பதினெட்டுக் கம்பங் களும் பதினெண் புராணங்களாகக் கொள் ளப்படுகின்றன. இவ்வம்பலத்திலே இரண் டாம் பரமேச்சரரான நந்தியெம் பெருமான் நடராசரை நோக்கியவாறு வீற்றுள்ளார். இவரை வழிபட்டு அனுமதி பெற்ற பின்ன ரேயே சிற்றம்பலத்துள்ளுறையும் கனக சபாபதியை வழிபடவேண்டும். அதுவே பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரவல்லதுமாகும். இவ்வம்பலத்திலேயே நித்தியபூசைகள் நிகழ்ந்தேறுகின்றன.

**பேரம்பலம்**

இதுவே தேவசபை எனப்படுகின்ற அம்பல மாகும். இச்சபையின் கூரை செப்போடு களால் வேயப்பட்டுள்ள சதுரவடிவ அம்பல மாகும். இச்சபை திருச்சிற்றம்பலத்துக்குக் கிழக்கே மூன்றாம் பிரகாரத்தில் உள்ளது. இவ்வம்பலத்திலேயே விநாயகர் விக் கிரகம், சோமஸ்கந்தமூர்த்தம், சிவானந்த நாயகி மூர்த்தம், வள்ளி-தெய்வயானை உடனாய திருமுருகன் விக்கிரகம் மற்றும் சண்டேச்சரர் ஆகியோர் (உற்சவ விக் கிரகங்கள்) எழுந்தருளியுள்ளனர். இவர்களு க்கு நித்திய, நைமித்திய கிரியைகள் தவ றாமல் இடம்பெற்று வருகின்றன.

**தேரம்பலம்**

இதுவே நடனசபை / நிருத்த மண்டபம் என அழைக்கப்படுவதாகும். இது நடராசரு டைய கொடிமரப் பீடத்திற்கு தெற்கிலுள் ளது. ஐம்பத்தாறு கற்றூண்களால் தாங் கப்படும் இச்சபை, குதிரை பூட்டிய தேர மைப்பைக் கொண்டது. இச்சபையில்தான் சிவபெருமான் காளியின் ஆணவம் அடங்க, ஊர்த்துவத் தாண்டவத்தை முன்னொருக் கால் நிகழ்த்தினர். இவ்வம்பலத்தின் தென் மேற்குத் திசையில் நரசிம்ம அனுக்கிரக மூர்த்தியான சரவேஸ்வரரின் திருச்சந்நிதி யுள்ளது.

**ஆயிரங்கால் மண்டபம்**

இது இராஜசபை என்ற போற்றுதலுக் குரியது. ஆயிரம் தூண்களால் தாங்கப்படும் இம்மண்டபம், ஆடல்வல்லானின் ஆனந்த மான கருணை பிரவகிக்குமிடமாகும். இச் சபையிற்றான் சிவகாம சுந்தரியுடனான நடராஜப்பெருமான், ஆனி உத்தரமன்றும், மார்கழித் திருவாதிரையன்றும் வேதபாரா யணத்துடன் மெய்யடியார்களின் கண்ணு க்கும் மனதுக்கும் விருந்தாக ஐந்து மணி நேரம் தில்லைவாழ் அந்தணர்களால் பெருந் திருமஞ்சனம் நடாத்தப்பெற்றுப் பின்பு ஏககால இலட்சார்ச்சனை ஏற்குமிடமாகும்.

**நித்திய பூசைகள்**

தில்லையில் தினமும் ஆறு காலங்களும் நித்திய பூசைகள் நேரந்தவறாது தீட்சிதர் களால் பதஞ்சலிப் பத்ததியைக் கைக் கொண்டு நடாத்தப்பட்டு வருகின்றது. காலைச்சந்திப் பூசையின் முன்பு திருவன ந்தற்பூசையும் (திருப்பள்ளியெழுச்சி), முன் னைய நாள் பள்ளியறை சேர்ந்த பெருமா னின் திருவடிப்பாதுகைகள் வாத்திய முழக் கத்துடன் பல்லக்கில் சிற்றம்பலத்தை அடையும். பின்பு பால், பழம் என்பன அமுது செய்விக்கப்பட்டு தீபாராதனை நிகழ்த்தப் படும். நாளின் முதலாம் பூசையான காலைச் சந்திப் பூசையின்போது, காலைச்சந்தியாக மும் தொடர்ந்து ஸ்படிக லிங்கப் பெருமானு க்குத் திருமஞ்சனமும் நிகழ்ந்து, பின்பு கன கசபையில் இருந்தபடி நடராசப் பெருமானுக் குத் தீபாராதனை நடந்தேறும். இரண்டாங் காலைச்சந்தி பூசையின்போது ஸ்படிகலிங் கருக்கும் இரத்தினசபாபதிக்கும் திருமஞ் சனம் நடந்தேறி பின் கனகசபையிலிரு ந்தவாறு நடராசருக்குத் தீபாராதனை செய்யப்படும். இரத்தினசபாபதியின் பஞ் சமுக தீபாராதனையைக் காண கண் கோடி வேண்டும். உச்சிக்காலப் பூசையின்போது ஸ்படிகலிங்கருக்குத் திருமஞ்சனம் நடந் தேறி கனகசபையிலிருந்து தீபாராதனை செய்யப்படும். இப்பூசையின் நிறைவில் கோயில் திருத்தாளிடப்படும். பின் சாயரட் சைப் பூசைக்காகத் (பிரதோக்ஷகாலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசை) திருத்தாள் விலக்கப்பட்டு ஸ்படிகலிங்கருக்குத் திருமஞ்சனம் நிகழ்த்தப்பட்டு, பின்பு நடராஜருக்குக் கனகசபையிலிருந்தவாறு சோடச உபசார ஆராதனை நிகழ்த்தப்படும். சாயரட்சை இரண்டாங்காலப் பூசையான இரகசியப் பூசைக்காலத்தில், ஸ்படிகலிங்கருக்குத் திருமஞ்சனம் நடந்தேறி, பின் சதாசிவ பீடத்தில் அண்டத்தின் சொரூபமாக விளங்கும் வெளிக்கும், திருவம்பலச் சக்கரத்திற்கும், ஸ்ரீச்சக்கர மகாமேருவிற்கும் தீபாராதனை நிகழ்த்தப்பட்டுப் பின்பு கனகசபையிலிருந்தவாறு நடராசருக்குத் தீபாராதனை நடந்தேறும்.

நாளின் இறுதியில் நிகழ்ந்தேறும் அர்த்தசாமப் பூசையின்போது ஸ்படிகலிங்கருக்குத் திருமஞ்சனம் நடந்தேறி நடராஜருக்குத் தீபாராதனை செய்யப்படும். பின்பு, நடராசாப் பெருமானின் திருப்பாதுகைகள், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக அலங்கரிக்கப்பட்ட தங்கப் பல்லக்கிலேற்றப்பட்டு, வாத்திய முழக்கத்துடன் திருப்பள்ளியறைக்கு எடுத்துச் செல்லப்படும். பின் பள்ளியறை தீபாராதனை நிகழ்த்தப்பட்டு, முறையே சண்டேசுவரப் பெருமானுக்கும், வயிரவப் பெருமானுக்கும் ஈற்றில் அர்த்தசாம அழகருக்கும் (தில்லைத் திருத்தலத்தின் க்ஷேத்திரபாலர்) தீபாராதனை நடந்தேறி, கோயில் அன்றைய தினம் திருத்தாளிடப்படும். தில்லைக்கோயிலின் அர்த்தசாமப் பூசை மிகவும் தாமதமாக இரவிலேயே நடாத்தப்படும். ஏனென்றால், திருவாரூர் தியாகராசப் பெருமானைத் தவிர மற்றைய ஆலய தெய்வக் கலைகள் யாவும் ஈசனின் ஆடலில் அடங்க திருச்சிற்றம்பலம் வருவதாலாகும். பின் மறுநாட் காலையில் திருப்பள்ளியெழுச்சியின் பின்பு, திருச்சிற்றம்பலத்தில் அடங்கிய அத்தெய்வக் கலைகள் அனைத்தும் மீண்டும் தந்தலம் திரும்பும். இதனை, உமாபதி சிவாச்சாரியார் குஞ்சிதாங்கிரிஸ்தவம் நூலில் கூறுகின்றார்.

**நைமித்திய பூசைகள்**

மானுடர்களின் ஒரு வருடம் தேவர்களின் ஒரு நாள் என்பது புராணக் கூற்றாகும். அதனால், தேவர்கள் தில்லையம்பலத்தனைப்பூசிக்கும், மானுடவருடத்தின் குறித்த ஆறு நாட்களிற்றான் திருச்சிற்றம்பலத்துள் உறையும் ஸ்ரீமத் சிவகாமசுந்தரி உடனாய ஸ்ரீமன் நடராசப் பெருமான் பெருந்திருமஞ்சனாதி உபசாரங்கள் பெறுவார். மற்றும்படியான சாதாரண நாட்களில் தம்மைப் பூசிக்கவே ஸ்ரீமன் நடராசரானவர் ஸ்படிகலிங்கப் பெருமானையும் இரத்தினசபாபதியையும் தந்தருளினால். ஆகவே, வருடமொன்றில் திருச்சிற்றம்பலத்துள்ளுறையும் ஸ்ரீமத் நடராஜப்பெருமான் சமேத சிவகாமசுந்தரியார் ஆறுமுறைகளே திருமஞ்சனம் காண்பார்கள்.

அதாவது முதல் மகாபிஷேகமானது, தேவர்களின் உஷத்காலப் பூசையானது மார்கழி மாதத்து பௌர்ணமித் திதியுடன் கூடிய திருவாதிரை நட்சத்திரத்துடன் கூடிய நன்னாளில் நள்ளிரவிலும், காலைச்சந்திப் பூசையானது மாசி மாதத்து தேய்பிறைச் சதுர்த்தசித் திதி கூடிய திருநாளில் மாலையிலும், உச்சிக்காலப் பூசையானது சித்திரை மாதத்துத் திருவோண நட்சத்திர நன்னாளில் பகலிலும், சாயரட்சைப் பூசையானது (பிரதோஷ பூசை) ஆனி மாத உத்திர நட்சத்திரம் வானில் ஒளிரும் திருநாளில் நள்ளிரவிலும், சாயரட்சை இரண்டாங்காலப் பூசையானது ஆவணி மாதத்து வளர்பிறைச் சதுர்த்தசித் திதியுடைய நாளில் மாலையிலும், ஆறாங்கால அர்த்தசாமப் பூசையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது. புரட்டாசி மாதத்து தேய்பிறைச் சதுர்த்தசித் திதியில் பகலிலும் நடைபெறு கின்றது. தேவர்கள் சிதம்பரஸ்தனைப் பூசிக்கும் இந்நாட்களில் தில்லையே விழாக் கோலம் பூணும்.

இந்த ஆறு மகாபிஷேகங்களில் மார்கழி மற்றும் ஆனி மாதங்களில் வரும் நடசத்திர அபிஷேகங்களை ஒட்டி தில்லைக் கூத்தனு க்கு உரிய நன்நாளில் திருக்கொடியேற்றம் நிகழ்ந்து பத்து நாட்கள் மகோற்சவம் நடை பெறும். இவ்விரு மகோற்சவங்களின் போது முதல் ஏழு நாட்களும், பத்தாம் நாள் மாலை யும் பேரம்பலமான தேவசபையில் அருள் பாலித்து வரும் பஞ்சமூர்த்திகள் தினமும் ஊர்திகளில் எழுந்தருளி வலம்வந்து பக்தர் களுக்கு அருள்பாலிப்பார்கள். எட்டாம் நாள ன்று மாலை பிட்சாடனமூர்த்தி தங்க இரத த்தில் வலம் வருவார்.

எட்டாம் நாள் இரவில் திருச்சிற்றம் பலத்து மூலவர்களுக்கு சர்வ வஸ்திரா பரணங்கள் அணிவிக்கப்பட்டு, நீலநிறப்ப ட்டால் விக்கிரகங்களின் திருமுகங்கள் மட்டும் தெரியும் வண்ணம் மிகுதி அங்க ங்கள் மறைக்கப்படும். ஒன்பதாம் நாளன்று விடியற்காலையில் ஹேமசபாநாயகன் திருச் சிற்றம்பலத்துறையும் ஸ்ரீமத் சிவகாமியம் பாள் சமேதநாத ஸ்ரீமன் நடராஜப் பெருமான் தீட்சிதர்களால் பொற்பீடத்தில் தாங்கப் பெற்றவராய், தீவர்த்திகள் சூழவும், சிவனடி யார்கள் தமிழ் வேதபாராயணஞ் செய்யவும், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நமசி வாய எனக் கோஷமிடவும், வேறு சிலர், சிவபூதகண வாத்தியங்களை வான் பிளக்க முழங்கவும், நாதஸ்வர வித்துவான்கள் பக்திப் பெருக்குடன் மல்லாரி இசைக்கவும், சகல உலகையும் ஆட்டுவிக்கும் அண்ணல், அண்டப்பேரண்ட அதிபதி, சர்வாபரண தாரினனாய் அனந்தகோடி சூரியப்பிர காசமுள்ளவனாக மற்றத் தெய்வங்களுடன் திருத்தேரில் எழுந்தருள பஞ்சரத பவனி யாக ஆன்மாக்களுக்கு அருள்பாலிப்பார். தில்லையின் பெருவீதிகளில் தேர் உலா வந்த பிற்பாடு நடராசப் பெருமானும் சிவகாமி அம்மையாரும் ஆயிரங்கால் மண்ட பத்திற்கு எழுந்தருளிச் செல்வர்.

மறுநாளாகிய மகோற்சவத்தின் பத்தாம் நாள் சூரிய உதயத்திற்கு முன்பாக விடியற் காலை ஒருமணி முதல் ஆறு மணி வரை ஆயிரங்கால் மண்டபத்தின் இராஜச பையின் பூப்பந்தலின் கீழ் வீற்றிருக்கும் சிவ காமசுந்தரி சமேத ஆனந்த நர்த்தன மூர்த்திக்கு தீட்சிதர்களால் பெருந்திரு மஞ்சன சேவை நிறைவேற்றப்படும். இச் சேவையின்போது திருமஞ்சனப்பொடி, மஞ் சட்பொடி, தேன், பால், தயிர், பஞ்சகௌ வியம், அனேக பழரசங்கள், பஞ்சாமிர்தம், திருநீறு, சந்தனம், பன்னீர் ஆகிய திருமஞ் சனத்திரவியங்கள் கொண்டு ஐந்து மணி நேரம் மகாபிஷேசம் நடந்து, இறுதியில் மகா ஸ்நபனகலசமும் நடைபெறும். ராஜசபை தனில் நிகழும் இவ்வற்புத ஆனந்த அபிஷே கத்தைக்காண எத்துணை கண்களிருந் தும் போதாது.

அபிடேகம் கண்ட ஆனந்தத்திருக்கூத் தன் தொடர்ந்தும் இராஜசபையில் பட்டு வஸ் திரங்களாலும், இன்னோரன்ன ஆபரணங்க ளாலும், வாசனாதித் திரவியங்களாலும் அலங்கரிக்கப்பட்டு நிலைத்திருப்பார். அல ங்காரங்களின் பின்பு நூறு தீட்சிதர்கள் நடராசப் பெருமானின் முன் பணிந்து நின்று, ஒரே சமயத்தில் ஒவ்வொருவரும் பத்தாயி ரம் திருநாமங்கள் கொண்டு அருச்சிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏககால இலட்சாட்ச்சனை நடந்தேறும். பின்பு சோடச உபசாரங்கள் நிகழ்த்தப்பட்டு எம்பெருமானும் பிராட்டியும் தங்கப் பீடத்தில் எழுந்தருளி, பக்தர் தமை இரட்சிக்க பகல் ஒன்று தொடக்கம் இரண்டு மணியளவில் ஆயிரங்கால மண்டபத்திலிருந்து அண்டப் பேரண்ட நடனத்தை நிகழ்த்தி ஆனந்தமய மான தாண்டவமாடியபடி தமது இருப்பிட மான திருச்சிற்றம்பலத்திற்கு வேதவாத் தியக் கோஷத்துடன் எழுந்தருள்வார். இவ் வற்புதத் திருக்காட்சி ஞானாகாச சித்சபா பிரவேசம் என சிலாகித்துக் கூறப்படுகின் றது. பின்பு சிற்றம்பலத்தில் தேவதேவியர் க்கு மகா தீபாராதனை நிகழ்த்தப்படும்.

அதனைத் தொடர்ந்து, பஞ்சமூர்த்திய ரின் தரிசனமும், சிவகங்கைத் தீர்த்தக்கே ணியில் திருத்தீர்த்தோற்சவமும் நடை பெறும். அன்று மாலையில் சோமஸ்கந்தர், முத்து, பவளம், மாணிக்கம் பதித்த பலவண் ணப் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பல்லக் கில் பவனி வந்து பேரானந்தம் வழங்குவார். பல்லக்கு உற்சவம் முடிந்த பின்பு மகோற் சவ ஆரம்பத்தை உணர்த்துவதற்காக ஏற் றப்பட்ட திருக்கொடி இறக்கப்பட்டு மகோற் சவம் நிறைவெய்தும்.

**தில்லைக் கோயிலில் காணப்படும் தீர்த்தங்கள்**

தில்லைத் திருத்தலத்தின் தீர்த்தங்க ளாக பத்துத் தீர்த்தங்கள் விளங்குகின் றன. சிவகங்கைத் தீர்த்தம், புலிமடு தீர்த்தம், சிவப்பிரயா தீர்த்தம், நாகசேரி தீர்த்தம், பிரம்ம/வசிஷ்ட தீர்த்தம், திருப்பாற் கடற் றீர்த்தம், ஆனந்த தீர்த்தம், வியாக்கிர பாத தீர்த்தம், குய்ய / வருண தீர்த்தம் மற்றும் பரமானந்தகூபம் என்பனவாகும்.

தை அமாவாசைதோறும் சிவபெருமான் சிவகங்கை முதல் பரமானந்தகூபம் ஈறான பத்துத் தீர்த்தங்களிலும் எழுந்தருளி, தீர்த் தம் கொடுத்தருள்வார். இத்தல தீர்த்தங்க ளிலும், தை அமாவாசையன்று ஒரே நாளில் ஸ்நானம் செய்தால் அவர்களுக்குச் சிவகதி நிச்சயம் என்கின்றது கோயில் புராணம்.

இக்கலியில் இறைவன் உறையும் திருக் கைலையாகத் திகழும், சிவகாமியுடன் அருவ, உருவ, அருவுருவ வடிவில் அண்டா திபதி நடமிட்டுக் காட்சி நல்கும் திருத்தில் லையை சைவராகிய ஒவ்வொருவரும் ஒரு தடவை நேரிற்சென்றேனும், இயலாதோர் அகத்தால் நினைத்தேனும் வணங்கிட வேண்டும். இதுவே, இம்மையிலே மறுமை பெற்றுய்வதற்கான வழியாகும்.

**உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்**
**நிலவு உலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்**
**மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்**

**பெரியபுராணம்**

**தயாகர சபாபதே தவதுபில்வ பத்ராதிபிகி**
**சமர்ஜபத பங்கஜம் சுலபமேவ கைவல்யதம்**
**கதாகம பவந்தியோ விக்ஷயலம்ப டோத்**
**தக்ஹசம்**
**சிதம்பர மஹாநடம் ப்ரிதிவிசிந்தயே சம்**
**ஷசம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரமும் திருக்குறளும்

திருக்குறள் கலாநிதி
பண்டிதர் ஆ.வடிவேலு

திரு என்றால் அழகு, இலக்குமி, செல்வம், தெய்வீகம், மேன்மை, என்னும் சிறப்புள்ள எதனோடும் சேர்ந்து வரும் அடைச்சொல் எனவும் கருதப்படும். எனவே திருமந்திரமும் திருக்குறளும் மேலே தரப்பட்ட எல்லாவற்றி ற்கும் பொருத்தமானதே. திருமந்திரம் திரு மூலராலும் திருக்குறள் திருவள்ளுவராலும் ஆக்கப்பட்டவை. திருமந்திரம் சைவசித்தா ந்தமாகவும் கருதப்படுவது. அத்துடன் மிகவும் பழமை வாய்ந்த நூலாகவும் அமைந் துள்ளது. இந்த உண்மையை

**செப்பும் சிவாகமம் என்னும் அப்பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள் நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம்இருந்தேனே (74)**

என்னும் இவரின் திருவாக்கில் இருந்தும் உணரலாம். "சந்ததமும் இளமை யொடிருக் கலாம், மற்றுமொரு சாரத்திலும் புகுதலாம்" என்னும் தாயுமானவர் பாடல்வரிகளும் திரு மூலரின் வாழ்வை விளக்கி நிற்கிறது. "தமிழ் மூவாயிரம் சாத்தி மன்னிய மூவாயிர்த்தா ண்டு இப்புவிமேல் மகிழ்ந்திருந்து" எனச் சேக் கிழார் பெருமானும் போற்றியுள்ளார்.

திருவள்ளுவர் தமிழணங்கு பெற்ற தவப் புதல்வர். இவர் கி.பி. இரண்டாம் நூற்றாண் டில் தோன்றியவர் எனக் கருதப்படுகின்றது. திருவள்ளுவர் திருமூலருக்குப் பிற்பட்டவர் என்பதே உண்மை. ஏனெனில் திருவள்ளுவர் திருமந்திரத்தை நன்கு போற்றித் தேர்ச்சி யும் பெற்றுள்ளார் என்பது அவர் ஆக்கி அளி த்த திருக்குறளில் இருந்து அறியக் கிடக்கிறது.

**கன்னியுங் கன்னி அழிந்திலள் காதல்
துன்னியங் கைவரைப் பெற்றனன் தூய்மொழி
பன்னிய நன்னூற் பகவரும் ஆங்குள
என்னேயிம் மாயை இருளது தானே (1118)**

**மாதுநல் லாளும் மணாளன் இருந்திடப்
பாதிநல் லாளும் பகவனு மானது
சோதிருநல் லாளைத் துணைப்பெய்ய வல்லீரேல்
வேதனை தீர்தரும் வெள்ளடை யாமே (1157)**

**படமாடுங் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடுங் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடுங் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடுங் கோயில் பகவற்க தாமே (1857)**

திருமூலர் பகவன் என்று சிவபெருமானை யே போற்றியுள்ளார். திருமந்திரத்தில் மிருந்த ஈடுபாடு கொண்ட திருவள்ளுவரும் திருக் குறள் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் முத லாவது குறளில் பகவன் என்று சிவபெருமா னையே போற்றி

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வாழ்த்தியுள்ளார்.

திருமந்திரம் நிலையாமை என்ற அதிகாரத்தில்

**இயக்குறு திங்கள் இருட்பிழம் பொக்கும்**
**துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா**
**மயக்கற நாடுமின் வானவர் கோனைப்**
**பெயற்கொண்டல் போலப் பெருஞ்செலவாமே**
**(169)**

திருக்குறள் நிலையாமை என்ற அதிகாரத்தில்

**நில்லாத தவற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை (331)**
**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்திவ் வுலகு (336)**

திருமந்திரத்தில் கொல்லாமை என்ற அதிகாரத்தில்

**கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை**
**வல்லடிக் காரர் வரிக்கயிற் றாற்கட்டிச்**
**செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை**
**நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே (198)**

திருக்குறள் கொல்லாமை என்ற அதிகாரத்தில்

**அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்**
**பிறவினை எல்லாம் தரும் (321)**
**கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்**
**செல்லா துயிருண்ணுங் கூற்று (326)**

திருமந்திரம் புலால்மறுத்தல் என்ற அதிகாரத்தில்

**பொல்லாப் புலாலை நுகரும் புலையரை**
**எல்லாருங் காண இயமன்தன் தூதுவர்**
**செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்**
**மல்லாக்காத் தள்ளி மறித்துவைப் பாரே**
**(199)**

திருக்குறள் புலால்மறுத்தல் என்ற அதிகாரத்தில்

**தன்னூன் பெருக்கற் குத் தான்பிறி தூன் உண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள் (251)**
**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும் (260)**

திருமந்திரம் பிறன்மனை நயவாமை என்ற அதிகாரத்தில்

**ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே**
**காத்த மனையாளைக் காமுறுங் காளையர்**
**காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்**
**ஈச்சம் பழத்திற் கிடருற்ற வாறே (201)**

திருக்குறளில் பிறர்மனை நயவாமை என்ற அதிகாரத்தில்

**எளிதென்று இல்லிறப்பான் எய்தும் எஞ் ஞான்றும்**
**விழியாது நிற்கும் பழி (145)**
**பிறன்மனை நோக்காத பேராண்மை சான் றோர்க்கு**
**அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு (148)**

திருமந்திரம் நல்குரவு என்ற அதிகாரத்தில்

**புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை**
**அடையப்பட்டார்களும் அன்பில ரானார்**
**கொடையில்லை கோளில்லை கொண்டாட் டமில்லை**
**நடையில்லை நாட்டில் இயங்குகின்றார்கட்கே (209)**

திருக்குறளில் நல்குரவு என்ற அதிகாரத்தில்

**இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த**
**சொற்பிறக்கும் சோர்வு தரும் (1044)**
**அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்**
**பிறன்போல நோக்கப் படும் (1047)**

திருமந்திரத்தில் அந்தணர் ஒழுக்கம் என்ற அதிகாரத்தில்

**அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ்செய்**
**தந்தவ நற்கரு மத்து நின் றாங்கிட்டுச்**
**சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே (224)**

திருக்குறளில் அந்தணர் ஒழுக்கம் பற்றி

**அந்தணர் என்போர் அறவோர்மற்**
**றெவ்வுயிர் க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான் (30)**
**மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும் (134)**

திருமந்திரத்தில் அரசாட்சி முறை என்ற அதிகாரத்தில்

**கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்**
**கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்**
**கல்லா அரசன் அறம் ஓரான் கொல்லென்**
**பான்**
**நல்லாரைக் காலன் நணுக்கில் லானே (238)**

திருக்குறனில் இனாமாட்சிமுறை என்ற அதிகாரத்தில்

**காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம் (386)**
**செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை**
**வேந்தன்**
**கவிகைக்கீழ்த் தங்கும் உலகு (389)**

திருமந்திரம் கல்லாமை என்ற அதிகாரத்தல்

**நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து**
**நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்கள்**
**எல்லா வுயிர்க்கும் இறைவனே யாயினுங்**
**கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண்ணாதே**
**(312)**

திருக்குறளில் கல்லாமை என்ற அதிகாரத்தில்

**கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்**
**சொல்லர் திருக்கப் பெறின் (403)**
**நுண்மாண நுழைபுலம் இல்லான் எழில்நலம்**
**மண்மாண் புனைபாவை அற்று (407)**

திருமூலரும் திருவள்ளுவரும் எவ் வண்ணம் உயர்ந்த நிலையில் நின்றார்களோ அதே போல் அவர் தம் நூல்களும் உயிரோட்டம் உள்ளதாகவே அமைந்துள்ளது. விரிவிற் கஞ்சி சில அதிகாரங்களை மட்டும் ஒப்பு நோக்க முடிந்தது.

"வாயார வாழ்த்தி வணங்குவோம் வள்ளுவரை ஓயாது ஓதிக்குறள்" என்று கவி மணி தேசிக விநாயகம் பிள்ளை பாடியது போல் திருமந்திரத்தையும் திருக்குறளையும் தினமும் படித்துப் பயன்பெற அனைவருக் கும் நல்லைக் கந்தன் நல்லருள் பாலிக்க வேண்டுமென வேண்டி நிறைவு செய்கின் றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் சொல்லும் வாழ்வியல்

**தேசிங்கராஜன் சாய்கித்தியன்**

**'ஒன்றே குலம் ஒருவனே தேவன்....'** என்று பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சமுதாயத்திற்கு வேண்டிய நல்லிணக்க செய்திகள் பலவற்றை திருமந்திரத்தில் மிக அழகாக விளக்கியவர் திருமூலர் ஆவார். ஆன்மீகம், மருத்துவம், விஞ்ஞானம், தத்துவம், உளவியல் என திருமூலர் தொடாத துறைகளே இல்லை. திருமூலர் இயற்றிய மூவாயிரம் பாடல்களை கொண்ட திருமந்திர பாடல்களே இதற்கு சான்றாகும்.

**தேவர் குறளும் திருநான்மறை முடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும்-கோவை**
**திருவா சகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவாசகம் என்று உணர்.**

**-ஔவையார்-**

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளும், திருநான்மறை எனப் போற்றப்படும் ரிக், யசுர், சாம, அதர்வண வேதங்களின் முடிபும், அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவர் பாடிய தேவாரத் தமிழும், மாணிக்கவாசகர் பாடிய திருக்கோவையார், திருவாசகம் ஆகியனவும், திருமூலர் வாக்காகிய திருமந்திரமும் சொல்லும் கருத்துக்கள் எல்லாமே ஒரு கருத்தைத் தான் என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

அகத்தியர், போகர், கோரக்கர், கைலாசநாதர், சட்டைமுனி, திருமூலர், நந்தி, கூன்கண்ணர், கொங்கணர், மச்சமுனி, வாசமுனி, கூர்மமுனி, கமலமுனி, இடைக்காடர், புண்ணாக்கீசர், சுந்தரானந்தர், ரோமரிஷி மற்றும் பிரமமுனி ஆகிய 18 சித்தர்களில் இவர் ஒருவரே, நாயன்மார்களில் ஒருவராகப் போற்றப்படுபவர். தவத்தால் ஞானம் பெற்ற சித்தர்கள் மௌனம் ஆகிவிடுவார்கள். ஆனால் **'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'** என்னும் உயர் நோக்கில், தான் பெற்ற ஞானத்தை நமக்கு அளித்து மகிழ்ந்தார் திருமூலர். இவரது வரலாற்றை 28 பாடல்களில் பெரிய புராணத்தில் அழகாக பாடியுள்ளார் சேக்கிழார்.

**அன்பே சிவம்**

திருமந்திரம் ஆகமத்தின் சாரமாக அமைந்திருந்தாலும் அனைவரும் அறியக் கூடிய எளிமையும், இனிமையும் உடைய பாடல்கள்களை தன்னகத்தே கொண்டுள்ளது. 'அன்பே சிவம்' என்ற தொடரை பலரும் அறிவோம். மனிதர்கள் ஏனைய மனிதர்கள் பால் செலுத்தும் அன்பில் தான் உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. உலகத்தில் தோன்றிய கடவுள் சார்புடைய மதங்களும் கடவுள் மறுப்புச் சமயங்களும் கூட அன்பினை பெரிதும் போற்றுகின்றன. இதனையே திருமூலரும் நாம் பிறர் மீது அன்பு செலுத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் இறைவன் நம்மீது அன்பு செலுத்துவார் என கூறியுள்ளார்.

**'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்தி ருப்பாரே'**
**-திருமந்திரம்270**

**எல்லா உயிர்களையும் நேசித்தல்**

**'யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே'.**
**-திருமந்திரம்252**

எல்லா உயிர்களையும் நேசிக்க வேண்டும். பசுவுக்கு புல் கொடுப்பது, ஏழைகளுக்கு ஒரு கவளம் உணவு கொடுப்பது, துன்பத்தில் உள்ளவருக்கு ஆறுதல் சொல்வது, பெற் றோரைக்காப்பது, மற்றவர்களுக்கு உதவு வது ஆகியன தர்மங்கள் என்கிறது திருமந் திரம். ஆக ,நாம் திருமந்திரம் காட்டும் வழிப் படி தர்மங்கள் செய்வோம் பொல்லாப் பிணி யும், சொல்லொணா துயரங்களும் இல்லாத வாழ்வை பெற்று மகிழ்வோம்.

**'ஆற்றரு நோய்மிக்கு அவனி மழையின்றிப்**
**போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்**
**கூற்றுதைத் தான்திருக்கோயில்கள் எல்லாம்**
**சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே'**
**-திருமந்திரம்517**

சிவாலயங்களில் பூசைகள் குறைந்தால் நோய் மிகும், மழை குறையும், மன்னவர் கெடுவர் என்கிறார் திருமூலர். திருக்கோயி ல்களை முன்னோர்கள் பக்தியுடன் கட்டினர். அதற்கு பலகோடி சொத்துத்துக்களையும் கொடுத்தனர். ஆனால் அந்தச்சொத்து க்களை இன்றைய மக்கள் அபகரித்து வாழ் கின்றனர். கோயில்களை வியாபார நோக் கில் செயற்படும் மைங்களாக மாற்றி வருகி ன்றனர்.அதனால் தான் மழையை இழந் தோம் துயரங்களை அனுபவக்கிறோம். இன்று இயற்கையை அழித்து, மாசுபடுத்து வதால் இயற்கை பேரிடர்கள் உருவாகின் றன. எனவே ஆலய பூசைகளை முறைப்படி செய்வோம் மழை பெறுவோம்.

**உள்ளமே கோயில்**

இறைவனை அறிவதற்கும், அடைவதற் கும் இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று அக வழிபாடு மற்றையது புறவழிபாடு. இதில் அக வழிபாடு தியானம் அதாவது தவம், அதே போல் புறவழிபாடு பூஜை, தொண்டு ஆகி யவை தான். உள்ளம் பெருங்கோயில் என திருமூலர் கடவுள் வெளியே இல்லை உன் உள்ளேயும் இருக்கிறார் என்பது தான் கட வுள் பற்றிய அவரின் கருத்தாகும். இதை தான் அகம்பிரம்மா என்று வேதம் கூறுகிறது. எனவே உள்ளத்தில் அன்பு இல்லாமல் கூடைகூடையாக கோயிலுக்கு லட்சார்ச் சனை செய்வதை விட, உள்ளன்போடு கட வுளை வணங்கினால் போதுமானது என்கி றார்.

**'அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி**
**என்போன் மணியினை எய்த ஒண்ணாதே'**
**-திருமந்திரம்272**

**பஞ்சமாபாதகங்கள்**

திருக்குறள், நாலடியார், நானூறு, திருமந் திரம் போன்ற அற இலக்கிய நூல்களிலும் பஞ்சமாபாதங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது.

**'கொலையே களவுகட் காமம் பொய் கூறல்**
**மலையான பாதக மாம் அவைநீக்கித்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலையாஞ் சிவனடி சார்ந்தின் பஞ்சார்ந் தோர்க்**
**கிலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே '.**
**-திருமந்திரம்200**

கொலை, களவு, கள், காமம், பொய் கூறல் ஆகிய ஐந்தும் மாபெரும் பாதகங்களாகும். அப்பாதகச் செயலைத் தவிர்த்துத் தலையின் மேல் இறைவன் திருவடிகளைச் சூடி எல்லாம் வல்ல இறைவனின் இன்பத்தைப் பெற்று இப்பாவக் காரியங்களால் வரும் துன்பங்களில் இருந்து விடுபட்டுப் பேரின்பம் அடைய வேண்டும் என்பதே திருமூலரின் கருத்தாகும்.

**நிலையாமை**

திருமந்திரத்தில் யாக்கை நிலையாமை , செல்வம் நிலையாமை, இளமைநிலையாமை, உயிர் நிலையாமை பற்றிக் கூறுகின்றார் திருமூலர். யாக்கை என்பதற்கு கட்டப்பட்டது என்பது பொருள். ஏழு தாதுக்களால் கட்டப்பட்ட இவ்வுடம்பு நான் எங்கு இருந்து வந்தேன்?எங்கு போவேன்?நான் யார்?என்ற வினாவிற்கு விடையளிக்கும் விதமாக அவற்றை பதி, பசு, பாசம் என கூறுகிறார். உயிர் இல்லாமல் உடல் நிலைத்து நிற்காது. இந்த உடம்பானது அழியும் தன்மை வாய்ந்தது. இளமையும் எப்போதும் நிலைத்து நிற்காது செல்வமும் அவ்வாறே. இன்று ஒருவரிடம் இருந்தால் நாளை வேறோருவரிடம் இருக்கும் செல்வமானது சகடகால் போல மாறி, மாறி பயணம் செய்யும் என்றும் இவைகள் எல்லாமே நிலைப்புதன்மையற்றது என்று திருமூலர் கூறுகிறார். எனவே மக்களானவர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பு எனும் துன்பத்தில் உழலாமல் இருக்க இறைவனை வழிபட்டு அறவழியில் செல்ல வேண்டும் அவரின் கூற்றாகும்.

**ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்**
**சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே**
**-திருமந்திரம்145**

என திருமூலர் உடல், உயிர், இளமை, செல்வம் எல்லாம் மனிதனுக்கு நிலைப்பு தன்மையற்றது என கூறுகிறார்.

**ஆசைகள்**

மக்கள் அனைவரும் போகப்பொருளில் ஈடுபடாமல் ஆசையை முழுவதுவமாக நீக்கி அதுவும் ஈசனுடன் என்றாலும் ஆசையை நீக்கி துன்பம் என்ற மாயப்பொருளில் உழலாமல் விலகி இன்பத்தை அடைய ஆசையை அறுமின் என திருமூலர் கூறுகிறார்.

**'ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்**
**ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்**
**ஆசைப் படப்பட ஆய்வருந் துன்பங்கள்**
**ஆசைவிடவிட ஆனந்த மாமே'**

என கூறுகிறார்.

**கல்வி**

**'கற்றறி வாளர் கருதிய காலத்துக்**
**கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு**
**கற்றறி வாளர் கருதி உரைசெய்யுங்**
**கற்றறி காட்டக் கயல்உள வாக்குமே'**
**- திருமந்திரம் 291**

உண்மையான கல்வி கற்ற அறிவாளர்கள் சொல்லும் கருத்தை நாம் எண்ணிப் பார்த்தால், அந்தக் கருத்தினில் ஞானம் இருக் கும். கற்றறிந்த அறிவாளர்கள் நமக்காக தரும் உரைகளை நாம் கற்று அறிவோம். அந்த உரைகள் நம் அறிவுக் கண்ணைத் திறக்கும் என கூறுகிறார்.


**'கல்வி யுடையார் கழிந்தோடிப் போகின்றார்**
**பல்லி யுடையார் பாம்பரிந்து உண்கிண்றார்**
**எல்லியும் காலையும் ஏத்தும் இறைவனை**
**வல்லியுள் வாதித்த காயமும் ஆமே'**
**- திருமந்திரம் 293**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கற்றவர்கள் கூட எல்லோருமே இறை வழிபாட்டில் ஆர்வம் கொள்வதில்லை. கல்வியின் வேரைக் கண்டவர்கள் தான் இறை வழிபாட்டின் அவசியத்தை உணர் கிறார்கள். அவர்கள் பாம்பு போல நீளும் குண்டலினியைப் பற்றி, அதன் ஆற்றலை மேம்படுத்துகிறார்கள். நாம் இரவும் பகலும் நம் இறைவனை நினைத்து வழிபடுவோம். அவ்வாறு வழிபட்டால் அந்த இறைவனின் சக்தி வலிமையாக உள்நின்று நம் உடலி னைக் காக்கும்.

ஆன்மீக நெறியிலும் அறநெறியிலும், மக்கள் நோயின்றி நீண்ட ஆயுளுடன் நிறை வான வாழ்க்கை வாழ்ந்திட திருமூலர் அவர் கள் பொதுவுடைமை நோக்கில் அறநெறித் தத்துவங்கள் பலவற்றை கூறியுள்ளார். ஆகவே நாமும் அவற்றை கடைப்பிடித்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக!!!

**நல்லை கந்தவேள் பொற்பாதங்கள்**
**போற்றி ! போற்றி !! போற்றி !!!**



**2021ம் ஆண்டு யாழ் செம்மணி வளைவு அங்குரார்ப்பணம் நிகழ்வின் போது ....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்பவீ தீட்சையினை நல்கும் மஹோத்ஸவம் பற்றி ஒரு நோக்கு

பிரம்மஸ்ரீ மகாதேவஐயர் ஜெயராமசர்மா
B.A Hons, Dip.in.Ed, Dip.in.Soc,
Dip in Compu, M.Phil Edu, SLEAS
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
விக்டோரியா இந்துக்கல்வி மைய ஆலோசகர்

வேதங்களும் ஆகமங்களும் இந்து சமயத்தில் மிக முக்கியமானவை. இறைவனால் அருளிச் செய்யப்பட்டன எண்ற காரணத்தால் - காலங்காலமாக இவை தெய்வீகத் தன்மை கொண்டன என்ற கருத்து நிலவி வருவதை நாம் கண்டு கொள்ள முடிகிறது.

"வேதமொடு ஆகமம் மெய்யாம் இறை நூல்" என இதனைத் திருமந்திரம் உறுதிப் படுத்துகிறது. "ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" என்று திருவாசகம் வாயிலாகவும் இறைவனே ஆகமத்தைத் தோற்றுவித்தான் என்றும் அறிய உறு துணையாகின்றது.

சிவனின் தத்புருஷ முகத்திலிருந்து ரிக் வேதமும், அகோர முகத்திலிருந்து யசூர் வேதமும், வாமதேவ முகத்திலிருந்து சாம வேதமும், சத்யோஜாத முகத்தில் இருந்து அதர்வண வேதமும், ஈசான முகத்திலிருந்து சிவ ஆகமங்களும் தோன்றின என்றும் - இவற்றை சிவபெருமானே வாய்மலர்ந்து நந்தியெம் பெருமானுக்கு உபதேசித்ததாகச் சித்தாந்த நூல்கள் காட்டி நிற்கின்றன.

ஒவ்வொரு ஆகமத்திலும் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞான பாதம், என்று நான்கு பிரிவுகள் உள்ளன. கிரியா பாதம்தான் - ஆலய அமைப்பு, வழிபாடு, திருவிழாக்கள் பற்றிய விதிமுறைகளை எடுத்து விளக்குகிறது.

ஆகமங்கள் காமிகம் முதல் வாதுளம் வரை இருபத்து எட்டாகும். காமிகம், காரண ஆகமம் ஆகிய இரண்டின் விதிப்படியே பெரும்பாலான ஆலயங்களில் உத்ஸவங்கள் நடைபெறுவதை காணலாம். உத்ஸ்வம் என்னும் சொல்லை பிரித்தால் பல பொருள்கள் வந்தமையும். உத் - என்றால் மேலானது என்பது பொருளாகும். ஸவம் - என்றால் ஐந்தொழில் என்று பொருளமையும். எனவே உத்ஸவம் என்பதற்கு - இறைவனின் மேலான ஐந்தொழில்களையும் பற்றி விளக்குவதாகும் எனக் கொள்ள முடிகின்றது. இன்னுமொரு விதத்திலும் இதற்குப் பொருள் கொள்ளலாம். உத் - என்றால் ஞானம் எனவும், ஸவம் - என்றால் மோட் சம் எனவும் கொண்டு : உத்ஸவம் என்றால் மேலான மோட்சத்தைக் கொடுப்பது அதற்கு வழிகாட்டியாகவும் அமைவது என்றும் எடுத்துக் கொள்ள முடியும்.

உத்ஸவங்கள் பல வகைகளில் காட்டப் படுகின்றன. தினமும் நடைபெறுவது நித்தியோத்ஸவம், பதினைந்து நாட்களுக்கு நடைபெறுவது பட்ஷோத்ஸவம். ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறுவதைத்தான் மஹோற்ஸவம் என்று அழைக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்ஸவம் என்பதற்கு விழா என்றும் பொருள் கொள்ளலாம். விழாக்கள் எனும் பொழுது சாதாரணமாக எல்லா இடங்களிலும் ஆரவாரத்துடன் நடைபெறுவதும் விழாதான். ஆனால் ஆலயங்களில் நடைபெறுவதை சாதரணமாக விழா என்று அழைப்பதில்லை. அதற்கு அடைமொழி கொடுத்துத்தான் அழைப்பது மரபாகும். சேக்கிழார் பெருமான் " நல்விழா " என்று பெரிய புராணத்தில் சிறப்பித்துக் காட்டுகின்றார். உத்ஸவம் என்பதை வள்ளுவப் பெருந்தகை "சிறப்பு" என்று அழைக்கின்றார். இவை மனமிருத்தல் அவசியமேயாகும்.

**சிறப்பொடு பூசனை செய்யாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கு மீண்டு**

இக்குறளுக்கு உரைவகுத்த பரிமேலழகர் - சிறப்பு என்பதற்கு விழா என்று விளக்கம் தந்துள்ளது நோக்கத்தக்கதாகும். பூஜைக்கு நித்திய, நைமித்திய பூஜைகள் எனவும் - நித்தியத்தில் குறைகள் ஏற்படின் அவை நீங்கச் செய்வது நைமித்தியம் என்றும் பரிமேலழகர் கூறுவது நோக்கத் தக்கது.

மஹோத்ஸவத்துக்கும் இறைவனின் ஐந்தொழில்களுக்கும் எத்தகைய தொடர்பு உள்ளது என்பது யாவராலும் அறியப்பட வேண்டியதேயாகும். பாசத்தினால் கட்டுப் பட்டு ஆன்மாக்கள் பிறந்து இறந்து உழல்கின்றன. இந்த ஆன்மாக்களைக் காக்க இறைவன் குருவாக வந்து சமய, விசேஷ, நிர்வாண தீட்சைகளின் மூலமாக ஆசா பாசங்களில் இருந்தும் நீக்கி சிவமாக்கி அருள்புரிகின்றான். என சைவ ஆகமங்கள் கூறுகின்றன. தீட்சை பெற்றும், சமய ஆசாரங்களை விட்டவர்களுக்கும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வழிமுறைகளிலும் கூட பக்குவம் பெறாதவர்க்கும் - சிவனின் திருவடிப் பேற்றினைப் பெற நான்கு கார்யமும் கூடிய "சாம்பவீ" என்ற தீட்சை மஹோத்ஸவம் மூலமாகக் கிடைக்கின்றது என்பது தான் இறைவனுக்கும் மஹோத்ஸவதுக்குமான பிணைப்பு என்பதை மனமிருத்தல் அவசியமானதேயாகும்.

பத்து நாட்கள் நடைபெறும் உத்ஸவங்களுக்கும் தத்துவ ரீதியாக விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. பத்து நாட்கள் நடைபெறும் உத்ஸவத்தை "இரட்சை" என்று சொல்லுவர். ஆன்மாவைப் பற்றி உள்ள நோய்களை நீக்கி நித்தியானந்தப் பெருவாழ்வினை பெறச் செய்வதே இதன் அர்த்தமாகும்.

முதலாம் நாள் உத்ஸவம் - தூலதேக அவிமானத்தை நீக்கி ஆன்மாவை இறைவனிடம் சேர்ப்பித்தல்.

இரண்டாம் நாள் உத்ஸவம் - தூல சரீரத்தினடத்தும் அதற்குக் காரணமான சூக்கும சரீரத்தினிடத்தும் உள்ள அவிமானத்தை நீக்குவதாகும்.

மூன்றாம் நாள் உத்ஸவம் - முப்புத்தி, முக்குணம், மும்மனம், முக்குற்றம், முற்பிறப்பு, முப்பற்று, மூன்று வினைப்பயன்கள், ஆகியவற்றை நீக்குவதாகும்.

நான்காம் நாள் உத்ஸவம் - ஆன்மாக்கள் தத்தம் வினைப் பயனுக்கு ஏற்ப வந்து பிறப்பதற்கு உரிய நால்வகை தோற்றத்தையும், நாற்கரணங்களையும் ஒடுக்கி முத்தி அருளுவதற்காக நடைபெறுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் நாள் உத்ஸவம் - ஐம்புலன்களும் ஐம்பொறிகள் வழியே செல்ல விடாமல் தடுத்து ஒரே மனநிலையில் தியானிக்கும் பொழுது இறைவன் தோன்றியருளுவார் என்ற உண்மை புலப்படுமாறு நடைபெறுவதாகும்.

ஆறாம் நாள் உத்ஸவம் - காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம், என்னும் அகப்பகை ஆறையும் கெடுத்து ஆன்மாவுக்கு அருள் புரியும் வண்ணம் அமைவதாகும்.

ஏழாம் நாள் உத்ஸவம் - தேவர், மனிதர், விலங்கு பறவை , ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம், என்னும் ஏழுவகைப் பிறப்பின் உட்படுகின்ற ஆன்மாவானது காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை, என்னும் எழுவகைத் தத்துவங்களுக்கும் ஆட்பட்டு வருந்தாதபடி அருள் செய்வதாக அமையும்.

எட்டாம் நாள் உத்ஸவம் - ஆன் மாக்களுக்கு வாசனா மலத்தை நீக்கி எண்குணங்களை இறைவன் அருளும் நோக்கமாக அமைவதாகும்.இவ்வாறு அமையும் எட்டு நாட்கள் உத்ஸவம் ஐந்தொழிகளில் ஒன்றான காத்தலைக் குறிப்பதாகும்.

ஒன்பதாவது நாள் இடம் பெறும் உத்ஸவம் தேர்த்திருவிழா. இது அழித்தல் தொழிலைக் குறிப்பதாக அமைகிறது. வேட்டைத் திருவிழாவும் தேர்த்திருவிழாவும் அழித்தலையே குறிப்பதாக அமைகிறது. "சங்காரம்" என்றால் ஒடுக்குதல் என்பது பொருளாகும். சூர்ணோத்ஸவம் மறைத்தல் தொழிலை வெளிப்படுத்தி நிற்கின்றது. திருப்பொற்சுண்ணம் இடித்து இறைவனுக்குச் சாத்துதலை இது குறிக்கும்.

பத்தாம் நாள் இடம்பெறும் தீர்த்தத் திருவிழா உத்ஸவமானது அருளலைக் குறிப்பதாக அமைகிறது. பரிபக்குவம் வாய்ந்த ஆன்மாக்களுக்கு இறைவன் பரமுத்தி கொடுத்தல் என்பதே இதுவாகும். கொடியிறக்கமும் அருளையே குறிக்கும். கொடி இறக்கிய பின்னர் செய்யப்படும் மௌன உத்ஸவமும் அருளையே காட்டுகிறது. இவை இரண்டுமே எல்லாம் ஒடுங்கிய நிலையினையே விளக்குகிறது எனலாம். எனவே இவற்றைத் தொகுத்து நோக்கினால் பின் வருமாறு வரிசைக் கிரமத்தில் அமையும்.

1) அனிஞ்ஞா, வாஸ்த்து ஸாந்தி, பேரீதாடனம், திருக்கல்யாணம் படைத்தல்.
2) வாஹநோத்ஸவம், ஹோமகர்மம், யாக பலி, :காத்தல்.
3) மிருகயாத்திரை, ரதாரோஹணம் அழித்தல்.
4) சூர்ணோத்ஸவம், தீர்த்தம், அவ்ரோஹணம், மௌன உத்ஸவம் மறைத்தல்
5) திருவூடல், சண்டேஸ்வர உத்ஸவம், ஆசார்ய உத்ஸவம், :அருளல்

மஹோத்ஸவம் நிகழ்கின்ற வேளை - ஆரம்ப நாளன்று கொடியேற்றத்துடன்தான் உத்ஸவம் தொடங்குகின்றது. இங்கு கொடி மரம், கொடிச்சீலை, கொடிக்கயிறு, தர்ப்பைக் கயிறு, என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. கொடிமரம் பதியையும், கொடிச் சீலையில் வரையப்பட்டிருக்கும் இறைவனது உருவமும் அவரது வாகனமும் மலபக்குவம் அடைந்த சீவான்மா அதாவது பசுவைக் குறிக்கிறது. தர்ப்பைக் கயிறு பாசத்தையும், கொடிக்கயிறானது திருவருளையும் காட்டி நிற்கிறது. பதியோடு ஆன்மா இணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கு பாசங்கள் தடையாக இருக்கின்றன. அந்தப் பாசங்களினின்றும் பசுவான ஆன்மாவை விட்டு பதியாகிய இறைவனுடன் சேர்க்கத் துணையாகி வருவதுதான் திருவருட்சக்தி. இத்தத்துவங்களைப் புலப்படுத்துவதாகவே கொடியேற்றம் அமைகின்றது.

ஐந்தொழில்களை விளக்கும் வகையிலே மஹோத்ஸவம் விளங்குவதைப் பார்த்தோம்.அந்த ஐந்தொழில்களையும் சிவனது நடராஜ வடிவத்தில் நாம் காணமுடியும் என்பதை உண்மை விளக்கம் வாயிலாக திருவதிகை மனவாசங் கடந்தார் காட்டி நிற்கிறார்.

**தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்**
**சாற்றிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா**
**ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி**
**நான்ற மலப்பதத்தே நாடு.**

சிவனின் உடுக்கை ஏந்திய கையானது படைத்தலையும், அவரின் அமைந்த திருக்கையானது காத்தலையும், நெருப்பு ஏந்திய கையானது அழித்தலையும், ஊன்றிய திருவடியானது மறைத்தலையும், தூக்கிய திருவடியானது அருளலையும் எமக்கு உணர்த்தி நிற்கிறது என்று உண்மை விளக்க வெண்பா விளக்கி நிற்பதை நாங்கள் மனமிருத்தல் வேண்டும்.

ஆலயங்களில் நடைபெறும் உத்ஸவங்கள் தத்துவ நிலையில் உயர்ந்து நிற்கின்றன என்பதைப் பார்த்தோம். ஆலயங்களிலே இறைவனது திருவுருவங்கள் இரண்டு விதமாக இருப்பதையும் நாம் காணலாம். நிரந்தரமாய் ஒரே இடத்தில் இருக்கும் வண்ணம் அஷ்டபந்தனம் என்னும் மருந்து சாத்தப்பட்டு வைக்கப்பட்டிருப்பது. அதேவேளை உத்ஸவ காலங்களில் உலாவந்து அடியார்களுக்கு திருவருட் பார்வையினை செலுத்துவதற்காக பஞ்சலோகங்களால் விஷேடமாக அமைக்கப்பட்டிருக்கும் இறைவனது திருவுருவங்கள்.

மஹோத்ஸவங்கள் தத்துவார்த்தம் மிக்கதாக இருப்பதுபோலவே ஆலயங்களில் இறைவனின் வாகனங்களும் இருக்கின்றன என்பதும் மனமிருத்த வேண்டியதே ஆகும்.

ஆலயங்களிலே பலவித வாகனங்கள் இறைவனது வீதியுலாவில் பயன்படுத்தப்படுகின்றன. கைலாச வாகனம், கமலவாகனம், ஹம்ஸ வாகனம், கருட வாகனம், நந்திகேஸ்வர் வாகனம், பூதவாகனம், காமதேனு வாகனம், கேடகம், கற்பக விருட்ச வாகனம், குதிரை வாகனம், யானை வாகனம், சிம்ம வாகனம், நாக வாகனம், மயில் வாகனம், ஆட்டு வாகனம், ரிஷப வாகனம், நாய் வாகனம், எலி வாகனம், புலி வாகனம், என்று பல வாகனங்கள் ஆலயங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இந்த வாகனங்கள் வரிசையில் மஞ்சம், சப்பரம், தங்கரதம், வெள்ளிரதம், என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன.

கற்பக விருட்சம் வாகனமாகப் பயன்பாட்டில் இருக்கிறது. இது காத்தல் தொழிலை உணர்த்தி நிற்கிறது. மரத்தின் இலைகள் எண்ணில்லாத ஜீவராசிகளையும், மரமும் மரத்தின் வேரில் அமைந்த பீடமும் பார்வதியையும் பர்மேஸ்வரரையும் உணைர்த்துகிறது. பழங்களின் உள்ளிருக்கும் விதைகள் சிவபெருமான் உயிருக்குயிராய் கலந்து நிற்கிறார் என்று கற்பக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருட்ச வாகனம் தத்துவத்தைப் போதித்து நிற்கிறது எனலாம்.

பூத வாகனம் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், என்னும் பஞ்சபூதங்களின் வடிவாய் இருப்பவன் இறைவன்

**இருநிலனாய் தீயாகி நீரு மாகி**
**இயமான னாய் எரியும் காற்று மாகி**
**அருநிலைய திங்களாய் ஞாயிறாகி**
**ஆகய மாய்அட்ட மூர்த்தியாகி**

என்று திருநாவுக்கரசர் பாடலின் மூலம் பூதவாகனத்தின் தத்துவத்தை அறிய முடிகிறது.

சிவபெருமான் வீற்றிருக்கும் இடம் கைலாசம். திருக்கோயில்களில் கைலாச வாகனத்தின் அடியில் ஆமையின் அகண்ட உருவம் காணப்படுகிறது. கைலாச மலையை ஆமை - தனது உடலால் தாங்கி இருப்பதாகக் காட்சி அளிக்கின்றது.

கைலாச மலையினை இராவணன் தனது ஆணவத்தினால் தூக்கிட முயன்றான். ஆனால் சிவபெருமான் தன்னுடைய திருவடியின் பெருவிரலினால் அழுத்தியது இராவணன் கைலாச மலையின் கீழ் அகப்பட்டு நசுக்கி நின்றான். பின்னர் சிவபெருமானுக்கு பிடித்தமான சாமகானத்தை பாடி வாளும் வரமும் பெற்றான் என்று புராண வரலாறு காட்டி நிற்கிறது. கைலாச வாகனத்தில் இறைவன் வீதியுலா வரும் பொழுது அடியார்கள் பக்திப் பரவசத்துடன் பார்த்து நிற்கின்றனர். கொடியவர்களாக இருந்தாலும் நல்ல மனத்துடன் மாறி இறைவனை வணங்கினால் நல்ல அருளைப் பெறலாம் என்பதையே இவ்வாகனம் விளக்கி நிற்கிறது எனலாம்.

ஊழிக் காலத்தில் உலகம் அழியினும் தருமதேவதை - தான் அழியாதிருக்கும் வண்ணம் நந்நி வடிவத்தில் அமைந்திருக்கிறதாம். சமம், விசாரம், சந்தோஷம், சாது சங்கமம், என்னும் நான்கு குணங்களையும் நான்கு கால்களாகக் கொண்டது ரிஷபம். அதன் வெண்மை நிறம் பரிசுத்த தேவதை என்பதைக் குறிக்கும்.

மக்களின் மனமானது குற்றம் குறைகளை நீக்கி தெளிவாகவும் வெண்மை உள்ளம் உடையவராகவும் இருந்து இறைவனை வழிபட்டால் அருள் கிடைக்கும் என்னும் கருத்தை உணர்த்தும் வகையில் அமைந்ததே ரிஷப வாகனமாகும்.

விஷத்தையும் ரத்தினத்தையும் படம் இவற்றையெல்லாம் மறைத்துக்கொண்டு வேண்டும் பொழுது வெளிப்படுவதுதான் நாகம் ஆகும். அதேபோல் - இறைவன் மறைத்தல் தொழிலை உணர்த்தும் வகையில் நாக வாகனம் விளங்குகிறது எனலாம்.

சிருஷ்டி லயக்கிரமத்தில் விருட்சம் போல் விரிந்த பாகுபாடுகள் எல்லாம் ஒரே பிண்டமாக பெரிய உடம்பையுடைய யானையைப் போல் ஒடுங்குவதைக் குறிக்கும் இறைஅவன் யானை மீது அமர்ந்து வருவது ஆணவத்தையும் ஐம்புலன்களையும் அருள் என்னும் அங்குசத்தால் அடக்குவதைக் குறிக்கும். மக்கள் ஐம்புலன்களையும் அடக்கி இறைவன்மீது பக்தி கொண்டால் அருள் கிடைக்கும் என்னும் கருத்தினையே யானை வாகனம் உணர்த்தி நிற்கிறது என்பது மனங்கொள்ளத் தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள் மனித சமுதாயத்துக்கு ஆறுதலும் தேறுதலும் அளிக்கும் இடமாகும். அங்கு நடைபெறும் அனைத்துமே ஆன்மீக ஈடேற்றத்தை அடிப்படையாகவே கொண்டனவாகவே அமைந்திருக்கின்றன. நம்பினார்க்கு யாவுமே நன்மை பயக்கும். இங்கு நம்பிக்கைதான் மிகவும் முக்கியம். விமர்சனங்கள் முக்கியமல்ல. விளக்கம் இன்மைதான் விமர்சனங்களுக்கு இட்டுச் செல்கிறது.

**"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"**
**" ஆலயம் தொழுவது சாலவும் நன்று"**
**"ஆலயம் தானும் அரனெனத் தொழுமின்"**
**"நிலைபெறு மாறெண்ணுதியேல் நெஞ்சேவா**
**"நித்தலும் எம்பிரானுடைய கோவில் புக்கு"**

என்றெல்லாம் சொல்லப்பட்ட அத்தனையும் ஆலயத்தின் முக்கியத்துவத்தையும் அங்கு இடம்பெறும் ஆன்மீக சக்திகளையும் அதனால் மக்கள் மனதில் பக்குவமான தன்மை உருவாகும் என்பதையும் உள்ளடக்கியதே என்பதுதான் இங்கு முக்கியம் எனலாம். எனவே நாங்கள் வையத்துள் வாழ்வாங்குவாழ என்றும் ஆலயங்கள் அருந்துணையாகவே இருக்கின்றன. அத்தகைய ஆலயத்தை மையமாகக் கொண்டு விளங்கும் மஹோத்ஸவமும் எமக்குப் பல ஆன்மீக தத்துவ வழிகளையே உணர்த்தி நிற்கிறது என்பதையும் மனமிருத்துதல் அவசியமே யாகும்.

## நல்லூரரான் செம்மணி வளைவு அங்குரார்ப்பணம்



15.01.2021 அன்று
தெய்வேந்திர முகூர்த்த வேளையில்
இறையருள்
கைகூட நல்லூரரான் செம்மணி
வளைவானது
அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2021 இல் யாழ் விருதியைப் பெறும் வாழ்வக நிறுவனத்தின் தலைவர் ஆ.இரவீந்திரன் (ச.நீ) அவர்கள்

**பு.ஆறுமுகதாசன்**
செயலாளர், சைவசமய விவகாரக்குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

சமய, சமூக, கல்வி, மருத்துவசேவை மற்றும் அறப்பணிகளில் தம்மை முழுமை யாக அர்ப்பணித்து சேவையாற்றி வருவோ ரில் தகுதியான ஒருவரைத் தேர்ந்தெடுத்து நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழாவின் போது யாழ்.விருதினை வழங்கிக் கௌர வித்து அன்னாரது தன்னலமற்ற சேவை யைத் தொடருவதற்கு ஊக்கமும் ஒத்து ழைப்பும் வழங்கப்படுதல் வேண்டுமென்ற சைவசமய விவகாரக் குழுவினது உயரிய தீர்மானத்திற்கு அமைவாக:

பிறப்பினிலே விழிப்புலனற்று இப் புவிதனில் அவதரித்த போதிலும் பெற்றோரி னால் அரவணைக்கப்பட்டு அன்பாகவும், ஆதரவாகவும் வளர்க்கப்பட்டதனாலும் உயர்கல்வியே இவரது வாழ்வை வளப்படுத் தும் என்ற அவர்களது துணிச்சலான நம் பிக்கையுடனும் தமது ஆரம்பக் கல்வியை கைதடி நவீல்ட் பாடசாலையில் ஆரம்பித்து 1972ம் ஆண்டு அரசினால் உருவாக்கப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட கல்வித் திட்டத்திற் கமைவாக கண் பார்வையற்ற மாணவர்கள் சாதாரண மாணவர்களோடு இணைந்து கல்விகற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்படலா யிற்று. இதன் காரணமாக 1978ம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இணைத்து க.பொ.த (சா.தரம்) மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தி பெற்று 1986 இல் பல்கலைக்கழகத்தில் இணைந்து 1990 இல் கலைமாணிப்பட்டம் பெற்று 1993இல் யாழ்/கனகரத்தினம் மத்திய மகா வித்தி யாலயத்தில் ஆசிரிய நியமனம் பெற்று பணியாற்றி வரும் போது 1995இல் பட்டப்பின் கல்வி டிப்ளோமா சித்தி பெற்றுதுடன் 2001ம் ஆண்டு கல்வி முதுமாணிப்பட்டத்தையும் பெற்றதனால் யாழ்ப்பாணம் தேசிய கல்வியி யற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணி யாற்றிவரும் திரு.ஆ.இரவீந்திரன் அவர்கள் "வலுவிழப்பு வாழ்வின் முடிவல்ல" என்ற இலட்சிய வேட்கையுடன் விழிப்புலனற்றோர் களுக்கு கல்வியறிவூட்டி, வாழவழிகாட்டி அவர்கள் தமது சமூகத்தில் எவருக்கும் இளைத்தவர்களல்லர் என்ற உறுதியான உள்ளுணர்வோடு நெறிப்படுத்தி வளர்த் தெடுக்கும் சமூகப்பணியை முன்னெடுத்து வரும் வாழ்வக நிறுவனத்தின் உருவாக்கத் தில் பங்கு கொண்டு நிறுவுனரின் உளமார் ந்த ஆசீர்வாதத்துடன் அதன் தலைவராக மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் திரு.ஆ.இரவீந்திரன் அவர்களுக்கு 2021 ஆம் ஆண்டிற்கான யாழ். விருதினை வழங் குவதென்ற சைவசமய விவகாரக் குழுவி னது ஏகமனதான தீர்மானம் மனநிறைவி னைத்தருவதாக அமைந்துள்ளது.

**வாழ்வக நிறுவனத்தின் ஸ்தாபகரான கலாநிதி செல்வி சின்னத்தம்பி அன்ன**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லட்சுமி அவர்கள் "இதனை இதனால் இவன் முடிக்குமென்றாய்ந்து அதனை அவன்கண் விடல்"** என்ற வள்ளுவரின் வாய்மொழிக் கொப்ப தனக்குப் பின்னர் வாழ்வக நிறுவனத்தை வழிநடத்தக் கூடிய ஆளுமை விருத்தி மிக்கவரான திரு.இரவீந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டமை முற்றிலும் சார்பான தென முடிவு செய்யக் கூடியதாக வாழ்வக நிறுவனத்தின் தற்போதைய நிலைமை மூலமாக அதனை எவரும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

கண்களின் இழப்பை கல்வியால் மட்டுமே ஈடுசெய்ய முடியுமென்ற உன்னத நோக்கத்துடன் விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் காத்திரமான பங்காற்றிய ஓய்வுபெற்ற ஆசிரியையான கலாநிதி சின்னத்தம்பி அன்னலட்சுமி அவர்களினால் தெல்லிப்பளையில் வாடகை வீடொன்றில் 13 பிள்ளைகளுடன் வாழ்வகம் ஸ்தாபிக்கப்பட்டது கடந்த கால யுத்த நிலையின் போது பல்வேறு வகையான துன்பங்கள், துயரங்கள் மற்றும் இடப்பெயர்வுகளைச் சந்தித்த போதிலும் தளராத மன உறுதியுடன் நிறுவனரின் அயராத முயற்சியினாலும், சமூகப் பொறுப்பாளரின் பங்களிப் போடும் வாழ்வாக நிறுவனம் 2003 ஆம் ஆண்டு அதன் தற்போதைய சொந்த வதிவிடத்தில் நிலை நிறுத்தப்பட்டது.

விழிப்புல வலுவிழந்த பிள்ளைகள் தடையேதுமின்றித் தமது கல்வியை மேற்கொள்ளவும், ஏனைய வாய்ப்புக்கள் அனைத்தையும் பெற்று தமது வாழ்வை வளப்படுத்திக் கொள்ளவும் வேண்டிய அனைத்து வசதிகளையும் வாழ்வகம் முற்றிலும் இலவசமாக வழங்கி வருவது மிகுந்த பாராட்டுக்குரியது.

ஆண், பெண் இருபாலாருமாக 53 பிள்ளைகள் தற்போது வாழ்வகத்தில் இணைந்து தமது கல்வியினை மேற்கொண்டு வரும் நிலையில் இவர்களில் 08 மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் தமது பட்டப்படிப்பினை தொடருவதும் விதந்து, போற்றுதற்குரியதாகும். ஏனைய மாணவர்கள் அனைவரும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும், சுன்னாகம் இராம நாதன் கல்லூரியிலும் தமது கல்வியைத் தொடர்ந்த வண்ணமுள்ளனர்.

மாணவர்கள் தமது கல்வியில் மேம்பாடடைவதற்காக பிரத்தியேக வகுப்புக்களும், தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்று கற்பதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருப்பது வாழ்வகம் தனது மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கொண்டுள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றது. சமகாலத் தேவைகளான கணனிக்கல்வி, ஆங்கிலக்கல்வி என்பனவும் சங்கீதம், நடனம் போன்ற கலைகளும் பயிற்றுவிக்கப் படுவது மாணவர்கள் தமது கல்வியில் முழுமை பெற ஏதுவாகின்றது.

வாழ்வக நிறுவனம் பிள்ளைகள் கல்வியில் முழுமை பெற்று ஆரோக்கிய மாணவர்களாக சமூகத்தில் நிலைபெறுவதற்கு விளையாட்டு முக்கிய சாதனமாக கருதப்படும் இன்றைய காலகட்டத்தில் அவர்களுக்கான விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாமை பாரிய குறைபாடாகவே எதிர் நோக்கப்படுகிறது.

விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளுக்கான விசேட உபகரணங்கள், இவர்களைப் பயிற்றுவிப்பதற்கான விசேட பயிற்சி பெற்ற ஆளணியினர் இல்லாமையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் முன்னேற்றத்திற்கு பாரிய தடையாகவே காணப்படுகின்றது.

"துன்பங்கள், துயரங்கள் அற்புதங்களை நிகழ்த்தும்" என்ற ஆங்கிலக்கவிஞர் ஷேக்ஸ்பியரின் கூற்றுக்கு அமைவாக எதிர்காலத்திட்டங்களை வகுத்து அவற்றை நிறைவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டுவரும் தலைவரினதும், வாழ்வக சமூகத்தினரினதும் முன்னெடுப்புக்கள் அனைத்தும் தாமதமின்றி நிறைவேற வேண்டுமென நல்லைக் கந்தனின் தாழ்பணிந்து இறைஞ்சுவதோடு சாதனை நாயகனான வாழ்வகத் தலைவர் ஆ.இரவீந்திரனுக்கு இவ்வாண்டு யாழ் விருதை வழங்குவதையிட்டு யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினர் ஆகிய நாம் மிகப்பெரும் மகிழ்வடைகிறோம்.

விழிப்புல வலுவிழந்தோரின் மேம்பாட்டிற்கான வாழ்வகத்தின் பணிகள் தொடரட்டும்.

வாழ்க வளமுடன்




**2020ம் ஆண்டு யாழ் விருது**
**கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதன் (சோ.ப)**
**அவர்களுக்கு வழங்கப்பட்ட போது .....**

11091(P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

## பிலவ வருஷம் ஆவணி மாதம் - 2021

# மகோற்சவ விசேட தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12.08.2021 | வியாழன் | வைரவர்சாந்தி உற்சவம் | மாலை | 04.45 மணி | |
| 13.08.2021 | வெள்ளி | கொடியேற்றம் | பகல் | 10.00 மணி | (01ம் திருவிழா) |
| 22.08.2021 | ஞாயிறு | மஞ்சம் | மாலை | 04.45 மணி | (10ம் திருவிழா) |
| 28.08.2021 | சனி | அருணகிரிநாதர் உற்சவம் | இரவு | 07.00 மணி | (16ம் திருவிழா) |
| 29.08.2021 | ஞாயிறு | கார்த்திகை உற்சவம் | மாலை | 04.45 மணி | (17ம் திருவிழா) |
| 31.08.2021 | செவ்வாய் | சூர்யோற்சவம் | காலை | 06.45 மணி | (19ம் திருவிழா) |
| 01.09.2021 | புதன் | சந்தானகோபாலர் | காலை | 06.45 மணி | (20ம் திருவிழா) |
| 09.09.2021 | புதன் | கைலாசவாகனம் | மாலை | 04.45 மணி | (20ம் திருவிழா) |
| 02.09.2021 | வியாழன் | கஜவல்லி மஹாவல்லி | காலை | 06.45 மணி | (21ம் திருவிழா) |
| 02.09.2021 | வியாழன் | வேல்விமானம் | மாலை | 04.45 மணி | (21ம் திருவிழா) |
| 03.09.2021 | வெள்ளி | தெண்டாயுதபாணி | காலை | 06.45 மணி | (22ம் திருவிழா) |
| 03.09.2021 | வெள்ளி | ஒருமுகத் திருவிழா | மாலை | 04.45 மணி | (22ம் திருவிழா) |
| 04.09.2021 | சனி | சப்பறம் | மாலை | 04.45 மணி | (23ம் திருவிழா) |
| 05.09.2021 | ஞாயிறு | தேர் | காலை | 06.15 மணி | (24ம் திருவிழா) |
| 06.09.2021 | திங்கள் | தீர்த்தம் | காலை | 06.15 மணி | (25ம் திருவிழா) |
| 07.09.2021 | செவ்வாய் | பூங்காவனம் | மாலை | 04.45 மணி | (26ம் திருவிழா) |
| 08.09.2021 | புதன் | வைரவர் உற்சவம் | மாலை | 04.45 மணி | (27ம் திருவிழா) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## மன்றக் கீதம்

ஈழத் தமிழர்தம் இணையிலா நகரம்
யாழ் நகர் நீடு வாழியவே
யாழ் நகராட்சி மன்றம் வாழ்க
எம் தமிழ் வாழ்க வாழியவே
(ஈழத் தமிழர் ...)

ஆதியில் தமிழர் ஆண்டதொல் நகரம்
ஆரியச் சக்கர வர்த்திகள் நகரம்
பூதலம் புகழும் சங்கிலி மன்னன்
பொருபகை வென்ற புகழ்பெறு நகரம்
(ஈழத் தமிழர் ...)

ஏழிசை வல்லோன் யாழிசை பாணன்
இனியநற் பரிசாய்ப் பெற்ற யாழ்ப்பாணம்
ஆழிசூழ் உலகம் புகழ்கலைக் கூடம்
அறிஞர்கள் கலைஞர்கள் அவதார பீடம்
(ஈழத் தமிழர் ...)

தமிழர்கள் முஸ்லீம் மற்றுள பேரும்
தாயிவள் பேணும் சோதர ராவர்
நமதரும் பண்பும் கலை கலாசாரம்
நல்விருந் தோம்பிக் காப்பவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

கடலலை வீசும் மீன்வளம் பொங்கும்
கழனிகள் தோறும் கனிவளம் தங்கும்
மடல்வரி தென்னை கமுகுகள் வாழை
மண்வளஞ் சிந்திப் பொலிபவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

அழகிய வீதி கடைத்தெரு கல்வி
அளித்திடு கூடம் தொழில்நிலை யங்கள்
எழிலுறு கோட்டைக் கோபுரம் கோயில்
இனியநற் சோலை கொண்டவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

வேத மந்திரம் கீத மொலிக்கும்
விளங்கிடு குர்ஆன் நாதமொலிக்கும்
ஓதிடு பைபிள் போத மொலிக்கும்
ஓங்கிய கோபுர மணிகள் ஒலிக்கும்
(ஈழத் தமிழர் ...)

11091(8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் குமரன் மலர் - 2021

## மணங்கமழப் பங்களித்த உங்களுக்கு
## எங்கள் உளங்கனிந்த நன்றிகள்

2021ம் ஆண்டின் "நல்லைக்குமரன்" இருபத்தி ஒன்பதாவது மலருக்கு ஆசிச் செய்திகளையும், வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய சமயத் தலைவர் களுக்கும் பெரியோர்களுக்கும்

பல சிரமங்கள் மத்தியிலும் தம் ஆக்கங்களைத் தந்துதவிய அறிஞர் பெருமக்களுக்கும் மலருக்கு விளம்பரங்கள் தந்து, உந்து சக்தியாக இருந்த வர்த்தகப் பெருமக்களுக்கும், நிதி நிறுவனங்களுக்கும்

மலரை அழகுற அச்சிட்டுத் தந்துதவிய மதி கலர்ஸ் அச்சகத்தினருக்கும் இன்னும் பல வழிகளிலும் மலரின் வரவுக்குப் பங்களித்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நல்லைக் குமரனின் அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க அவன் தாள் இறைஞ்சுகின்றோம்.

**சைவசமய விவகாரக்குழு**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
# சைவசமய விவகாரக்குழு உறுப்பினர்கள் - 2021



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) – திருமதி.ம.கஜேந்தினி, திரு.அ.சீராளன், திரு.இ.த.ஜெயசீலன், கௌரவ திரு.வி மணிவண்ணன், திரு. ந. பிரபாகரன், திரு.பு.ஆறுமுகதாசன், திருமதி. சு. சதாசிவமூர்த்தி

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) – திருமதி.தி.சக்தி, திரு.சோ.கணேசநாதன், திரு.பா.பத்மநாதன், திரு.ச.சற்குணமூர்த்தி, திரு.க.கேதீஸ்வரன், திரு.வா.கேதீஸ்வரன், திரு.செ.புரட்சிதாசன்
செல்வி.பொ.புஸ்பலதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்



## விளம்பரங்கள்
## 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நல்லைக் குமரனை நோக்கி அலை அலையாக வரும்
மக்கள் முருகனின் அருட் கிருபை பெற்றிட வன்றோ...!

# பெற்றா

## எசன்ஸ் சப்ளையர்ஸ்

சகல விதமான பேப்பர் வகைகளையும் அச்சகத்துக்குத் தேவையான
மை வகைகளையும் வேண்டிய அளவிலும்




ஐஸ்கிறீம், குளிர்பானம், கேக் வகைகள், பிஸ்கற், இனிப்பு,
பீடா ஆகியவை தயாரிப்பதற்கு வேண்டிய சகல
மூலப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

நாங்கள் "மலிபன் பிஸ்கட்"
ஏஜன்டாக நியமிக்கப்பட்டுள்ளோம்
என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகிறோம்.

இல.104, 152, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 2386

ஊதுபத்தி, சாம்பிராணி, விளைவு சூடம், வாசனைத் திரவியங்கள்,
ஆயுள்வேத மருந்து வகைகள் தயாரிக்கும் மூலிகை வகைகள், குங்குமம்,
குங்குமப்பூ, எண்ணெய், நெய், மற்றும் சாப்பாட்டு இரசாயனப் பொருட்கள்,
பிஸ்கட், சொக்லேட், ரொபி வகைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்


- நியூஸ் பிறின்ட்
- பாங் பேப்பர்
- பரிசுப் பேப்பர்
- பொக்ஸ் போட்
- றோணியோ பேப்பர்
- போஸ்டர் பேப்பர்
- ரைப்பிங் சீற்
- பிறிஸ்டல் போட்




104, 152 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 0212222386


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நல்லைக்குமரா! உன்னடி காண உலகெங்கும் உள்ள பக்தர் படையெடுத்து புடை சூழ ! எங்கள் பாவ வினை அறுத்து இவ்வுலக வாழ்வு மிளிர வழிவிடு வேலா! போற்றி! போற்றி!



"நாங்கள் அஜனமோல்ட் பாவிப்பதில்லை"

# மலாயன் கபே



சைவ உணவின் தலைவனாக
அன்றும் இன்றும்! என்றென்றும்!
மக்கள் மனதில் மங்கா புகழ் பூத்த
யாழ் மக்களின் பாரம்பாரியம்
மிக்க சைவ உணவகம் மலாயன் கபே




**இல.36,38 பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.**

***T.P: 021 222 2373***

***www.malayan cafe.com.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நித்தம் உன் அருள் வேண்டி சித்தர்களும் வழிபட்ட
சிவ பாலகனே நல்லையம் பதி உறையும் நாதனே.



யாழ் நாவலர் வீதியில்
ஊங்கள் இல்லங்களுக்கு தேவையான அனைத்து
பொருற்களையும் ஒரே இடத்தில் பெற்றி

# TCT பல்பொருள் வாணிபம்



எமது நிகழ்வுகளுக்கான பதிவுத் திகதிகளை
இணையத்தளத்தில் பார்வையிடலாம்
www.tctchall

## TCT பல்பொருள் வாணிபம்

இங்கு பெறப்படும் வருமானம் அனைத்தும் நலிவுற்ற மக்களின்
மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றது




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இல 527 நாவலர்வீதி நல்லூர்
T.P 0217451895
Email. tctmc@dialognet.lk

ஆடும்மயிலினில் அகிலம் வலம் வரும்
அழகுக்குமரன் உறையும் பதி நல்லையம்பதி



# பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள்
ஏற்றுமதியாளர்கள்
நூல் வெளியீட்டாளர்கள்



## தலைமை

340.202. செட்டியார் தெரு கொழும்பு -11
தொ.பே: 2422321

இல. 4. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 222 6693

இல. 309A, 2/3 காலி வீதி
வெள்ளவத்தை, கொழும்பு -6
தொலைபேசி : 4515775



பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

இல.212.1ம் குறுக்குத்தெரு.
ஆஸ்பத்திரிசந்தி யாழ்ப்பாணம்
தொலைபேசி:021 2221637

## லண்டன் கிளை

இல.110.கொலண்ட் ரோட் ஈஸ்ட் ஹாம்.லண்டன் EB - EB 2 Epulk
தொலைபேசி:02184704416


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கை நாட்டின் வட பகுதியில் பிரமாண்ட காட்சியறையுடன் அச்சுப்பதித்தல்
சார்ந்த அனைத்து விதமான வேலைகளுக்குமான ஓர் அச்சுக்கூடம்

# மதி கலர்ஸ் பிறைவேட் லிமிட்டெட்

BEST QUALITY | BEST PLACE | BEST PRICE & YOUR BEST CHOICE

# MATHI COLOURS (PVT) LTD.

## PRINTERS & WEDDING CARDS

## OFFSET - DIGITAL - SCREEN PRINTING

உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான பிறின்டிங் தேவைகளையும் உடனுக்குடன் தரமாகவும், நேர்த்தியாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

- ஒவ்செட் பிறின்டிங்
- ஸ்கிறீன் பிறின்டிங்
- டிஜிட்டல் பிறின்டிங்
- கலர் பிறின்டிங்
- கிராபிக் டிசைனிங்
- டைப் செற்றிங்
- வைண்டிங்




மற்றும் பல உங்களுக்குத் தேவையான பிறின்டிங் சேவைகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்...



MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.

021 222 9285

mathicolours@gmail.com

CUSTOMER CARE
077 722 2259

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 53 வது ஆண்டு நிறைவடைந்து வெற்றிப்பாதையில் பயணிக்கும்

1967 - 2021

No-01

# காவடி

SINCE 1967

## நின்று நிலைக்கும் ஜோதிமயம்




53 வருடங்களாக
எங்களுக்கு ஆதரவும்,
ஊக்கமும் கொடுத்த
வாடிக்கையாளர்கள்,
விற்பனையாளர்கள்,
நண்பர்கள் அனைவருக்கும்
எங்கள் நன்றியை உளமார
தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றும் உங்கள் ஆதரவை எதிர்பார்க்கும்

**தயாரிப்பாளர்கள்**
Ms Sons Group of Companies
672/3, Galle Road,
off Mayura Mw, Ratmalana.
Phone: 2636818, 2329426
e-mail: mcsons@sltnet.lk

*Product of*
*M.Manikavasagam*

ஏக விநியோகஸ்தர்கள்
பிரபா ரேடிங் கம்பனி
31, கபேஸ் லேன்,
கொழும்பு - 11
தொலைபேசி: 329426, 422750


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## எம் அன்பான வாடிக்கையாளர்களே

**ஆண்டு அறுபத்திரெண்டில் காலடி வைத்து உங்கள்
சேவைகளுக்காக பல விருதுகளை வென்றெடுத்து எம்மை
அங்கிகரிப்பட்ட உணவு தயாரிப்பு நிறுவனமாக
சிறக்க செய்தமைக்கு
மனம் மார்ந்த நன்றிகள்
என்றும் உங்களுக்கு!**

அண்ணா நிர்வாகம் மற்றும் ஊழியர்கள்

ISO 14001 GMP

ANNA INDUSTRY - 0212241565,0217200800
ANNA INTERNATIONAL(PTE)LTD - 0112436063,0112424877
Web: www.annacoffee.com
E.mail: annacoff@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்



## குளோபல் எக்ஸ்பிறஸ்




**வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை**

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.
Call 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்**
இல.10, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call 021 222 3536

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு
வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும்

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவைத் துறையில்**
**23 வருடங்களைக் கடந்து**
**வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற**

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்**

**நிறுவனங்களின் இணை நிறுவனம்**
**அருள் ஜுவல்லறி**



# அருள் ஜுவல்லறி


ARRUL JEWELRY

"அன்பான பந்தம் எல்லை இல்லா ஆனந்தம்"

*தவணை முறையில் பணத்தை*
*செலுத்தி தங்க நகைகளை*
*கொள்வனவு செய்யவும் வசதி*

916 Gold







*ஓடர் செய்யப்படும் தங்க நகைகளுக்கு செய்கூலி இல்லை*

இல.09, புதிய மாநகர சபை கட்டடத்தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 074 183 7707

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் மிகச்சிறந்த

1000

வங்கிகளுள்

11

ஆண்டுகள்

தொடர்ச்சியாகவுள்ள

1 வது இலங்கையின்

வங்கி

கொமர்ஷல் வங்கி, ஐக்கிய ராஜ்ஜியத்தின்
The Banker சஞ்சிகையினால் வெளியிடப்படும்
உலகின் மிகச்சிறந்த 1000 வங்கிகளின் பட்டியலில்
தொடர்ச்சியாக 11 ஆண்டுகள் இடம்பிடித்ததையிட்டு பெருமையடைகின்றது.
இது எமது மகத்தான வங்கிச் சேவைக்குக் கிடைத்த அங்கீகாரமாகும்.

இலங்கையின் அதிக விருதுகளை வென்றெடுத்த வங்கி


COMMERCIAL BANK

Fitch Rating AA- (lka) | +94 112 353 333 | www.combank.lk

உங்கள் நலனே எங்கள் நோக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லை குமரனின் அருட் காட்சியும் வள்ளி தெய்வானை
சமேதரராய் தேரினில் காட்சி தரும் அழகான காட்சியும்
மெய் சிலிர்க்க வைக்கிறது! முருகா!

SRI SIVARAM
TRADERS



No.189, Kathiresan street,
Colombo.
T.P: 0777560760

சிறி சிவராம்
ரேடர்ஸ்

இல.208, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே : 021 222 8629, 0777560760

என்றும் மங்காத புகழுடன் யாழ்ப்பாணத்தில் புதுமை
பொலிவுடன் இயங்கும் ஒரு மொத்த விற்பனை நிலையம்
கொழும்பில் இருந்து பல பொருட்களையும்
வரவழைத்து மலிவு விலையில்
விற்பனை செய்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nadarasa Kajanthan

# New Maithily Jewellers

Since 1978

DEALERS IN GENUINE ORNAMENTS



நடராசா கஜந்தன்

## நியூ மைதிலி ஜுவலர்ஸ்

மின்னும் பொன் நகை மிஞ்சும் புன்னகை

காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன் மின்னும் பொன்



No.38,40, Kasthuriyar Road, Jaffna. Tel: 021 221 78 78 | Fax: 021 221 78 77

E-mail: newmaithily40@gmail.com | newmaithily Jewellers | 021-2217878



Nadarasa Kajanthan

# Santhosh Jewellers

DEALERS IN GENUINE ORNAMENTS

நடராசா கஜந்தன்

## சந்தோஷ் ஜுவலர்ஸ்



021-2211177 | santhoshjewellers1188@gmail.com | santhoshjewellers | 021-2211188

இல. 99V,97A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். | No.99V,97A, POWERHOUSE ROAD, JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்
# 2021



## வேதாந்தப் பாட்டியார் - சின்னக்குட்டி அம்மையார்

வேலணையில் பிறந்த சின்னக்குட்டி அம்மையார் இல்லற வாழ்வில் இணைந்து இருவருடங்களில் நாயகனை இழந்து யாருக்கும் சுமையாக இருக்க விரும்பாமல் பிட்டு வாணிச்சியாக வாழ்ந்து அதில் வந்த வருமானம் கொண்டு அடியார்களுக்கு அமுதூட்டியும் தலயாத்திரைகள் செய்தும் பிற்காலத்தில் கந்தர்மடம் வேதாந்த மடத்தில் இருந்து சிவப்பணி புரிந்து தனது 99 வது வயதில் 15.04.1955 பெரிய வெள்ளி தினத்தன்று சிவப்பேறடைந்தார்.

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
## சைவசமய விவகாரக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org